# மான்குட்டி

ஜோதி மலர் 87.
முதற் பதிப்பு : 1956.

விலை ரூ. 1—8—0

The Yearling
Copyright 1938 by
Marjorie Kinnan Rawlings

Printed at Maruthy Press, 83, Peters Road, Royapettah, Madras-14.

# மான் குட்டி

நாவல்

மார்ஜோரி கின்னன் ராலிங்

தமிழில் தருபவர் :

காளிதாசன்

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி :: சென்னை—5.

# ஒரு வார்த்தை

தமிழிலே புதுமையான கதைகளைத் தர வேண்டும் என்ற முயற்சியிலே வெளிவரும் வரிசை நூல்களில் இதுவும் ஒன்று. சுய முயற்சியும் உழைப்பும் கொண்டு இயற்கையை நம்பி வாழ்ந்த ஒரு குடும்பத்தின் கதை. இக் கதையில் வரும் ஜோதி என்னும் சிறுவனை நாம் மறக்கவே முடியாது. வாழ்க்கையிலே குழந்தை பிராயம் ஒரு கனவாக இருந்தாலும் அந்தக் கனவைக் காண்பதிலே உள்ள இன்பம் வேறெதிலும் மனிதனுக்கு இருக்க முடியாது. அம்மாதிரி ஒரு குழந்தையுள்ளத்தின் இன்பக் கனவும் வாழ்க்கையுமே இக்கதை.

தன்னுடைய தேன் சிந்தும் கவிதைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமான கவி காளிதாசன் அவர்கள் இக்கதையைக் கவிதா ரசத்துடன் பிழிந்து தெளிந்த பால் போன்ற தேன்சுவை தமிழில் தந்துள்ளார். நீங்களே படித்துப் பருகி இன்புற வேண்டிய பசுந்தமிழ் தேன்பாகு இது.

**பதிப்பாசிரியர்.**

# மான் குட்டி

## 1

முன் மாலைப் பொழுது.

சின்ன வீடு, சிறிய சிமிணி, மெல்லிய புகைப் படலம், நீண்டு நெளிந்து வசந்த வானத்தை வரியிட்டு மறைகிறது.

சிறுவன் ஜோதியின் மனம் சிந்தனையில் ஆழ்கிறது.

அடுக்களையின் அடுப்பு அநேகமாய் அணைந்திருக்கும். அம்மா அப்போதுதான் பகலுணவுப் பாத்திரங்களை விளக்குவாள். அப்பால் அடுக்கி வைப்பாள். இன்று வெள்ளிக்கிழமை. வீடு பெருக்கி மெழுகுவாள் ; கொஞ்ச நேரத்திற்கு அவனை எதிர்பார்க்கமாட்டாள் ; எனவே தனிமையாக காடுகளைச் சுற்ற ஏற்ற சமயம் அதுதான்.

கணநேரம் ஜோதி தயங்கினான். மறுகணம் கதிரறுக்கும் வாள் அவன் தோளில் ஏறித் தொங்கி ஊஞ்சலாடுகிறது. வீட்டிலிருந்தே வனத்தின் எழிலைப் பார்க்க முடியும் ; ஆனால், முற்றி நிமிர்ந்து முதிர்ந்து சாய்ந்த தானியக் கதிர்ப் பரப்பு அக்காட்சியை மறைக்கிறது. முன்வாசல் அருகில்

ஒரு சீனப் பெர்ரி மரம் ; காட்டுத்தேன் சிட்டுகள் அதைக் கண்டுகொண்டன. கவ்வுகின்றன.பங்குனி மாத மஞ்சள் மல்லிகைகளை மறந்து வாசனை வீசும் செம்மாதரிப் புஷ்பங்களின் சிவந்த மென்மையான இதழ்களோடு குலாவுகின்றன.

அப்பால் மணி மணியான மலர்ப்பத்திகள், மகந்திக் கொத்துகள் ; அப்படியே பொன் சிட்டுகளையும், கருஞ் சிட்டுகளையும் தொடர்ந்து போனால் அவைகள் வாழும் நிமிளைத் தேனடைகள் நிரம்பிய மரமுழைவை நிச்சயமாய்க் காணலாம்.

எது முக்கியம் ? அறுவடையா ? தேனடையா ?— இதுதான் கேள்வி.

பனிக்காலத்துக் கொம்புத் தேனும், கருப்பஞ்சாறும், கனிக்களபங்களும் அநேகமாய்த் தீர்ந்துவிட்டன; ஆகவே அறுவடையை இரண்டொரு நாட்களுக்கு அப்புறம் கூட பார்த்துக் கொள்ளலாம் ; தேனடைதான் முக்கியமானது.

மந்தமான மாலைப் பொன்னொளி மதமதக்கிறது. தேன் சிட்டுகள் சீனப் பெர்ரி மலர்களைக் குடைவதுபோல் மாலைக்கதிரொளி அவன் மேனியைக் குடைகிறது. ஒவ்வொரு மயிர்க்கால் வழியாகவும் பாய்ந்து அவனை உன்மத்தமாக்குகிறது.

ஜோதி கதிர்ப்பரப்பைத் தாண்டிவிட்டான் ; தேவதாரு மரங்களினூடே வனத்தின் கிளைப் பாதைக்கு உடனே செல்லவேண்டும் ; அநேகமாய், அப்பாலுள்ள நீரூற்றின் அருகேதான் அந்தத் தேனடை மரம் இருக்க வேண்டும்.

கதிர் வயலைத் தாண்டியதும் வீடு கண்ணுக்கு மறைந்துவிட்டது. ஜோதி அறுவடைக் கம்பை வேலியில்

சாத்திவிட்டு, க்ராதியின் வரம்பில் கைகளை ஊன்றி வெளிப்புறம் தாண்டிக் குதிக்கிருன்,

ஜூலி என்னும் வேட்டை நாய் அவன் தந்தை பொன்னன் பத்தரோடு கிராமவில்லிக்குப் போயிருக்கிறது; மற்றுமுள்ள ரிப்பி, பெக்கி என்னும் இரு நாய்களும் அவனிடம் ஓடி வருகின்றன ; அவைகளைத் தட்டிக் கொடுத்துத் தாஜாப் பண்ணி வீட்டுக்கு அனுப்புகிருன்.

அவைகளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது. அவைகளால் யாதொரு பயனுமில்லை : ஆகாரம் போடும் நேரம் தவிர அவைகளுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

ஜூலி மனிதர்களிடம் அன்போடு அளவளாவிப் பழகும். ஆனல், அதன் அன்பெல்லாம் அவன் தந்தை பொன்னன் பத்தரிடம்தான்.

தனியாகவே, தனக்கென்றே, தன் தகப்பனைத் தொடரும் ஜூலி போல் தன்னையும் தொடர ஒரு நாய் இருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும் ! தனக்கு சொந்த மென்று சொல்லிக்கொள்ள அவனுக்குத்தான் எதுவுமே கிடையாதே.

இவ்வாறெல்லாம் யோசித்தவாறே அவன் மணற் பரப்பை அடைந்துவிட்டான். கிழக்கு நோக்கிச் செல்லு கிருன், இல்லை, ஓடுகிருன்.

வீட்டிலிருந்து நீரூற்றுக்கு இரண்டு மைல் இருக்கும், ஓடுவதில் சிரமம் தோன்றவில்லை ; ஓடிக்கொண்டே இருக்கலாம்போல் தோன்றுகிறது. கதிர் அறுக்கும்போது கால் வலிக்குமே, ஆனல், இப்போது கால்வலியே காணும்.

வெள்ளிவன மணல் விரிவு ! தாரைப் பூக்கள் தழைத் துள்ளன. பிச்சி மலர்கள் பிணைந்துள்ளன ; மின்பெர்ரி மலர்கள் மினுமினுக்கின்றன.

ஓட்டம் தளர்கிறது. பார்த்துப் பார்த்துப் பழகிய காட்சிகளே, எனினும், பார்க்கப் பார்க்கப் புதிது புதிதாகப் பரவச மூட்டுகிறது ; எனவே, மரம்மரமாக, புதர் புதராக, மலர் மலராகத் தங்கித் தங்கித் தயங்கித் தயங்கி மெதுவாய்ச் செல்கிறான்.

அதோ ! அந்த மாதரி மரத்தை அடைந்துவிட்டான். அதன் அடிக்கட்டையில் அவன் செதுக்கிய காட்டுப் பூனையின் கடுமுகம் அப்படியே இருக்கிறது ; கொஞ்சும் மலர்கள் கொத்துக் கொத்தாய் குலாவிக் குலுங்குகின்றன. அருகிலேயே ஒரு நீரூற்று இருக்கத்தான் வேண்டும்.

மண் மண்ணாகவும், மழை மழையாகவும்,யாவைக்கும் பொதுவாய் இருக்கும்போது, கிறுங்கிய கிளைகளையுடைய தேவதாரு மரங்கள் வெறித்த களறுகளுடைய வெளிறிய வெறு நிலத்தில் விளைவதேன் ? மெல்லிய, துல்லிய மாதரி மலர்கள் நீரோரங்களில் மட்டுமே பூப்பதேன் ? இக் கேள்வி ஆச்சரியக் குறியுடன் கூடிய ஒரு கேள்வியாகவே நின்றுவிட்டது.

அம் மணற் பாதை இருபது அடி ஆழத்திற்குக் கீழுள்ள ஒரு நீரூற்றிற்குச் சரிந்து செல்லுகிறது. வழி நெடுக மாதரி மரங்கள், பிசினி மலர்க் குஞ்சங்கள், வல்லிப்பத்திகள், சாம்பல் நிறச் சாமந்தங்கள். இவற்றின் குளிர்ந்த நிழலூடே அவன் நீரூற்றை அடைகிறான். அவன் மனம் குதூகலமாய்க் கொந்தளிக்கிறது.

கிணற்று நீர்போல் கிணுகிணுக்கும் தெளிந்த தெண்ணீர் ஊற்று மணலாழத்தில் எங்கிருந்தோ குமிழி யிட்டுக் கொப்பளிக்கிறது ; அதைச் சுற்றிலும் நீர்ச் சுழலொன்று வட்ட மிடுகின்றது. அதில் மணற்துண்டுகள் வேகும் அரிசி மணிகள்போல் மேலும் கீழுமாய் விளையாடு கின்றன.

அருகில், சற்று உயர்வான இடத்தில் இதன் தாயூற்றுத் தழைத்துள்ளது. வரி பிளந்து வாய்க்காலாகி வெண்சுண்ணச் சுதை மணலைப் பிளந்து, வேகமாய்ச் சரிந்து, பள்ளத்தில் பாய்ந்தோடி; சின்னஞ் சிறிய சிற்ருறுய் மாறி ஜாஜ் ஏரியில் கலக்கிறது.

ஜாஜ் ஏரி ஜாறு நதியின் ஒரு தேக்கம்; ஜாறு நதி வடபாலோடி சமுத்திரத்தில் சங்கமமாகிறது.

வாழ்வில் எத்தனையோ ஆரம்பங்கள் உள்ளன. எனினும், கடலோரம் சென்று, இக்கடலின் ஆரம்பத்தைக் காண்பதில் ஜோதிக்கு ரொம்ப ரொம்பப் பிரியம். ஏனெனில், இத் தனி இடத்தின் கடற்கரை அவனுக்கே சொந்தமானது இங்கு, அவனையும், வன விலங்குகளையும் பறவைகளையும் தவிர வேறொன்றும் வருவதில்லை—அப்படிதான் அவன் நினைப்பு.

ஓடிவந்த வேகத்தின் வீர்யம் குறையவில்லை; வன நிழல்களின் தண்மையான விரல்கள் அவனைத் தழுவுகின்றன. கால் சட்டையை மேற்புறமாய் மடித்து விட்டுக் கொள்ளுகிறான்; புழுதி படிந்த வெறுங் காலோடு நீரில் இறங்குகிறான். ஊற்று வாய்க்காலைத் தாண்டுகிறான்.

தென்னல் சிலு சிலுக்கிறது, பந்தரிடும் மர நிழல்களை ஒதுக்குகிறது; கதிரவனொளி அவன் முகத்திலும், மார்பிலுமாய் முடைகிறது. தோளில் வெய்யிலின் வெது வெதுப்பு, தாளில் தண்ணீரின் குதுகுதுப்பு, உள்ளத்தில் உன்மத்த மதமதப்பு—அவன் முன்னேறுகிறான்.

காற்று அடங்குகிறது; கதிரொளி மறைகிறது; ஊற்றின் அக்கரையில் ஜோதி கால் வைக்கிறான்.

தாழ்ந்த தாழைப்பனையின் மடலொன்று அவன் உடலைக் கீறுகிறது; தன் சட்டைப் பையிலுள்ள கத்தி அவன் நினைவுக்கு வருகிறது.

ஒரு தாழை மடல் நீராடி செய்ய அவனுக்கு ரொம்ப நாளாக ஆசை. அன்று வரையில் அவன் அதைச் செய்தது இல்லை ; உத்தாப்பாட்டியின் மகன் ஆலிவன்தான் செய்து வருவான்.

இன்று, தானே நீராடி செய்ய ஜோதி முற்பட்டான் ; அளவெண்ணித் தாழை மடல்களை அறுக்கலானுன்.

நீராடி சுழல்கிறது ; அங்கு நீரின் ஆழம் சில அங்குலமே. ஆனுல் வேகம் மிகுந்தது ; தாழைமடற் துடுப்புகள் மேலும் கீழுமாய்த் தாவித்தாவித் தண்ணீரில் சிதறின. ஜோதி ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான் ; மணற் பரப்பில் சாய்ந்தான் ; நீராடிச் சுழலில் நினைவைப் பறிகொடுத்தான் ; மேலே, கீழே கீழே மேலே சரிந்து சரிந்து, பாய்ந்து பாய்ந்து நீர் விசிறித் துள்ளித் துளித்து வட்டாடிய அதன் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டியது.

கதிரவன் மின்கதிர்கள் ஒளி பின்னிய வலைபோல் அவன் உடலைப் போர்த்தன. நீராடிச் சுழலிலும், மணலிலும், மாலை ஒளியிலும் மயங்கிச் சொக்கிய அவன் கண்ணிமைகள் சொருகித் துடித்தன. தாழை மடல்கள் முழுகி முழுகி எழுவதுபோல் மூடித் மூடித் திறந்தன. அவை துளித்த நீர் முத்துக்கள் வால்மீன்களென பாய்ந்து பாய்ந்து பளிச்சிட்டு மறைந்தன. ஒளியால் வெறுத்த நீலவானம் அவன் மேல் கவிழ்ந்தது; அவன் உறங்கினுன்.

உறங்கி விழித்தான் ; கதிரவனைக் காணும், ஒளியுமில்லை, நிழலுமில்லை, உலகமெங்கும் ஒரே பழுப்புக் கருக்கல். நீர்வீழ்ச்சி பின்னிய நுண்ணிய நுரைத்துளிகள் தூங்கிய மெல்லிய பனிப்படலத்தில் படுத்திருப்பதுபோல ஓர் உணர்ச்சி. அவ்வுணர்ச்சி அவன் உடலிற் கிளு கிளுத்துக் கிச்சுட்டியது. ஒரே சமயத்தில் குளுகுளுப்பும்

வெதுவெதுப்புமாய்க் குலாவியது. அவன் புரண்டு படுக்கிருன், மழையுற்ற இளம் வனப் பயிரென மகிழ்ந்தான்; முகம் நனைந்திருந்தது; சட்டை ஈரமாயிருந்தது; மழை பெய்து ஓய்ந்திருக்கவேண்டும்.

மணற்கூண்டுத் துயிலை விட்டு எழுந்து சிறிது தயங்கி நின்ருன். அவன் தூங்கும்போது மானென்று அங்கு வந்து போயிருக்க வேண்டும்.

அது பெண்மான்தான்; இல்லையேல் அதன் அடிச் சுவடுகள் அத்துணை ஆழ்ந்தும் கூர்மையாகவும் இருக்குமா. சுவடுகள் ஊற்றின் கீழ்க்கரை வரையில் செல்கின்றன. அம்மான் அவனைக் காணவில்லை, அநாயாச மாகச் சென்று ஊற்று நீரை அருந்தியிருக்கிறது.

திரும்பிப் போகும்போது அவனைப் பார்த்திருக்கிறது. அதோ சுவடுகளின் கலைந்த களேபரம், பயத்திஞல் சுற்றிச் சுழன்று ஓடி இருக்கிறது.

அணில்கள் அங்குமிங்குமாய் மணலிற் கிறுக்கியுள்ளன — அவைகளுக்குத்தான் பயமென்பதே கிடையாதே; காட்டுமரை ஒன்றின் கூரிய கை நகங்கள் மணலில் ஆழமாய்ப் பதிந்துள்ளன. எப்போது பதிந்தன? அதை அவன் அப்பாவிஞல்தான் கூறமுடியும். மான் வந்து பயந்து மறைந்ததைத்தான் ஜோதியால் நிச்சயிக்க முடிகிறது. அப்புறம் அவன் தன் நீராடியைப் பார்க்கிருன். அது அழகாகவும், சாசுவதமாய் அங்கேயே இருப்பது போலவும் ஒரேமாதிரியாய் உருண்டது. தாழைத் துடுப்புகள் மெல்லியவை யென்ருலும் தைரியத்தோடு தண்ணீரைச் சிதறின. சற்று சிணுங்கிய மழைத் தூரலின் சாரற் துளிகள் அதன்மேல் தளதளத்தன.

ஜோதி வானத்தைப் பார்க்கிருன்; அவன் எவ்வளவு நேரம் தூங்கியிருப்பானே—தெரியாது; கால உணர்ச்சியைக் கருக்கல் மறைத்தது.

ஊற்றின் மேல்க் கரைக்குத் தாவினான். அங்கு சொரிப்பொர்ரிகள் தங்கு தடையற்றுச் சடைந்து கிடந்தன.

ஒரு கணம், போவதா? இருப்பதா? என்ற தயக்கம்; மென்மையாய்த் துவங்கிய சிறு தூரல் மென்மையாய், மெதுவாய்த் தானாகவே அடங்கியது. தென்மேல் காற்று தென்னலாய்ச் சிலிர்க்கிறது; அலை யலைத்து நுரை கொழிக்கும் நுண் சிறகணைத்த பிரிமணைப் பிணையல்களென வெண் மேகங்கள் ஒன்றாக ஊடாடி உறவாடி உருண்டோடின, அவற்றூடு கதிரவன் வெளிப்பட்டான்; கீழ்த்திசையில் இந்திரதனுசொன்று வானை வளைத்து வண்ணப் பாலமிட்டது. அதன் அழ கிலும், வர்ணக் கலவையிலும் சொக்கிய ஜோதியின் உள்ளம் விரிந்து வெடித்து விடும்போல் தோன்றியது.

பூமியின் மேல் லேசான பசிய போர்வை, காற்றுக் கூடக் கண்ணுக்குத் தெரிவதுபோல் தோன்றுகிறது. மழையில் குளித்த மாலைப் பொன்னொளி முலாம் பூசுகிறது, மரஞ், செடி, புதர், தழை, புல்—யாவிலும் மழைத்துளி முத்துக்கள் மினுமினுக்கின்றன.

எகிறிக் குதிக்கும் இள மரக்கிளை போல் இன்பக் குதிப்பொன்று அவன் இதயத்தில் பொங்குகிறது. அவன் கைகளைத் தூக்கி நீர் நாரையின் நீண்ட சிறகுகளெனத் தோள் நேராய் அகல விரிக்கிறான்; வட்டாடிச் சுழல் கிறான். சுழலச் சுழல வட்டாடும் வேகம் அதிகரிக்கிறது. ஆடி ஆடி அசைந்து போய் மெல்லிய மென்மையான மிலாறுகள் பின்னிய மணற்பரப்பில் சாய்கிறான். நீல மயமான சித்திரை வானமும், வெண் பஞ்சுப் பொதி போன்ற மேகச் சுருள்களும் அவன்மேல் புரண்டோடின.

மண்ணும் வானும், அவனும் மரமும்—எல்லாம் சேர்ந்து சுழன்று சுழன்று எங்கோ பறப்பது போல் தோன்றுகிறது.

மயக்கம் தீர்ந்தது. சுழற்சி நின்றது. அவன் எழுந்தான். மனப்பாரம் அகன்றது. மகிழ்ச்சி பொங்கியது; அறிவில் தெளிவேற்பட்டது. உலக நினைப்பு உண்டாகியது.

திரும்பினான், தன் வீட்டிற்கு விரைந்தோடுகிறான். மழை ஈரம் மண்டிய தேவதாரு மரங்கள் வாசனை வீசுகின்றன. லேசான மணல் மழையால் இறுகி அவன் பாதத்தடியில் மெத்தென்றிருக்கிறது. ஓடுவதில் சிரமம் தோன்றவில்லை.

அநேகமாய்ச் சூரியன் அஸ்தமிக்கும் தருணம். ஜோதி வனமுழையை விட்டு வெறு வெளியை அடைந்து விட்டான். அவன் தந்தை திரும்பியிருக்க மாட்டார். தன் தந்தை இல்லாத சமயத்தில் தான் இப்படித் தனியாக வனசஞ்சாரத்திற்கு வந்தது தவறு என்று அவனுக்கு இப்போதுதான் ஞாநோதயம் ஏற்படுகிறது.

அவன் அம்மா தான் விறகு கொண்டுவருவதை எதிர் பார்ப்பாள்; அவனைக் கோபிப்பாள்; அப்பா கூடத் தலையசைத்து முகங்கோணி, 'அடே ......?' இதற்குள் ஜூலியின் ஊளை முனகல் கேட்கிறது. அவன் தந்தை திரும்பி விட்டார் என்பது நிச்சயம்.

பொன்னையன்பத்தர் விறகுச் சுமையைக் கட்டிக் கொண்டிருக்கிறார். அவர் தன் கல்யாணத்திற்கு வாங்கிய கவின் சட்டையை அணிந்திருக்கிறார். கோவிலுக்கும், வியாபாரத்திற்கும் மட்டுமே அவர் அதை அணிவது வழக்கம். இன்று அவன் தந்தை, அந்த ஒரே ஒரு உயர்ந்த சட்டையோடு அவன் வேலையான விறகு தறிப்பதைக் கண்ட ஜோதி அவரிடம் அவசரமாக ஓடுகிறான்.

"அப்பா! நானே,....,?"

வேலைக்கு விரையும் விழைவு தன் குற்றத்தை மறைக்கலாமென்பது அவன் நினைப்பு.

" உன்னைத் தேடித் தேடி அநேகமாய்... ?" என்கிறார் அவன் தந்தை.

" நான் வன ஊற்றுக்குச் சென்றிருந்தேன்."

" இந்த ஒளி மயமான இன்பநாளில் எங்காவது சுற்றித்திரிய வேண்டுமென்று நினைப்பது சகஜந்தான்; ஆனால் நீ எதற்காக......?"

ஜோதிக்கு ஞாபகமில்லை, சிறிது தயங்கினான். பின்,

" ஆ !—ஞாபகம் வந்துவிட்டது, தேன் சிட்டுகளைத் தொடர்ந்து தேன்மரத்தைக் கண்டுபிடிக்கலாமென்று...!"

" கண்டு பிடித்தாயா......?"

ஜோதியின் கண்கள் வெறு வெளியை நோக்கின.

" இல்லை, மறந்தே போய் விட்டேன்." வயலெலி வேட்டையில் சிக்கிய மரநாய் போல் அவன் ஆட்டு விழி விழிக்கிறான்; அவன் தந்தையின் கண் கடைகள் துள்ளுகின்றன.

" ஜோதி ! உண்மையைச் சொல். காட்டில் இஷ்டப்படி திரியத் தேன் மரம் ஒரு சாக்குத்தானே ?"

ஜோதி பல்லிளித்தான்.

" ஆம், தேன்சிட்டுகளைக்கண்ட பிறகுதான் அவ்வெண்ணம் எனக்குத் தோன்றியது."

" அப்படித்தான் நானும் நினைத்தேன். எனக்கு நானே கூறிக்கொண்டேன். ஜோதி தனியாயிருக்கிறான். அறுவடைக்கு அதிக நேரம் ஆகாது. இந்த மாதிரியான இளவசந்தத்தின் இன்பமான மாலைக் காலத்தில் நான் சிறுவனாயிருந்தால் என்ன செய்வேன் ? எங்காவது ஓடி ஆடித்தான் திரிவேன் " எனப் பொன்னன் பத்தர் கூறினார்.

ஜோதியின் உள்ளத்தில் ஓர் இன்பம் நிரம்பியது ; அது மாலைக் கதிரவனின் பொன்னொளி இன்பமல்ல. அவன் ஆமென்று தலையசைத்தான்.

" அப்படித்தான் நானும் நினைத்தேன் " என்று குதூகலித்தான்.

" ஆனால், உன் அம்மா," பொன்னன் தலை வீட்டுப் புறம் திரும்பியது, "அவனுக்கு வெறுமனே திரிவது பிடிக்காது. பொதுவாய், அங்கு மிங்குமாய்த் திரிய ஆண்களுக்கிருக்கும் ஆசை பெண்களுக்கு அர்த்தமாவதில்லை. நான் புறப்பட்ட போதே அவள் ஜோதி எங்கே என்று கேட்டாள், நான் உன்னைக் காட்டிக் கொடுக்கவில்லை, இங்குதான் எங்காவது இருப்பான் என்று கூறினேன்...?"

பத்தர் கண் சிமிட்டினார், ஜோதியும் பதிலுக்குக் கண்ணடித்தான்.

" வாழ்வில் ஆண்கள் ஒருவருக் கொருவர் உதவியாயிருக்கவேண்டும். இந்தா, இந்த விறகுச் சுமையைக் கொண்டுபோ ; அவள் கோபம் தணிய இதுவே தூண்டுகோலாகும்."

விறகுச் சுமையுடன் ஜோதி வீட்டிற்கு விரைந்தான். அவன் தாய் அடுப்பு வேலையில் ஈடுபட்டிருந்தாள். சமையலின் வாசனையில் அவன் பசி அதிகரித்தது.

" ஆகா ! மசியலின் வாசனை !"—ஜோதிக்கு நாவூறுகிறது.

" ரொம்ப ஜோர்தான் "—அவன் அம்மாவின் குரலில் அவசரம் தொனிக்கிறது ; " சரி, சரி, அப்பாவைக் கூப்பிடு, சாப்பாடு தயார் "—என்றாள்.

அவசர அவசரமாய் விறகைக் கொட்டிலில் திணித்துவிட்டு ஜோதி வெளியே ஓடுகிறான்,

அவன் அப்பா பால் கறக்கிறார். 'அப்பா! அப்பா! அம்மா கூப்பிடுகிறாள், சாப்பாடு தயார்,' கணம் தயங்கி, 'ஸீஸர் நாய்க்குத் தீனி வைக்கட்டுமா?'

"வெச்சாச்சு. இந்தா, இந்தப்பாலை அன்று மாதிரி சிந்தாமல் சிதறாமல் ஜாக்கிரதையாகக் கொண்டுபோ." ஜோதி பாலுடன் உள்ளே போகிறான், பத்தர் பின் தொடர்கிறார்.

அன்று இருவருக்கும் நல்ல பசி; சாப்பாடும் ரொம்ப ருசி; இருவரும் ரசித்துச் சாப்பிடுகின்றனர்.

"யாராவது அந்த மெழுகு விளக்கை ஏற்றிக் கொடுங்கள். இந்தப் பாத்திரங்களை விளக்கி வைத்து விட்டு நான் சிறிது இளைப்பாறுகிறேன்"—என்கிறாள் அவன் தாய் பொன்னி.

ஜோதி விளக்கேற்றித் தருகிறான்; அத்துடன் அவளது பருத்த உருவம் பின்புறம் சென்று மறைகிறது.

அன்று பௌர்ணமி, முழு நிலவின் உதயத்தைத் தந்தையும் மகனுமாய்ச் சாளரத்தூடு பார்த்து மகிழ் கின்றனர்.

"ஜோதி! உனக்கு நினைவிருக்கிறதா?"

"என்னப்பா?"

"சித்திரைமாதப் பௌர்ணமியில் என்ன செய்ய வேண்டுமென்று......?"

"நினைப்பில்லையே!"

என்னமோ இந்த வசந்த காலம் வந்தால் அவனுக்கு எல்லாமே மறந்து போகிறது; கேட்டதை யெல்லாம் நினைவில் வைத்துக்கொள்ள அவன் அப்பாவைப்போல் பெரியவனானால்தான் முடியும் என்று எண்ணுகிறான்.

" நான் சொன்னதை மறந்து விட்டாயா ? சித்திரை நிலவில்தான் காட்டுக் கரடி நீருண்ண ஊற்றுக்கு வரும்."

" ஓ ! அந்தப் பெருங்கால் கருங் கரடிதானே ?" ஜோதியின் குரலில் ஆர்வம் ததும்புகிறது. ' அப்பா ! அதை வேட்டையாடலாம் என்றாயே, எப்போது வேட்டைக்குப் போவது.'

" அறுவடை முடியட்டும்."

" அப்பா ! எந்தப் பக்கத்திலிருந்து எப்படி அதைத் தாக்குவது ?"

" ஓடையோரமே போய் அது நீர் குடித்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்."

" அப்பா ! இன்று மானொன்று அங்கு வந்து நீர் குடித்தது—நான் தூங்கினபோது." ஜோதியின் குரலில் களிப்புத் துள்ளுகிறது. ' இன்று நான் ஒரு பனை மடல் நீராடி செய்தேன். அது ரொம்ப ஜோராகச் சுற்றியது."

பொன்னியின் பாத்திரம் விளக்கும் சப்தம் அடங்குகிறது.

" அட ! குண்டுணிப் பயலே "— பொன்னியின் குரலில் கோபமில்லை. நீ வெளியே போனது எனக்கு இப்போது தானே தெரிகிறது. மழையில் நனைந்த களி மண்ணைப்போல்......?"

ஜோதி சிரிக்கிறான்.

" அம்மா ! அம்மா ' ஒன்னெ ஏமாத்திட்டேனே ! ஏமாத்திட்டேனே ! ஏமாத்திட்டேனே."

" ஏமாத்திட்டையா ? நான் உன்னை நினைத்துக் கொண்டே உனக்காக உருளைக் கிழங்கு மசியல்...?'

உண்மையில் அவளுக்குக் கோபமில்லை ; கோபிப்பது போல் பாசாங்கு செய்கிறாள். பாசாங்கு வெளிப்பட்டு விடுகிறது. கோணிய வாயில் குறும்பு வரியிடுகிறது.

"அம்மா சிரிக்கிருள், அம்மா சிரிக்கிருள். அம்மா என்னிடம் கோபிக்கவில்லை!"

இவ்வாறு கூறிக்கொண்டே அவர் பின்ஞல் ஓடு கிருன்; முந்தாணியைப் பிடித்து இழுக்கிருன். அவள் அவன் காதைத் திருகுகிருள், செல்லமாக, பட்டுப்போலப் பட்டும் படாமலும். அன்று மாலை ஊற்றுக்கரையில் ஏற்பட்ட குதூகல வெறி அவனுக்கு இப்போதும் தோன்றுகிறது. அப்போது மணற் பரப்பில் சுழன்றது போலவே இப்போதும் தன்னை மறந்து சுற்றிச் சுற்றிச் சுழலுகிருன்.

"அடடே! பாத்திரங்கள் உடைந்து விடப் போகிறது!"

'போனால் போகிறது; என் தலை கிறுங்குகிறது."

"அட! பைத்தியமே!"

வாஸ்தவந்தான்! அவனுக்குச் சித்திரை மாதத்தின் பித்து; வஸந்தத்தின் வெறி! ஒவ்வொரு சனிக்கிழமையும் லிங்கப்பரதர் எப்படிக் குடித்துவிட்டு கூத்தாடுவாரோ அப்படி ஜோதியும் குதித்துக் குதித்துக் கும்மாளம் போடுகிருன்.

ஆம். அவனும் ஒரு குடியன்தான். இளவெய்யிலும், இளந்தென்றலும், இனிய மழையின் தூரலின் சிலிர்ப்பும் கலந்த இளவேனில் மதுவைக் குடித்து மயங்கி மதர்த்து விட்டான். நீராடியின் சுழற்சியில் சிதறிய நுண் துளிகளை உண்டு உன்மத்த மிகுந்து விட்டான். அங்கு அவன் உறங்கியதும், மான் வந்து போனதும், அவன் தந்தை அவன் குறும்புத்தனத்தை மறைத்ததும், அதி ருசி யான அந்த உருளைக்கிழங்கு மசியலும், அவன் அம்மாவின் புன்னகையும், செல்லமான காதுத் திருகலும்—எல்லாம்

அவன் மனக்கிளர்ச்சியைத் தூண்டிக் கிறுகிறுக்க வைத்தன.

மெழுகு விளக்கின் மின்னெளி அவன் மேனியிற் தைக்கிறது; அம்மின்னெளியைச் சுற்றி வெண்ணிலவின் விண்ணெளி.

இந்த இன்பக் காச்சலில் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. வயது வந்த பிறகு வசந்த காலத்தில் எல்லாம் அவனுக்கு இதே மத மதப்பு உண்டாகும்.

குளிர் மதியை நோக்கி ஒரு குருவி கூவுகிறது.

அவன் தூங்கினன்.

## 2

பொதுவாகப் பௌர்ணமியன்று பொன்னன் பத்தருக்குத் தூக்கம் வராது; இன்றும் அப்படித்தான். பக்கத்தில் அவர் மனைவியின் பருத்த உடல் உறக்கத்தில் ஓய்ந்து கிடக்கிறது. ஆனல், அவர் மனமோ அங்குமிங்குமாய் ஊசலாடுகிறது.

பட்டப் பகல் போலப் பால் நிலாப் பொழியும்போது மக்கள் ஏன் பண்ணை வெளிகளில் வேலை செய்வதில்லை என்று அவர் அடிக்கடி ஆச்சரியப் படுவதுண்டு. மெதுவாய் எழுந்து, வெளியிற் சென்று ஒரு கருங்காலி மரத்தை விறகுக்காக வெட்டினல்—அல்லது ஜோதி முடிக்காது விட்ட அறுவடையை இப்போது முடித்தால்—என்றெல்லாம் அவர் சிந்தை எண்ணமிட்டு ஏங்கியது.

"இன்று நான் ஜோதியைக் கண்டித்திருக்க வேண்டும்."

இப்படி எண்ணியதும் அவர் மனம் தன் இளம் பருவ நாட்களோடு ஊடாடியது. அந்தக் காலத்தில் தான் வேலையை மறந்து வீணுய்த் திரிந்திருந்தால் அவர் தந்தை அவரை அடியடியென்று அடித்திருப்பார், பிரம்பு பிய்ந்திருக்கும். அத்துடன் பட்டினியாக ஊற்றுக்குச் சென்று நீராடியைச் சிதைத்து வரச் சொல்லியிருப்பார். 'ஆனுல், சிறுபிள்ளைத் தனமெல்லாம் சில நாளைக்குத் தானே ?' பாவம், சில்லறை விஷமங்கள் செய்யும் சிறு பிள்ளையாய் அவர் என்றும் இருந்ததில்லை. அவர் தகப்பனுர் பெரும் வைதீகம்...பழங்காலக் கடவுளரைக் காட்டிலும் கண்டிப்பானவர்.

எனினும் வேதப் புத்தகங்களிலிருந்து அவரது வாழ்க்கை ஆரம்பமாகவில்லை. வாலிச நகருக்கருகிலிருந்த சிறிய பண்ணையைக்கொண்டு அவர் ஒரு பெரிய குடும்பத்தைப் பரிபாலித்து வந்தார். நடக்கத் தெரிந்தது முதல் அவர் தன் தந்தையின்பின் மற்றவர்களோடு சென்று விதை விதைத்து வேலை செய்துள்ளார்;' எலும்புகளெல்லாம் ஒரே வலி எடுக்கும். வளரும் கைவிரல்கள் மரத்துப் போகும்; இத்தனைக்கும் சாப்பாட்டு திட்டமோ குறைவு. கொக்கிக் புழுக்கள் அதிகம். பெரியவரான பிறகும் பத்தர் ஒரு பையனைப் போலத்தான் இருந்தார். அவரது பாதங்கள் சிறியவை, தோள்கள் சூம்பியவை, அவரது இடுப்பும் விலா எலும்புகளும் இடையீடின்றி ஒட்டியுலர்ந்து ஒன்ருய் உறவாடின.

லிங்கப்பரதர் குடும்பத்தில் எல்லோருமே ஆஜானுபாகுவாய் வஞ்சனையின்றி வளர்ந்தவர்கள். அவர்கள் முன் வானுற வளர்ந்த மரங்களிடையே நாணி நிற்கும் நாணற் புல்லைப்போல் நம் பத்தர்தோன்றினுர். அவர்களும் இவரது இளைத்த மேனியைக் கண்டு ஏளனஞ் செய்வர்.

பாய்மரப்படகுகள், பரிசல்கள், தோணிகள், சுமை தாங்கிப் படல்கள், கட்டுமரங்கள், சிறு பிரயாணக் கப்பல்கள் முதலியவற்றுடன் ஆற்றோரம் வசிப்பவர் களில் சிலர் பத்தரை தைரியவானென்றனர், மற்றும் பலர், கல்யாண மானதும் தன் இளமனைவியோடு கரடிகளும், ஓநாய்களும் சிறுத்தைப் புலிகளும் திரியும் காட்டிலே தன்னந் தனியாய் வசிக்கச் சென்ற இவரைப் பித்த ரென்றும் பேசிக்கொண்டனர்.

லிங்கப்பரதர் குடும்பம் பெரிது; அவர்கள் முரடர்கள்; அடங்காப் பிடாரிகள், அவர்கள் அடவியில் வசிப்பது தான் சரி; ஆனால் பொன்னன் பத்தருக்கு அவ்வாறு செய்யவேண்டிய அவசியமில்லை — மற்றவர்களைப்போல் வாழ்வதற்குத் தடையென்ன ?

தடையொன்றுமில்லைதான்—ஆனால், பண்ணை வயல் களும் நிலபுலங்களும் நிறைந்த குடியானவர் வசிக்கும் நாட்டுப்புறங்களிலும், நகரங்களிலும் நெருங்கி வாழும் மக்களது எண்ணங்களும், செயல்களும், சொத்துச் சுகங் களும் ஒன்றோடொன்று முரண்பட்டு உரைசின. தனி மனிதனது சுதந்திரத்தில் குறுக்கிட்டன. ஆபத்துக்காலங் களில் குடியானவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்வது வாஸ்தவமாயினும் பொறாமையும், அவ நம்பிக்கையும், அதி ஜாக்கிரதையான கண்ணோட்டமும், சில்லறைத் தகராறுகளும் அவர்களிடையே அதிகம் என்பதையும் மறுக்க முடியாது. தந்தையின் கடுமையான கண்டிப்பின் கீழ் வளர்ந்த பொன்னன் பத்தர் கண்ட உலகம் ஓரளவு நேர்மையற்றது. உண்மையற்றது, கடுமை மிக்கது. எனவே, கலக்கம் தருவது.

வாழ்க்கை வனத்தின் முட்புதர்கள் அவரை ரொம் பவும் சோதித்துவிட்டன போலும். கட்டற்றுப் பரந்து

கிடந்த காட்டின் இனிமையும் தனிமையும் அவரை வரவேற்றன. ஆனால், அங்கு வாழ்வது கொஞ்சம் சிரமமான காரியந்தான் ; முக்கியமாகக் கடைகண்ணிக்குப் போகவும் விளைபொருள்களை விற்கவும், வேண்டும் பொருள்களை வாங்கவும் பல மைல்கள் நடக்க வேண்டும். எனினும் ஒரு வகையில் அது அவரது சொந்த சொத்து. கரடியும் காட்டுப் பூனையும், ஓநாயும் சிறுத்தைப் புலியும் கடுமையும் கொடுமையும் மிகுந்தவையே ; ஆனால், அவசியமற்ற, அர்த்தமற்ற, புரியாத மனிதர்களது கொடுமைகளின் முன் சுபாவமான விலங்குகளின் கொடுமை அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

முப்பதாவது வயதில், தன்னைப்போல் இரண்டத்தனை பருமனுள்ள பொன்னியை அவர் மணந்தார். அடுத்த நாளே தம்பதி சமேதராய்ச் சில தட்டு முட்டு சாமான்களுடன் ஒரு இரட்டை மாட்டு வண்டியில் இவ்வனத்திற்கு வந்து சேர்ந்தார் ; தன் சொந்தக் கைகளால் இச்சிறு வீட்டைக் கட்டிக் குடியேறினார்.

இவ்விடத்தை அவர் லிங்கப்பரதரிடம் வாங்கினார். அக்குடும்பம் நான்கு மைல்களுக்கப்பால் வசித்தது. எங்கும் பரந்து, விரிந்து, நுணங்கி, நொடிந்த வன வெளி ; இதில் மிக ஜாக்கிரதையாகவே தன் இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்தார். அது கடல்போல் விரிந்த கடுங்காட்டிடையே ஊசி முனை இலைகளுடன் நிமிர்ந்து உயர்ந்த தேவதாரு மரங்கள் செறிந்த தீவுபோல் தோன்றியது.

அத்தீவின் ஒரே ஒரு குறை தண்ணீரின்மை. நீர் மட்டம் மிக மிகத் தாழ்ந்திருந்ததால் கிணறுகளுக்கு ரொம்பவும் கிராக்கி. செங்கல்லும் சுண்ணும்பும் அருமையாக இருந்தபோது அந்த நூறு ஏகர் காட்டுக்கு அப்பாலிருந்த தொடுமணல் ஊற்றுக் கேணியிலிருந்தே தண்ணீர்

கொண்டு வருவர். அந்தச் சுடுமணல் சுண்ணப்பிரதேசத் திலேயே அத்தகைய ஊற்றுக்கேணிகள் சகஜமானவை. பொன்னன்பத்தர் நிலத்தில் உள்ள ஊற்றில் ஜலம் பொங்கி வழிவதில்லை. அடியில் தேங்கிக் கிடந்தது. நிலப்பரப்பின் மேலேயே சில நீரூற்றுக்கள் வெடித்து இழையாறுகளாய்ப் பள்ளங்களில் தோய்ந்து கிடக்கும்.

லிங்கப்பரதர் வேறு பயனற்ற நிலங்களைப் பொன்னன் பத்தரிடம் விற்கப் பார்த்தார்; ஆனால், பொன்னனே பிடிவாதமாய் இதையே வேண்டி விலைக்குக் கொண்டார்.

அன்று லிங்கர் சொன்ன ஏளனச் சொற்களெல்லாம் இன்று அவர் ஞாபகத்திற்கு வருகிறது. தன் மனைவி துயிலெழா வண்ணம் படுக்கையில் மெதுவாய்த் திரும்பிப் படுத்தார்.

ஆண்களும் பெண்களுமாய்க் குழந்தைகள் ஆடி யோடி தேவதாரு மரங்களின் நிழலில் விளையாடவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்; திட்டம் போட்டார். அந்த வீடும், சுற்றியுள்ள நிலமும் வளரும் ஒரு பெருங் குடும்பத்திற்காகவே செப்பனிடப்பட்டது, குடும்பமும் வந்தது. பல குழந்தைகள் பிறந்தனர். ஆனால் பிறந்த வேகத்திலேயே பிணியுற்று இறந்தன. அவரும் பாவம் ஒவ்வொரு குழந்தையாய் அந்தக் கரும்பலா மரத்தின் கீழ் புதைத்து விட்டார்.

அந்த அகன்ற காட்டின் அகாதமான தனிமை பயங்கரமாக மாறியது; பொன்னியும் அநேகமாய்க் கருவுயிர்க்கும் பருவத்தைத் தாண்டிவிட்டாள். அப்போது தான் ஜோதி பிறந்தான், வளர்ந்தான்.

ஜோதிக்கு இரண்டு வயது, பொன்னன் சண்டையில் சேர்ந்தார்; மனைவியையும் குழந்தையையும் ஒட்டாரப் பாட்டியிடம் விட்டுச் சில மாதங்களுக்குள் திரும்பி

விடுவதாகத்தான் அவர் எண்ணினர் ; ஆனல், நாலு வருடங்களுக்கு அப்புறந்தான் அவர் திரும்ப முடிந்தது ; வயதான சின்னங்கள் அவர் மேனியில் தோன்றின.

தன் மனைவி, குழந்தையுடன் தன் வீட்டில் மறுபடியும் குடியேறினர் ; புண்பட்ட அவர் மனத்திற்கு அவ்விடத்தின் எழிலும், தனிமையும், அமைதியும் இன்பம் ஊட்டின.

ஜோதியிடம் பொன்னிக்கு ஒரு விதமான அசிரத்தை என்றுதான் கூறவேண்டும் ; அவனுக்கு முந்திய குழந்தைகளுடனேயே அவளது அன்பும் ஆர்வமும் அநேகமாய்த் தீர்ந்துவிட்டன போலும்.

ஆனல், பத்தரின் உயிரெல்லாம் அவர் மகனிடந்தான். அவனுக்கு அவர் வெறுஞ் சொத்துமட்டும் கொடுக்கவில்லை, ஆண்மையும் அறமும் அறிவும் கொடுத்தார். பறவைகளும், விலங்குகளும், மரங்களும் மலர்களும், காற்றும் மழையும், கதிரும், மதியும், ஒரே வார்த்தையில் வானமும் வையமும்—அவற்றின் அதிசயங்களையெல்லாம் பார்க்கப் பார்க்க ஜோதி பரவசமுற்றான் ; அவனது விழிகள் வியப்பால் விரிந்தன ; அவரைப்போல் அவனும் செயலற்று அவற்றையே பார்த்துக்கொண்டிருப்பான்.

எனவே, சித்திரை மாதத்தின் சிங்கார நளினத்தில் சொக்கித் தன் மகன் சித்தம் போனபோக்குச் சிவன்போக்காய்த் திரிந்ததைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. அதன் காரணம் அவருக்குத் தெரியும். அத்தகைய உணர்ச்சிகள் கொஞ்ச காலத்தில் மறைந்துவிடும் என்பதையும் அவர் உணர்வார்.

'அவன் ஆடிப்பாடி விளையாடட்டும் ; நீர்க்காற்றடிகள் செய்து சந்தோஷிக்கட்டும். இதெல்லாம் இன்னம் கொஞ்ச நாட்களுக்குத்தானே' — என்று பொன்னன் பத்தர் தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

# 3

ஜோதி கஷ்டத்தோடு கண்களைத் திறக்கிறான்; கிழக்குச் சாளரத்தின் மூலம் கதிரவன் பொன்னொளி கிணுகிணுக்கிறது.

ஒரு கணம், படுக்கையின் பரவசத்திற்கும், பாய்ந்து வரும் பரவசத்திற்கும் இடையில் அவன் மனம் ஊசலாடு கிறது. உறக்கம் நீங்கிவிட்டது. மறு கணம் படுக்கைக் கூட்டிலிருந்து வெளிப்படுகிறான்; உடையணிகிறான்.

தெற்கில், எங்கிருந்தோ ஜூலியின் மணிக் குரல் வியப் புற்ற வெறியோடு குலைக்கிறது; அதைத் தொடர்ந்து அவனது தந்தையின் குரலும் கேட்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. அவ்வளவுதான்.

உடனே வீட்டை விட்டு வெளிப்படுகிறான்; அவன் தாய் கூப்பிடுகிறாள். அதைக் கவனியாமல் அவசரமாய்க் கதவைத் தாண்டுகிறான்.

அவளும் நாயின் குரலைக் கேட்டிருக்க வேண்டும். அவனைக் கூவியவாறே அவசரமாக வாசலுக்கு வருகிறாள்.

“அப்பனும் மகனுமாய் அடவி சுத்தாதீர்கள், ஆகாரம் தயார். என்னால் காத்திருக்க முடியாது” — என்று பொன்னி உத்தரவு போடுகிறாள்.

நாயின் குரல் ஓய்ந்துவிட்டது, அப்பாவின் குரலும் கேட்கவில்லை. அவற்றின் காரணமான ஆரவாரம் தீர்ந்து போய் விட்டதோ? என்று அவனது ஆவலும் ஆர்வமும் அசதி காட்டின. ஒருவேளை கடுவிலங்கு ஒன்று வந்து கடுக்கா கொடுத்திருக்குமோ? தந்தையும் நாயும் தான் வருமுன்பே அதைத் தொடர்ந்து போயிருப்பார்களோ என்று பயந்தவனாய்க் குரல்கள் வந்த திக்கை நோக்கி களர் என்றும் புதரென்றும் பாராமல் கரும் பலாமரங்

களூடே கனவேகமாய் ஓடுகிறான். அவன் தந்தையின் குரல் வெகு சமீபத்திலேயே கேட்கிறது.

“ஜோதி! ஏனிந்த அவசரம். நான் உனக்காகத் தானே காத்திருக்கிறேன்.” அவன் தந்தை அங்குதான் நிற்கிறார், அவர் காலடியில் இறந்துபோன கரும்பன்றி பெக்கியின் சவம் கண்ணருவியாய்க் கிடக்கிறது.

“நான் வந்ததை அது கவனித்திருக்க வேண்டும். நன்றாகப் பார், நான் சொல்லுவது இன்னதென்று உனக்குப் புரிகிறதா?”

பன்றியின் சவம் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவன் தந்தையின் பார்வை அதன்மேல் இல்லை, அப்பால் எங்கோ பதிந்திருந்தது. ஜூலியின் கூர்மையான மூக்கும் அந்தத் திக்கையே மோப்பமிட்டது. ஜோதி சில அடிகள் முன்னேறிச் சென்று மணலைச் சோதிக்கிறான்; அந்தச் சுவடுகளைக் கண்டதும் அவன் ரத்தம் பீறிடுகிறது. சந்தேகமில்லாமல் அவை ஒரு ராக்ஷஸக் காட்டுக் கரடியின் காலடிகளே; கையகலம் கனமாகப் பதிந்துள்ளன. முன்னங்கால் ஒன்றில் கட்டைவிரலைக் காணோம்.

“காட்டுக்கரடி!”—என்று ஜோதி கத்தினான்.

“ஆம்!” பத்தர் தலையசைத்தார், “உன் ஞாபக சக்தியைக் கண்டு நான் பெருமை யடைகிறேன்.”

இருவருமாய் அச்சுவடுகளின் போக்கு வரவை ஆராய்ந்தனர்.

“இதைத்தான் எதிரியின் முறையிலேயே அதைத் தாக்குவது என்பது”—என்றார் பொன்னன்பத்தர்.

“நாய்களொன்றும் குலைக்கவில்லையே, நான் தூங்கி விட்டேன், இல்லையென்றால்......?” என்றான் ஜோதி.

“நாய்கள் குலைக்கவில்லை; காரணம், காற்று கரடியின் பங்கிலிருந்து உறுமியிருக்கிறது. நிழலைப்போல்

யாருமறியாமல் வந்து தன் நீசத்தொழிலைப் புரிந்து விட்டு விடியுமுன்பே அக்கரடி மாயமாய் மறைந்திருக்கிறது" என்று பத்தர் விவரித்தார்.

ஜோதியின் உடலில் ரத்தம்உறைவதுபோல் தோன்றியது. நிழல்—சாயை—ஆம், அக்கரடியின் நிழல், நகரும் கூடாரம்போல் ஒருவரும் அறியாமல் வந்து உறங்கும் பன்றியை ஒரே அடியில் கொன்றிருக்கிறது, ஆகா! எத்துணைப் பரிதாபம்.

"கரடி தன் ஆகாரத்திற்காகப் பன்றியைக் கொல்லவில்லை; ஏனெனில் அது இப்பன்றி இறைச்சியை அதிகம் தின்னவில்லை. கடும்பனிப் படுக்கையிலிருந்து வெளிப்படும் கரடியின் வயிறு சுருங்கியிருக்கும். இதனால்தான் எனக்குக் கரடிகளைக் கண்டாலே பிடிப்பதில்லை. ஆகாரத்திற்காக மிருகத்தை அடித்துத் தின்னும் விலங்குகளுக்கும் நமக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆனால் காரணமில்லாமல் இம்சைக்காகவே இம்சை செய்வது கரடியானாலும் சரி, மனிதனானாலும் சரி எனக்குக் கட்டோடு பிடிக்காது. கரடிகளின் முகத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா? அவற்றில் கருணையோ, பச்சாதாபமோ மருந்துக்குக்கூடக் கிடையாது" என்றார் பத்தர்.

இறந்த பன்றிக்காக ஜோதியின் இதயம் உருகியது. ஆனால், அதைக்காட்டிலும் அதைக் கொன்ற, அஞ்சு வருஷங்களாய் அடங்காப்பிடாரியாய் திரியும் அந்தக் காட்டுக் கரடியின் மேலுள்ள வெறுப்பு அதிகமாயிருந்தது.

இருவருமாய் அப்பன்றியை வீட்டுக்கு இழுத்துச் சென்றனர். நாய் ஜாலிக்கு இது அர்த்தமாகவில்லை. அது உடனுக்குடனே கரடி வேட்டையில் ஈடுபட எண்ணியது.

வாசலில் பொன்னி காத்திருக்கிறாள். "எத்தனை வெசெ ஒங்களைக் கூப்பிடுவது, அடடா! அது என்ன? ஐயோ! என் பன்றி! என் பன்றி!"

அவள் வானைக்கிக் கைகூப்பி வணங்கினாள். அதற்குள் அப்பனும் மகனுமாய் அப்பன்றியைப் புறவடைப் பக்கம் கொண்டு சென்றனர்; அங்கலாய்த்தவாறே அவளும் பின்தொடர்ந்தாள்.

"என்னதான் நடந்தது; நம் பன்றி ஏன் இப்படிக் கீறு கீறாய்க் கிழிக்கப்பட்டுள்ளது. என்னிடம் சொல்லக் கூடாதா."

"அம்மா! காட்டுக்கரடி கடுங்காலன் நம் பன்றியைக் கொன்றுவிட்டது. சந்தேகமில்லாமல் அவைகள் அதன் அடிச்சுவடுகளே"—என்றான் ஜோதி.

எல்லோரும் உள்ளே சென்றனர். ஜோதி சமையலறைக்குள் போனான். அவன் அம்மா உடனே போய் கைகால் கழுவிக் கொண்டு வரச் சொன்னாள்.

காலை ஆகாரம்.

"எப்படியோ, கொஞ்ச காலத்திற்கு இறைச்சிக்குப் பஞ்சமில்லை"—என்றார் பத்தர்.

பொன்னி அவர் பக்கம் திரும்பி "பஞ்சமில்லையா? பனிக் காலத்திற்கு என்ன செய்வது?"

"லிங்கப்பரதரிடம் தான் கடன் வாங்கவேண்டும்" என்றார் பத்தர்.

"அந்த அயோக்கியர்களுக்குக் கடமைப்பட்டிருப்பதா?" மறுபடியும் அவள் அங்கலாய்க்கலானாள்; "அந்தக் கரடி மட்டும் என் கையிலகப்பட்டால்......?"

"அந்தக் கரடியைப் பார்த்தால் அதனிடம் சொல்லுகிறேன்" என்று பத்தர் கிண்டல் பண்ணினார்.

ஜோதி இடி இடியென்று சிரித்தான்.

" ஊம் ! என்னைக் கேலி செய்வதுதானே உங்களுக்கு வேலை."

" இல்லை அம்மா." ஜோதி அவளைத் தட்டிக் கொடுத்தான், " நீயும் கரடியும் கைகலந்தால்......"

" உன் அம்மாதான் ஜயிப்பாள் " என்றார் பத்தர்.

## 4

காலை ஆகாரம் முடிந்தது.

" இன்று நமக்கு ரொம்ப வேலை இருக்கிறது " என்றார் பத்தர்.

ஜோதியின் முகம் இருண்டது. அறுவடையா......?

" இன்று அநேகமாய் அந்தக் கரடி அகப்படலாம் " எனப் பத்தர் தொடர்ந்தார்.

ஜோதியின் முகம் ஒளி கொள்ளுகிறது.

" என் வேட்டைத் துப்பாக்கியும், வெடிமருந்துக் குழையையும்......?"

" இதோ " என்று ஜோதி அவற்றை எடுத்துவர ஓடுகிறான்.

" அவன் ஓடுவதைப் பாருங்கள். அறுவடை என்றால் நத்தையைப்போல் நகருபவன் வேட்டை என்றதும் மானைப்போல் துள்ளுகிறானே " என்று வியந்தாள் பொன்னி.

உடனே அவளும் சமையலறைக்குள் சென்று கட்டுணவு கட்டிப் பத்தரின் பைக்குள் சேமித்தாள், பின் வெளிப்பட்டு......

" ராச்சாப்பாட்டுக்கு வந்து விடுவீர்களல்லவா ?" என்ருள்.

" எங்களுக்காகக் காக்கவேண்டாம் " என்று பத்தர் பதிலளித்தார்.

வேட்டைத் துப்பாக்கியைக் கண்டதும் ஜூலி உவகையோடு உறுமியது. ரிப்பி ரிவ்வென்று ஜூலியிடம் பாய்ந்து வருகிறது பெக்கி என்னும் குட்டி நாய். விஷயம் விளங்காமல் வாலாட்டிக் குழைகிறது. பத்தர் பரிவுடன் தன் நாய்களைத் தட்டிக் கொடுக்கிருர்.

"இன்று சாயந்திரம் வரையில்தான் உங்கள் சந்தோஷ மெல்லாம் " என்று அவைகளைப் பார்த்துக் கூறிஞர்.

தென்பால் கரும் பலாக்களூடே கரடியைத் தேடிச் சென்றனர். மழையால் நனைந்த மணலில் அதன் காலடிகள் மிக மிகத் தெளிவாயிருந்தன. வேட்டை நாய் ஜூலி உறுதியுடன் பாய்ந்து பாய்ந்து ஓடியது. ரிப்பி ஜூலியை தொடர்ந்து அது மோப்பமிட்டபோது தானும் மோப்ப மிட்டு, தயங்கி நின்றபோது தானும் தயங்கியவாறே சென்றது. பெக்கியென்னும் நாய்க்குட்டி அப்புறமும் இப்புறமுமாய் துள்ளித் துள்ளிக் கடைசியில் ஒரு அணிலின் பின் ஓடலாயிற்று. ஜோதி ஷீக்கடித்து அதைக் கூப்பிட்டான்.

" அது போகட்டும், தனியாயிருப்பது தெரிந்ததும் தாஞக நம்மிடம் ஓடி வந்துவிடும் " என்ருர் பத்தர்.

ஜூலி மெல்லிய குரலில் ஊளையிட்டவாறே பின்ஞல் நோக்கியது.

" ஜூலி பாதை மாற்றுகிறது ; அநேகமாய் அது நாணற் குட்டைக்குத்தான் போகும். வா, நாம் குறுக்கு வழியாய்ப் போய் அதை ஆச்சரியத்திலாழ்த்துவோம் " ஏன்ருர் பத்தர்,

இப்போதுதான் தன் தந்தை வேட்டையில் வெற்றி பெறும் ரகசியம் ஜோதிக்கு ஒருவாறு விளங்கியது. லிங்கப் பரதர் குடும்பத்தினர் இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் கூச்சல் போட்டுக் கும்மாளமிட்டு, வனஞ் செவிடு படும்படி நாய்களைக் குரைக்கவிட்டு கலாட்டா செய்வர். கரடி ஜாக்கிரதையோடு மறைந்து கொள்ளும், அல்லது ஓடி விடும். அவன் தந்தையோ அமைதியிற் கலங்காதவர். அவர்கள் ஒரு விலங்கை வேட்டையாடினால் அதற்குள் இவர் பத்து விலங்குகளை வேட்டையாடி வெற்றியும் பெறுவார். இந்த வகையில் அவர் புகழ் வாய்ந்தவர்.

"அப்பா! விலங்குகளின் நடவடிக்கைகளைப் பற்றி உங்களுக்கு......" என்று ஜோதி தன் தந்தையைப் பாராட்டலானான்.

"குழந்தாய்! கொஞ்ச நாளில் நீயும் அவற்றை நன்கு தெரிந்து கொள்வாய். காட்டு விலங்குகள் மனிதர்களைக் காட்டிலும் வலிமை மிகுந்தவை, வேகமும் மிகுந்தவை. கரடிக் கில்லாத மனிதனுடைய சிறப்பென்ன? அதுதான் அறிவு. கரடியை ஓட்டத்தினால் மனிதன் வெல்ல முடியாது, கருத்தினால் வெல்ல முடியும்"—என்று பத்தர் உபதேசிக்கிறார்.

தேவதாரு மரங்கள் திக்காலுக் கொன்றாய்ச் சிதறின; அவர்கள் விழுதுகள் தொங்கூஞ்சலாடும் மேட்டு நிலத்திற்கு வந்து விட்டனர். கருங்காலிகளும், ஈட்டித் தாழைகளும் நெருங்கி நிறைந்துள்ளன, தரையில் கடும் பூனைக்கண் காட்டு ரோஜாக் கொடிகள் வலை பின்னியிருந்தன.

இப்போது அந்த மேட்டுப் பாங்கான நிலத்தையும் கடந்துவிட்டனர். எங்கும் ஒரே கடுநாணற் புல்லின் காடு. அவை ஜலத்தில் முழங்காலளவு வளர்ந்திருந்தன,

மிக மிக நெருக்கமாயிருந்ததால் அவை ஊசி முனையிட்ட ஒரே கம்பளம்போல் தோன்றியது.

வேட்டை நாய் ஜூலி நாணற் தருப்பையைப் பிளந்து கொண்டு குட்டைக்கு நடுவே பாய்ந்தது; நம்பிக்கை யோடு துழாவியது.

"கரடி தீப்புற்களைக் கடித்திருக்கிறது" என்று பத்தர் கிழிந்துள்ள நாணல் நுனிகளையும், கரடியின் பற்குறிகளையும் காட்டினார். சில புற்கள் அடியோடு அறுக்கப்பட்டுள்ளன.

"நாணற் தருப்பைதான் கரடிகளின் வசந்த கால வலிமை மருந்து. பனி முழைவிலிருந்து வெளிப்பட்டதும் அவைகள் அவற்றையே முதல் முதலாய் ருசி பார்க்கும்" பழுப்பேறிய ஒரு புல் முனையைப் பத்தர் ஆராய்ந்து பார்க்கிறார். "நேற்றும் அது இங்கு வந்திருக்க வேண்டும். அதனாலேயே நம் பன்றியைக் கொஞ்சம் ருசி பார்த் திருக்கிறது."

ஜூலியும் சிறிது தயங்குகிறது. மோப்பம் தரையி லில்லை. அடிச்சுவடுகளிலில்லை; கரடியின் கம்பளி உடல் நாணற் புற்களில் உறைந்த இடங்களிலிருக்கிறது. ஒரு நாணற் புதரில் தலை புதைத்து நாய் மோப்பமிடுகிறது; பின் தலையைத் தூக்குகிறது; கரடி போன திக்கை நிர்ண யிக்கிறது, தென்பால் ஊக்க மிகுந்ததுவாய் ஓடுகிறது.

"கரடி இங்கு ஆகாரம் செய்திருக்கிறது; நாய் அது போன திக்கைக் கண்டுபிடித்துவிட்டது" என்றவாறே பத்தர் நாயைத் தன் பார்வையிலிருந்து விடாமல், ஒரு குன்றனைய மேட்டின்மேல் ஏறுகிறார்.

"எல்லாம் சரி, கரடியைக் கண்டுபிடி" என்று ஜூலிக்கு உத்தரவிடுகிறார்.

இதுவரையில் நடந்த கரடித் தேட்டத்தை வேட்டை யென்று கூற முடியாது: ஏதோ விளையாட்டுபோல் அவகாசமாக சும்மா சுற்றி திரிதலும் இன்பமானதுதானே.

இப்போது கருந்தழை முழைவுகள் அவர்கள் தலைக்கு மேல் கவிந்துள்ளன. நிறைந்துள்ள மௌனத்தைத் தம் நெடிய சிறகுகளால் கலக்கிப் பறக்கின்றன சோரிப் பறவைகள். கருந்தரை மென்மையுற்றது; இருபுறமும் புதர்களிலும், களர்களிலும் அசைவும் ஆரவாரமும் தோன்றின.

திடீரென்று தரை தாழ்ந்தது: புதர்கள் குறைந்தன; சதுப்புச் சகதியாய்ச் சளி நிரம்பியது; பத்தர் ஓடுகிருர்.

"அதோ அந்தப் பாறை! அதற்குத்தான் அது போகிறது" என்று பத்தர் கத்திஞர்.

சகதியெங்கும் சலசலப்பு, தருப்பைகள் முறிந்து முறிந்து முடங்கின. கரும் புயலைப்போல் கரடி தங்கு தடைகளையெல்லாம் தவிடுபொடியாக்கிக் கொண்டு பாறைக்குப் பாய்கிறது. நாய்கள் குறைக்கின்றன, உறுமு கின்றன, ஓலமிடுகின்றன.

ஜோதியின் இதயம் பொங்கிப் பொருமுகிறது; அதன் துடிப்பு அவன் காதிலே கர்ஜிக்கிறது. ஒரு மூங்கில் நாளம் அவன் காலைத் தடுக்கிறது: அவன் கீழே விழு கிருன், மறுகணம் எழுகிருன்; அவன்முன் அவன் தந்தை யின் குறுங்கால்கள் துடுப்புகள்போல் தாவிச் செல் கின்றன; நாய்கள் தடுக்குமுன் கரடி அந்தப் பாறையை அடைந்துவிடும்.

பாறைக்கு முன் வெட்ட வெளியான ஒரு பரப்பு. தெளிவற்ற ஒரு கருப்புருவம் அவ்வெளியூடு பாய்வதை ஜோதி பார்க்கிருன்.

பத்தர் நிற்கிறார், தன் துப்பாக்கியைத் தூக்குகிறார். பழுப்பேறிய ஒரு குண்டு கரடியின் கடுந் தலையைத் தாக்குகிறது.

ஜூலி கரடியை அணுகிவிட்டது; அதன்மேல் திடீரென்று பாய்கிறது, பின் வாங்குகிறது; பின் வாங்கிய வாறே உடனே பாய்கிறது. ரிப்பி அதன் பக்கத்தில் பாய்கிறது; கரடி திரும்பிப் பார்க்கிறது. ஜூலி அதன் பக்க வாட்டில் பாய்ந்து பற்றுகிறது. பத்தர் துப்பாக்கியை உபயோகிக்கத் தயங்குகிறார்; நாய்களை உத்தேசித்து.

கரடி ஓய்ந்து போனதுபோல் பாசாங்கு செய்கிறது, திகைப்புற்றதுபோல் முன்னும் பின்னுமாய்த் தியங்குகிறது. நாய்களும் ஒரு கணம் பின்வாங்குகின்றன.

கரடியைச் சுட இது நல்ல தருணம்; பத்தர் தன் துப்பாக்கியைத் தோளில் தாங்குகிறார்; கரடியின் கன்னத்திற்குக் குறி வைத்துக் கொக்கியை இழுக்கிறார். குண்டு வெடிக்கவில்லை, வெறும் சப்தம் மட்டுமே கேட்கிறது. மறுபடியும் மருந்தைத் திணித்துக் கொக்கியைத் தட்டுகிறார். அவர் முகம் வியர்த்து விறுவிறுத்து விட்டது. துப்பாக்கி வெடிக்கவில்லை.

அதே கணம் ஒரு கரும் புயல் கனன்றது; கடு வேகத்தோடு நாய்களின்மேல் பாய்ந்தது; வெள்ளைக் கொம்பும், வளைந்த நகங்களும் அக்கரடியின் கருமேனியின் பளிச்சிடும் மின்னல்களென விரைந்தன. உறுமி, ஓலமிட்டு, விறுக்கி வெறிகொண்டு சுற்றிச் சுற்றி அட்டகாசம் செய்தது. நாய்களுக்கும் வேகத்தில் குறைவில்லை. ஜூலி அதன் பின்பக்கம் தாக்கியது; ரிப்பியோ கரடியின் கழுத்தைப் பற்றிக் கடித்தது.

பயங்கரமானதோர் பரவசத்தில் ஜோதி திக்பிரமையுற்று நின்றான். அவன் தந்தை மண்டியிட்டவாறு

துப்பாக்கியைச் சரிபண்ணி வெடி தீர்க்கக் குறி பார்க்கிறார்.

ஜூலி கரடியின்'வலப்பக்கத்தை வலிந்து கடித்தது; கரடி திரும்பியது; ஜூலியின் பக்கமல்ல. இடப்பக்கந் தாக்கிய ரிப்பியை விரட்ட.

பத்தர் வெடி தீர்க்கத் துப்பாக்கியின் கொக்கியை இழுத்தார், 'ஸிஸ்ஸ்'ஸென்று சப்தத்தோடு வெடியும் வெடித்தது; பத்தர் பின்புறம் சாய்ந்தார்; துப்பாக்கியின் குண்டு பின்புறம் பாய்ந்துவிட்டது.

ஜோதி தன் தந்தையிடம் ஓடினான்; அதற்குள் பத்தர் எழுந்துவிட்டார்; அவர் முகத்தின் வலப்பகுதி கரித்துவிட்டது.

அதே சமயம் கரடி தன் வளைந்த முன் கால்களால் ஜூலியைத் தன் மார்பில் அமுக்கி நொறுக்கியது, ஜூலி க்ரீச் சென்று ஊளையிடுகிறது. ரிப்பி கரடியின் முதுகைக் கவ்விக் கடிக்கிறது.

" கரடி ஜூலியைக் கொல்லுகிறது " என்று ஜோதி கத்துகிறான்.

பத்தர் நம்பகமிழந்தவராய்க் கரடியிடம் ஓடினார்; துப்பாக்கிக் குழலால் அதன் விலாவெலும்புகளிற் குத்தினார். இப்போதுகூட சகிக்க முடியாத தன் நோயையும் கவனியாமல் ஜூலி கரடியின் கழுத்தை விடாப் பிடியாகக் கவ்விக்கொண்டு கடித்தது. கரடி வலி பொறுக்க முடியாமல் உறுமிக்கொண்டே பாறைச் சரிவிற் பாய்ந்து குட்டைச் சகதியை யடைந்தது.

நாய்கள் தங்கள் பிடிகளை விடவில்லை, கரடி சிற்றூற்று நீரில் வேகமாய் நீந்துகிறது, கரடியின் கொம்பேறி மூக்கும், ஜூலியின் தலையும் நீருக்குமேல் தெரிந்தன.

கரடி அக்கரையை அடைந்துவிட்டது; ஜூலியின் பிடி தளர்ந்தது; அது தரையில் அசைவற்று விழுந்தது.

கரடி அருகிலுள்ள நெருக்கமான புதருக்குள் பாய்ந்தது; ஒரு கணம் ரிப்பி அதனோடு மல்லாடியது, மறுகணம் அதுவும் பூமியில் மல்லாந்தது.

வனச்செறிவூடு தொலைவு வரையில் தோன்றிய சலசலப்புச் சத்தம் ஓய்ந்தது.

"ஜூலீ! ஜூலீ! ரிப்பீ! ரிப்பீ!" பொன்னன் பத்தர் நாய்களைக் கூப்பிட்டார்.

ரிப்பி அசைவற்றுத் தன் வாலைமட்டும் ஆட்டியது. பத்தர் தன் வேட்டை கொம்பைக் எடுத்து ஊதினார். ஜூலியின் தலை ஒருமுறை நிமிர்ந்து மறுகணம் சாய்வதை ஜோதி கண்டான்.

"நான் நாயை எடுத்துவரச் செல்கிறேன்." பத்தர் தன் காலணியைக் கழற்றி விட்டு ஆற்று நீரில் இறங்கினார்; இடையில் நீரோட்ட வேகம் மிகமிக அதிகமாயிருந்தது: வெறுங்கட்டைபோல் வெள்ளம் அவரைத் தன்பக்கம் இழுத்தது; அவரும் தன்னாலியன்றவரையில் வெள்ளத்தை எதிர்த்து விரைந்தார், எனினும் கொஞ்ச தூரத்துக்கப்பால் தான் அவரால் கரையேற முடிந்தது.

பத்தர் கரைக்குத் தள்ளாடுவதையும் நீரைத்துடைத்து விட்டு நாய்களிடம் செல்வதையும் ஜோதி பார்த்தான். அவர் குனிந்து தன் நாயைச் சோதித்தார், அன்புடனும், அக்கரையுடனும் அதை கையில் அணைத்து எடுத்துக் கொண்டார். வெள்ளத்தின் மேற்புறஞ் சென்று நீரில் நீந்தலானார். வெள்ள ஓட்டம் அவரை ஜோதிக்கு நேராகக் கொண்டு விட்டது. ரிப்பி அவர் பின்னால் நீந்திவந்து கரை ஏறி தன் உடலினின்றும் நீரைக் குலுக்கிவிட்டு நின்றது.

மெதுவாய், அதி ஜாக்கிரதையாய் பத்தர் ஜூலியைத் தரையில் படுக்கவைத்தார்.

" பாவம், பலமான காயங்கள்."

தன் மேற்சட்டையைத் தொங்கூஞ்சலாக்கி அதில் நாயைக் கொண்டு தன் தோளில் தாங்கினர்.

" ஊம் ! இனி வேறொரு துப்பாக்கி வாங்க வேண்டியதுதான்"—என்று பத்தர் தனக்குத் தானே அங்கலாத்தார்.

துப்பாக்கியின் வெடிமருந்துக் கிளறி அவர் கன்னத்தில் புண்ணைக் கிளைத்துவிட்டது.

" துப்பாக்கியில் என்னப்பா தப்பு " என்றான் ஜோதி.

" எல்லாமே தப்புத்தான், முதலில் கொக்கி சரியாயில்லை யென்று நினைத்தேன், பின்னல் வெடித்தது, முக்கியமான விசைச் சூத்திரமே பழுதடைந்து விட்டதென்று தெரிந்து கொண்டேன், சரி, சரி ! வீட்டுக்குத் திரும்புவோம், நீ இந்த பயனற்ற துப்பாக்கியை எடுத்துக்கொள்" என்று விரைந்தார் பத்தர்.

ஊர்வலம் வடக்கும் மேற்குமாய் வளைந்து சென்றது.

" அந்தக் கரடியைக் கொல்லும் வரையில் எனக்குத் தூக்கம் வராது.—வேண்டியதெல்லாம் ஒரு புதுத்துப்பாக்கியும் கொஞ்சம் அவகாசமுமே"—என்று தனக்குத்தானே கூறிக் கொண்டார் பத்தர்.

ஜோதிக்கு அந்த அசைவற்ற நாய் மூட்டையைக் காணச் சகிக்கவில்லை. தவிர, தந்தையின் முதுகிலும் ரத்தம் வரியிடுகிறது.

" அப்பா ! நான் முன்னல் போகிறேன் "

பத்தர் பையன்பக்கம் திரும்பினர் ; " எனக்காகக் கவலைப் படாதே " என்றார்.

" இல்லையப்பா, நான் முன்னால் போய் உனக்காக...?"

" சரி, சரி ! போ ; ஆனால் முதலில் அந்தப் பிரயாணப் பையிலிருந்து கொஞ்சம் ஆகாரம் செய்து கொள் : அது உனக்குத் தெம்பளிக்கும்."

ஜோதி பையிலிருந்த ரொட்டித் துண்டுகளைத் தானும் உண்டு, தன் தந்தைக்கும் கொடுத்தான்.

" ஓய்வு தீர உணவைப்போல் வேறு மருந்தில்லை."

பக்கத்துப் புதரிலிருந்து ஒரு நாய்க்குட்டியின் கீச்சுக் குரல் ஊளையிட்டது ; அது பெக்கியின் குரல், அதைக் கண்டதும் ஜோதிக்குக் கோபம்தான் வந்தது ; காலால் ஓர் உதை கொடுத்தான்.

"உதைக்காதே!" பத்தர் பையனைத் தடுத்தார், " பெக்கி வந்து சேருமென்று எனக்குத் தெரியும். பாவம் ! அது என்ன செய்யும் ; நாய்களுள் வேட்டை நாய்களும் உண்டு, வேட்டை தெரியாத வீண் நாய்களும் உண்டு."

ஊர்வலம் வீட்டை அடைந்தது, வெளிமுற்றத்தில் தையல் வேலை செய்து கொண்டிருந்த பொன்னி, 'என்ன ? கரடி கிடைக்கவில்லை, நாயும் இறந்து விட்டதா ?" என்றாள்.

" இல்லை, கொஞ்சம் வென்னீரும், துணியும், ஊசி நூலும் கொண்டுவா ?"

உடனே அவள் உதவிசெய்ய விரைந்தாள், ஆபத்துச் சமயத்தில் அவன் அம்மாவின் அமோக உருவம் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறதென்பது ஜோதிக்குப் பெரிய ஆச்சரியமே.

பத்தர் மெதுவாய் நாயைக் கீழே விட்டார் ; அது ஒருமுறை மெதுவாய் உசும்பியது.

ஜோதி அதன் தலையைத் தடவிக் கொடுத்தான். அது பல்லைக் காட்டியது.

அப்போது அங்கு வந்த பொன்னி, " நீ போய் வென்னீர் கொண்டுவா "—என்று அவனுக்கு உத்தரவு போட்டாள். அவன் கெட்டிலை எடுத்து வரச்சென்றான்.

பத்தர் நாயின் புண்களை மெதுவாகக் கழுவி, வெட்டுக் குழிகளைத் தைத்தார்.

ஒரு விலாவெலும்பு முறிந்துவிட்டது: நாய் உயிருடனிருந்தால் அது கொஞ்ச நாளில் சேர்ந்து சொஸ்தமாய்விடும்.

## 5

மறு நாள். காலை ஆகாரத்தின்போது பத்தர், " ஒரு புதுத் துப்பாக்கி வாங்கியாக வேண்டும்; இல்லையேல் கோர்ட்டேற வேண்டியதுதான் "—என்றார்.

வேட்டை நாய் ஜூலிக்கு உடம்பு பரவாயில்லை; புண்கள் வீங்கவில்லை; அதிகமான ரத்தப்போக்கால் அது அசதியுற்றிருந்தது; பேசாமல் தூங்க விரும்பியது; பத்தர் கொடுத்த பாலைச் சிறிது பருகியதும் படுத்துவிட்டது.

" புதுத் துப்பாக்கிக்கு எங்கு போவது; வரி கொடுக்கவே பணத்தைக் காணோமே "—என்று அங்கலாய்த்தாள் பொன்னி.

" பண மேது? பண்டமாற்றுத்தான்."

" பண்டந்தானேது?"—என்று சலித்துக் கொண்டாள் பொன்னி.

" ஏன்! நம் நாய்க்குட்டி பெக்கியை லிங்கப்பரதர்...?"

“ அவர்களிடம் போனால் வெறுங்கையோடு திரும்ப வேண்டியதுதான்.”

“ என்னவோ, நானும் ஜோதியும் அங்குதான் போகிறோம்.”

“ சரி சரி ” — பொன்னியின் குரலில் கோபம் தொனித்தது “ போங்கள் ! அவனையுங் கூட்டிக் கொண்டு போங்கள், தண்ணீர், விறகு ஒன்று மில்லாமல் என்னைத் தனியாய் விட்டுவிட்டுப் போங்கள் !”

“ தண்ணீரும், விறகும் இல்லாமல் உன்னை எப்பொழுதாவது தனியாய் விட்டுச் சென்றிருக்கிறேனா ?”—என்றார் பத்தர்.

ஜோதிக்கு கவலையாயிருந்தது, சாப்பாட்டைக் கூட விட்டுவிட்டு லிங்கப்பரதர் வீட்டுக்குச் செல்ல அவன் ஆசைப் பட்டான்.

“ ஜோதி பலருடன் பழகவேண்டாமா ?”

“ பழகுவதற்கு இடத்தைத் தேடிக் கண்டு பிடித்தீர்களே ! அவர்களோடு பழகினால் ஜோதியின் கள்ளமற்ற மனம் காரிருளினும் கருத்தக் கடுமனமாகத்தான் மாறும்.”

“ அவர்களைக் கண்டு அவர்களைப் போல் இருக்கக் கூடாதென்று அறிந்து கொள்ளலாமே...என்ன ஆனாலும் சரி, நாங்கள் அங்குதான் போகிறோம்.”

பத்தர் சாப்பாட்டை விட்டு எழுந்தார். “ நான் தண்ணீர் கொண்டுவருகிறேன் ” என்றார்.

ஜோதியிடம் திரும்பினார் “ நீ விறகு வெட்டிக் கொண்டுவா ”—என உத்தரவிட்டார்.

விறகு வெட்ட ஜோதி விரைந்தான். எவ்வளவு சீக்கிரம் வெட்டி முடிக்கிறானோ அவ்வளவு சீக்கிரத்தில்

லிங்கர் வீட்டுக்குச் செல்லலாமல்லவா ? தன் நண்பன் பத்மனைக் காணலாம். எனவே வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்தான்.

வீட்டுக்குத் திரும்பினான், விறகுக் கட்டையை அதனிடத்தில் வைத்தான். நீரூற்றுக்குச் சென்ற அவன் தந்தை இன்னும் திரும்பவில்லை. எனவே ஓடிப்போய்க் குதிரை ஸீஸருக்கு ஜேணம் கட்டினான், பத்தர் இரண்டு வாளிகளில் தண்ணீரோடு வருவதைப் பார்த்தான் ; அவற்றை இறக்கிவைக்க அவரிடம் ஓடினான்.

"அப்பா குதிரைக்கு ஜேணம் கட்டிவிட்டேன்."

"அதுதான் வனமே கதிர் வீசுகிறது. சரி சரி, என் வியாபாரச் சட்டையைக் கொண்டுவா. ரிப்பியைக் கட்டிப்போடு, என் துப்பாக்கியை எடுத்துக் கொள்" என்றார் பத்தர்.

அந்தச் ஜேணம் லிங்கரிடம் வாங்கியதே—அவர்களது தடித்த குதிரைகளுக்கு அது கொஞ்சம் சிறிதாயிருந்தது. தந்தையும் மகனும் அதில் சௌகரியமாக ஏறி உட்கார்ந்தனர்.

ஜோதி முன்னால் இருந்தான் ; "இன்னும் கொஞ்சம் வயதானால் நீ பின்னால்தான் உட்கார வேண்டும். இப்போதே இவ்வளவு உயரம் வளர்ந்து விட்டாயே"—என்று செல்லமாகக் கேலி செய்து விட்டு, நாய்க் குட்டி பெக்கியைப் பின் தொடர்ந்து வரும்படி உத்தரவிட்டார்.

பெக்கி பின் தொடர்ந்தது ; ஒருமுறை திரும்பி வீட்டைப் பார்த்தது.

"நன்றாகப் பார்த்துக்கொள், இதுவே உன் கடைசிப் பார்வை."—என்று உளங்கரைந்தார் பத்தர்.

நன்கு இளைப்பாறிய அத்தக் குதிரை ஒரே சீரான திராட்டுடன் ஓடியது. அதன் அகன்ற முதுகும், விரிந்த

ஜேணமும், முன்புறம் பத்தரும், திராட்டின் மேலுங் கீழுமான அசைவும் ஊஞ்சல் நாற்காலி ஒன்றில் ஆடிக் களிப்பதுபோல் ஜோதிக்குத் தோன்றியது.

அந்த மணற்பாதை, ஒளி குடித்த நிழல்கள் கொஞ்சும் பட்டையானதொரு பட்டுப் படாம்போல் காட்சி யளித்தது ; நீரூற்றருகில் இரண்டாய்க் கொக்கியிட்டுப் பிரிந்தது ; ஒன்று லிங்கர்களின் வீட்டுக்குச் செல்வது, மற்ருென்று வடக்கே போகிறது.

வழியிலுள்ள மரங்களிலெல்லாம் கோடாலியின் வெட்டுக் குறிகள் வெளிறிக் காண்கின்றன.

"இதெல்லாம் லிங்கர்கள் வேலையா ?" என்று கேட்டான் ஜோதி.

"இல்லை. ! இவை வெகு காலத்திற்கு முன் ஸ்பானியர்களால் ஏற்படுத்தப்பட்டன. வழிகண்டு பிடிப்படிப்பதற்காக தெற்குப் பாதை தம்பாவுக்குச் செல்லுகிறது ; அதுதான் ஸ்பானியக் குதிரைப்படை சென்ற வழி, வடக்குப் பாதை கறுங் கரடிகள் போன வழி."

ஜோதி தன் பெரிய மலர்ந்த விழிகளால் பத்தரை ஏறிட்டுப் பார்க்கிருன். 'அப்பா ! ஸ்பானியர்கள் கரடிகளைக் கட்டி ஓட்டினுர்களா ?',—என்று கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன் ; இன்று போலவே அன்றும் பெருங் கரடிகளும், சிறுத்தைப்புலிகளும், பேய் மரைகளும்......?"

ஜோதி சுற்றுமுற்றும் பார்க்கிருன் ; தேவதாரு மரங்கள் மிகமிக நெருக்கமாய் நிரம்புகின்றன.

"அப்பா ! இப்போது இங்கே யாராவதுஸ்பானியர்கள் இருக்கிருர்களா ?"

" இல்லை ; அவர்கள் கடல் வழியே வந்தனர் ; நில வழியே போரிட்டுக்கொண்டு சென்று மறைந்தனர், அவர்கள் எங்கு போனார்களென்று யாருக்குமே தெரியாது "—எனப் பதிலளித்தார் பத்தர்.

இப்போது புதர் நிலம் அவர்களைச் சுற்றிக்கொள்ளுகிறது. தாழ்ந்து செறிந்தமுடைச் செறிவுகள் பயனற்ற நிழல்களைத் தரையில் பரப்புகின்றன. எங்கோ ஒன்றிரண்டு மரங்களே தலைக்குமேல் நிழலோட்டுகின்றன. தூரத்தில் லிங்கர்கள் வாசஸ்தலத்தை வரியிடும் பாரிய மரங்கள் தலை தூக்கி நிமிருகின்றன. பத்தர் குதிரையிலிருந்து கீழே இறங்கி பெக்கியைத் தூக்கிக்கொண்டு மறுபடியும் ஏறுகிறார்.

" ஏன் அப்பா !"—என்கிறான் ஜோதி.

" நீ சும்மாயிரு "—இது பத்தர் பதில்.

இப்போது நிழல் செறிந்த குளிர்ச்சியான நிலப் பரப்பை அடைந்துவிட்டனர். பாதை வளைந்து சென்று லிங்கர் வீட்டை அடைந்தது. நன்கு வளர்ந்த கருங்காலியின் நிழல் அவ்வீட்டைக் கவ்விக் கொண்டிருந்தது.

" ஜோதீ ! பத்மனை நீ பாடுபடுத்துவதில்லையே ?" என்று மெதுவாய் விசாரித்தார் பத்தர்.

" பாடு படுத்துவதா ? அவன் என் நண்பன் —எனத் தயக்கமின்றி விடையளித்தான் ஜோதி."

" சந்தோஷம், கோணிக்குறுகிக் கூனிய கொக்காணி உருவத்தோடு பிறந்தது, பாவம் ! அவனுடைய குற்றமா ?',

" அப்பா ! ஆலாலனுக்கடுத்தபடி பத்மனே என் ஆருயிர் நேசன் "—என்றான் ஜோதி.

திடீரென்று வனமுழுவதும் பேரிரைச்சலொன்று எதிரொலித்தது. வீட்டுக்குள் ஏதோ பெரிய ரகளை

நாற்காலிகள் இழுக்கப்படுகின்றன. ஏதோ முறிகிறது, கண்ணாடிகள் உடைகின்றன ; காலடி ஓசைகள் கண கணத்தன. சுவர்களை யாரோ தாக்குகிறார்கள்.

இவ் வொலிகளுக்கெல்லாம் மேலாக லிங்கர் மனைவியின் கீச்சுக்குரல் வீறிடுகிறது. கதவு படே லென்று திறக்கிறது ; அதனூடு பல நாய்கள் வெளிப்படு கின்றன. லிங்கம்மா ஒரு விளக்கு மாற்றுக் கோலால் அவைகளை விரட்டுகிறாள். அவைகள் பயந்தோடு கின்றன ; அவளது பிள்ளைகள் அவளுக்குப் பின் சூழ் கின்றனர்.

"இறங்கி வருவதால் ஆபத்தில்லையே ?" — என்று கேட்கிறார் பத்தர்.

லிங்கர் குடும்பம் ஆரவாரத்தோடு பத்தரை வர வேற்றது ; அதே சமயத்தில் நாய்களையும் அடக்க அதட்டல் கேட்டது. லிங்கம்மா தன் முந்தாணியை வீசி நாய்களை விரட்டினாள். வரவேற்பும், நாயோட்டமும் கலந்து வந்த வெற்றிரைச்சலைக் கேட்டு ஜோதி தயங்கினான்.

"வாங்க, வாங்க, வெண்ணெய் திருடும் வெறி நாய் களே ! ஓடுங்கள் ஓடுங்கள் !"

நாய்கள் வனத்திற்குள் ஓடி ஒளிந்தன. ஜோதி குதிரையினின்றும் கீழே குதித்தான். பெக்கியை மென்மை யாய் அணைத்தவாறே பத்தர் மெதுவாக இறங்கினார். லிங்கரது பெரிய குடும்பம் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது.

வீட்டிலிருந்து பத்மன் தன்னை நோக்கி வருவதை ஜோதி கண்டுவிட்டான். பாவம் ! அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவன் கூனிக் குறுகிக் கோணிய உடல் கொக்காணியிட்டு நடந்தது; அடிபட்டுத் தள்ளாடி

வரும் ஒரு கோந்திக் குரங்குபோல் தோன்றியது. அவன் தன் கைத் தடியை ஆட்டி ஜோதியை வரவேற்றான். ஜோதி அவனிடம் ஓடினான்.

"ஜோதீ !"—என்று அவன் சந்தோஷமாகக் கூச்ச லிட்டான்.

இருவரும் தழுவிக்கொண்டு பொருமினர்.

ஜோதிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. பத்மனது கோணிக் குறுகிய உருவத்தை அவன் இழிவாக எண்ணிய தில்லை. கொழுமையான வண்ணத்தையோ அல்லது குடுவை விலங்கையோ தழுவும் குதுகுதுப்பைத்தான் அவன் உணர்ந்தான்.

பத்மன் ஒரு மரைகழன்ற பைத்தியமென்று மற்ற வர்கள் நினைத்தனர். பத்மன் செய்ததை ஜோதி செய் திருக்கமாட்டானென்பது வாஸ்தவமே.

பத்மன் லிங்கப்பரதரின் கடைசி மகன், கூனலோடு பிறந்தான். சிறு வயது முதலே மண்ணுடன் பிணிக்கப் பட்டிருக்கும் தன் கோணலுடலை லேசாக்கிக் கொண்டு பறவைகளைப்போல் பறக்கவேண்டு மென்று அவன் ஆசைப்பட்டான். ஒரு நாள் வைக்கோல் படல்களைத் தன் கைகளில் இறக்கைகள் போலணிந்துகொண்டு மரத்தின் மீதேறிப் பறப்பதற்காகக் கீழே குதித்தான். நல்லவேளை. சில எலும்புகள் முறிந்ததைத் தவிர உயிருக்கு ஆபத்தில்லை. முன்னமேயே கோணியிருந்த கூனுடல் பின்னுங்கோணிக் கொக்காணியிட்டது.

இது பைத்தியக்காரன் செயல்தான். எனினும் ஜோதியின் உள்ளத்தின் ஆழத்திலும் எங்கோ இத்தகைய தோர் ஆசை புதைந்து கிடந்தது. அவன் பட்டங்கள் பறப்பதைப் பார்த்திருக்கிறான்—மிக மிகப் பெரிய பட்டத்

தைக் கட்டிக்கொண்டு பறந்தால்.........? பறவைகளைப் போல் பறப்பது சாத்தியமானாலும் ஆகலாம்.

எப்படியோ இருவருக்கும் பறப்பதில் ரகசியமான தோர் ஆசையுண்டு.

" ஹா !'' என்றான் ஜோதி.

" என்னிடம் ஒரு கரடி முயல்குட்டி இருக்கிறதே !'' என்றார் பத்மன்.

அவனிடம் எப்போதும் ஏதாவது ஒரு வளர்ப்பு மிருகக் குட்டி கட்டாயம் இருக்கும்.

" வா ! அதைப் போய்ப் பார்க்கலாம் " என்று ஜோதி ஆர்வத்தோடு கூறினான்.

இருவரும் வீட்டின் பின்புறம் சென்றனர். அங்கு தான் பத்மனின் விலங்குப் பேழைகளும், பறவைக் கூண்டுகளும் இருந்தன.

" கழுகு இறந்துவிட்டது. அதை வளர்ப்பது கஷ்டமாயிருந்தது " என்றான் பத்மன்.

காட்டணிலொன்று மிதிச்சுழல்காற்றாடியை சுழற்றிக் கொண்டிருந்தது.

" இதை நீ எடுத்துக்கொள், என்னிடம் வேறொரு அணில் இருக்கிறது.''

ஜோதியின் உள்ளம் இன்பத்தாலேறித் துன்பத்தில் தோய்ந்தது.

" அம்மா கோபிப்பாள்.'' அந்த அணிலை அடைய அவனுக்கு எத்தனையோ ஆசை.

" இதோ முயற்கரடி, கரடிமுயல் " என்றான் பத்மன்.

இரண்டு சிறு பிளாச்சுகளிடையே ஒரு கரிய மூக்கு நுனி நீட்டிக் கொண்டிருந்தது. ஒரு சிறிய, குழந்தைக்

கரம் போன்ற பிஞ்சுக் காலொன்று வெளிப்பட்டது. பத்மன் ஒரு பிளாச்சை விலக்கிக் கருமுயலைக் கையி லெடுத்தான். அது அவன் கையோடு கையாய் ஒட்டிக் கொண்டு இன்னதென்று சொல்ல முடியாததோர் கீச்சுக் குரலில் கத்தியது.

"இந்தா ! இதை எடுத்துக்கொள், கடிக்காது."

கருமுயலை வாங்கி ஜோதி தன் மார்புடன் அணைத்துக் கொண்டான். அதன் கம்பளி மயிர் அவன் தாய் போடும் ப்ளேனலைக் காட்டிலும் மென்மையாயிருந்தது. அது அவன் கையை அதுக்கியவாறே மறுபடியும் கத்தியது.

"அது தன் சக்கரைத் துண்டுக்காகக் கத்துகிறது. வீட்டுக்குப் போகலாம் வா" என்றுன் பத்மன்,

## 6

குறுங்கரடி ஜோதியின் கூப்பிய கையில் மல்லாந்து படுத்தவாறே சக்கரைப்படாத்தை நக்கியது. அதன் ருசியில் சொக்கிக் கண்களை மூடிக்கொண்டது.

அறையின் இருண்ட மூலையிலிருந்து லிங்கப்பரதர் பேசினர். அவர் அங்கிருப்பது ஜோதிக்குத் தெரியாது— அவ்வளவு அமைதியாய் அசைவற்றிருந்தார்.

"என் சின்ன வயதில் நானுந்தான் ஒரு குறுங்கரடிக் குட்டி வளர்த்தேன். இரண்டு வருஷங்கள்வரை அது பூனையைப்போல் பரம சாதுவாயிருந்தது. அப்புறம் ஒரு நாள் என்னையே கடித்து விட்டது, வயது வந்தால் கடிப்பது அதன் சுபாவம்."

லிங்கம்மா அவளது குழந்தைப் பரிவாரங்களோடு அறைக்குள் நுழைந்தாள். பிச்சன், விச்சன், குப்பன்,

பச்சை, அங்கன், வெங்கன்—எல்லோருமே மலைபோன்ற ஆகிருதி உடையவர்கள்; குப்பன் ஒருவனே கொஞ்சம் குள்ளமானவன்.

அவர்களுக்கும் பின்னாலேயே பொன்னன் பத்தரும் வந்து சேர்ந்தார்; நாய்க்குட்டி பெக்கி இன்னும் அவர் கையணைப்பில்தானிருந்தது.

பத்தர் அறையைத் தாண்டினார். பரதரிடம் சென்று குசலம் விசாரித்தார்.

"சௌக்கியந்தானே!"

"சௌக்கியந்தான். என்னமோ இன்னும் சாவு வரவில்லை. இந்த இடம் என்னை விடமாட்டேனென் கிறது."

லிங்கம்மா பத்தரை உட்காரச் சொன்னாள்; பத்தர் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

"நாயென்ன, நொண்டியா?" என்று பரதர் கேட்டார்.

"இல்லை; எப்போதுமே நொண்டி ஆனதில்லை. உம்முடைய வேட்டை நாய்களுக்குப் பயந்தே இதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார் பத்தர்.

"விலையேறப்பட்ட உயர்ந்த ஜாதியோ?"

"இல்லை, இல்லை. அப்படியொன்றும் உயர்ந்த ஜாதி நாயென்று சொல்ல முடியாது; உங்களைப் போன்றவர் களுக்கு இந்நாய் வராது."

"பயனற்றதென்று தெரிந்துதான் இத்துணைப்பரிவா?"

"ஆமாம்!"

" கரடியின்மேல் இதை ஏவினுயா ?"

" ஓ !"

பரதர் அருகே வந்து பெருமூச்சு விட்டார்.

" இது கரடிகளின் சுவடுகளைக் கண்டுபிடிக்குமா ? கண்டால் தடுத்து நிறுத்துமா ?"

" இல்லை, அவைகளுக்கெல்லாம் இது உபயோகப் படாது."

" தன் சொந்த நாயைப் பற்றி இவ்வளவு தாழ்மை யாகப் பேசும் மனிதனை நான் பார்த்ததேயில்லை !"

" என்னமோ, பார்ப்பதற்கு அழகான நாய்தான் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் ; பார்ப்பவர் களெல்லாம் இதை விலைக்கு வாங்க ஆசைப்படுகிருர்கள் என்பதும் வாஸ்தவமே. எனினும் நான் விற்கத் தயாரா யில்லை ; காரணம், வாங்குபவர்கள் ஏமாந்து போவார்களே என்பதுதான் " என்று சமாதானம் கூறினுர் பத்தர்.

" திரும்பும்போது எதையாவது வேட்டையாட...?" என்ருர் பரதர்.

" வேட்டையாட விரும்பாத மனிதர்களுண்டா ?"

" வேட்டையை விரும்பும் நீர் பயனற்ற வெறும் நாய்க்குட்டியைக் கொண்டு வருவது வேடிக்கையாய்த்தா னிருக்கிறது."

பரதர் தம்பதிகள் ஒருவரை ஒருவர் அர்த்தத் தோடு பார்த்துக் கொள்ளுகின்றனர்.

" இந்த நாயும் உபயோகமில்லை ; என்னுடைய வேட்டைத் துப்பாக்கியும் உபயோகமில்லை ; எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை."

பத்தரின் கரு விழிகள் பரதர்களின் சுவரில் தொங்கும் வேட்டைப் படைக்கலங்களை நோட்டமிட்டது, அவை

களைக் கொண்டு ஒரு துப்பாக்கிக் கடையே வைத்து விடலாம், பரதர்கள் குதிரைகளையும், மானிறைச்சி களையும் விற்றுப் பணம் படைத்தவர்கள். உணவுப் பொருள்களை வாங்குவது போல் ஆயுதங்களும் அதிகமாக வாங்குவார்கள்.

"என்ன ? வேட்டையில் தோல்வியா ? உனக்கா ? ஆச்சரியமாயிருக்கிறதே."

"நேற்றைய வேட்டையில் நான் தோற்றுப் போனேன் ; என் துப்பாக்கி வெடிக்க மறுத்து விட்டது; வெடித்தபோது பின்புறம் வெடித்து என்னையே தாக்கியது"—என்று பத்தர் அங்கலாய்த்தார்.

"என்ன வேட்டை."

"கறுங்கால் கரடி வேட்டை ?"

அவ்வளவுதான், ஒரே கூச்சல். "அந்தக் கரடி எங்கிருக்கிறது ? எங்கு போகிறது, எங்கு ஆகாரம் செய்கிறது ?"

லிங்கப்பரதர் தன் கைத்தடியால் தரையில் தட்டினார்.

"பேசாமலிருங்கள். பத்தர் விஷயத்தைச் சொல் லட்டும்" என்று பரதர் தன் பிள்ளைகளைக் கண்டித்தார்.

## 7

வேட்டையைக் காட்டிலும் வேட்டையைப் பற்றிய பத்தரின் வர்ணனை ஜோதியின் உள்ளத்தைப் பரவசப் படுத்தியது ; தன் தந்தையின் பெருமையால் அவன் பூரித்துப் போனான்.

சின்னஞ்சிறிய உருவந்தான், எனினும் வேட்டையில் பொன்னன் பெரிய பரதர்களை வெகு சுலபமாக வென்று

விடுவார். வார்த்தை ஜாலமும், வர்ணனை வியப்பும் கூட்டி வேட்டையைப் பற்றி அவர் கூறிய கதைக் கோப்பு மற்றவர்களை மாயமான ஒரு மயக்கத்தி லாழ்த்தியது.

கரடிச் சண்டையை அவர் காவியமாக்கினார். பின் புறமாய் துப்பாக்கி வெடித்ததையும், கரடி ஜாலியைக் கட்டிப் பிடித்ததையும் வர்ணித்தபோது குப்பன் தன்னை மறந்து குதப்பிக் கொண்டிருந்த புகையிலையை விழுங்கி விட்டுத் திண்டாடித் தியங்கி இருமிப் பொருமிக்கொண்டு வாய் கொப்பளிக்க ஓடினான்.

பரதர்கள் வாயைப் பிளந்தவாறே கதையைக் கேட்டனர், பலமுறை தங்கள் கைகளை முஷ்டியிட்டனர்.

"நான் அங்கே இல்லாமற் போனேனே?"—என்றான் பிச்சன்.

"கறுங்கால் கரடி இப்போது எங்கிருக்கிறது?"—என்று குப்பன் கேட்டான்.

"யாருக்குத் தெரியும்?"—என்று பதிலளித்தார் பத்தர்.

ஒரு கணம் அமைதி.

"எல்லாம் சரி, இந்த நாயைப் பற்றி நீ ஒன்றுமே கூறவில்லையே"—என்று வினவினார் லிங்கர்.

"என்னை வற்புறுத்த வேண்டாம்; இது பயனற்ற தென்று நான் முன்னமேயே சொன்னேனே"—இது பத்தரின் பதில்.

"அதன் உடலில் ஒருவிதக் காயமும் இல்லையே?"

"இல்லை."

"கரடியை எதிர்த்துக் காயமில்லாமல் திரும்பக்கூடிய நாய் மிகமிகத் தந்திரசாலியாயிருக்க வேண்டும்."

பத்தர் தன் சுருட்டுப் புகையை மிகச் சாவதானமாய் இழுத்தார்.

லிங்கப்பரதர் தன் ஆசனத்தைவிட்டு எழுந்தார்; பத்தரிடம் வந்தார்; பத்தர்மேல் ஒரு மலை முழையைப் போல் கவிந்து நின்றார், கைவிரல்களை நெட்டை எடுத்தார் வியர்த்தார் விறுவிறுத்தார்.

" எனக்கு இரண்டு விஷயங்கள் வேண்டும்; ஒன்று கறுங்கரடி சாவதை என் கண்ணாரக் காணவேண்டும். இரண்டு இந்த நாய் "—அவர் குரல் கடுமையாயிருந்தது.

" இல்லை, இதை விற்று நான் உங்களை ஏமாற்ற விரும்பவில்லை."—பத்தர் குரல் மென்மையாயிருந்தது.

" இந்த சால்ஜாப்பெல்லாம் வேண்டாம். இதன் விலையைச் சொல்லு."

" வேண்டுமானால் என் ரிப்பியை விலைக்கு......?"

" இந்தக் குள்ளநரிக் குறும்பெல்லாம் விட்டுவிடு. உன் ரிப்பியைக் காட்டிலும் உயர்ந்த நாய்கள் என்னிடம் எவ்வளவோ இருக்கின்றன."

இப்படிக் கூறியவாறே சுவரில் தொங்கிய ஒரு புதுத் துப்பாக்கியை எடுத்துவந்தார் பரதர். அது மிக நேர்மை யானது, இருகுழல்கள் பளபளக்கின்றன. அக்ரூட்டுக் காய் போன்ற மணி மணியான குண்டுகள், மினுமினுப் பானவை; இரட்டைத்திணிப்புகள் வலியவை, கொக்கிகள் சிறந்தவை. அதைப் பத்தர் கையில் கொடுத்தார் பரதர்.

" இங்கிலாந்திலிருந்து நேரே வந்தது. மருந்து திணிக்க வேண்டாம், குண்டுகளைப் போட்டால் போதும். அவ்வளவுதான் ' பட் பட் ' என்று இரண்டு வெடிகள் தீர்க்கலாம், பறக்கும் கழுகையும் பாய்ந்து கொல்லும் "— என்று பரதர் அத்துப்பாக்கியின் விசேஷ குண குணங்களை விவரித்தார்.

" இல்லை, இல்லை, இது ரொம்பவும் விலையேறப் பட்டது "—என்று பத்தர் தயக்கங் காட்டினர்.

" வேண்டுமானவரையில் துப்பாக்கிகள் வாக்கிக் கொள்ளலாம், வீண் விவாதங்களில் எனக்கு விருப்ப மில்லை. .இந்த நாயை அடைய வேண்டுமென்ருல் அடைந்தே தீருவேன். இந்தத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு நாயை எனக்குக் கொடுத்துவிடு, இல்லையேல் நான் திருடியாவது இதை......?"

" அப்படிச் சொன்னல் அப்புறம் நான் என்ன செய்ய முடியும். சரி, நாயை எடுத்துக் கொள்ளுங்கள், ஆனல் ஒரு நிபந்தனை ; இதை அடித்து உபத்திரவிக்கக் கூடாது."

"ஆஹா!" என்று பரதர் பத்தரின் கையை குலுக்கினர்.

பிறகு ஷீக்கி யடித்துக் கொஞ்சியவாறே பெக்கியை எடுத்துக்கொண்டு வெளியே சென்ருர்.

பத்தர் நாற்காலியில் சாவகாசமாய் அமர்ந்தார். துப்பாக்கியைத் தன் முழங்கால்களின் மேல் தாங்கிச் சமன் செய்தார்.

ஜோதியின் கண்கள் அத் துப்பாக்கியின் அழகிலேயே லயித்துப்போயின. பரதரைத் தன் தந்தை ஏமாற்றி விட்டார் என்பதை எண்ணி எண்ணி அவன் உள்ளம் இறுமாந்தது. பரதர் தன் வாக்குறுதியைக் காப்பாற்று வாரா என்பதில் அவனுக்குச் சந்தேகந்தான். வியாபார தந்திரங்களைப் பற்றி அவன் கேட்டிருக்கிருன். ஆனல் உண்மை கூறியே ஒருவரை ஏமாற்ற முடியும் என்பது அவனுக்கோர் ஆச்சரியமான புது அனுபவம்.

அன்று மாலை வரையில் பேச்சிலேயே கழிந்தது. பத்தரின் பயனற்ற துப்பாக்கியை பிச்சன் கோண்டிக்

கொண்டிருந்தான். பரதர்களுக்கோ வேலையில்லை, அவசரமும் கிடையாது. கறுங்கரடியின் பெருமையைப் பற்றியும், வேட்டை நாய்களின் அருமைகளைப் பற்றியும் கதை கதையாகப் பேசினர். ஒவ்வொருவரும் தங்கள் வேட்டை அனுபவங்களை வர்ணித்தனர்.

பத்மனுக்கு கதை கேட்கப் பிரியமில்லை ; குளத்திற்குப் போய் மின்மீன்கள் பிடிக்க விரும்பினான். ஜோதியோ கதைகளில் லயித்துவிட்டான்.

கடைசியில் பத்தர் எழுந்தார். "நேரமாகிறது ; குதூகலமான நண்பர்களை விட்டுப் போகவேண்டியிருப்பதற்காக நான் வருந்துகிறேன்."

"இரவு தங்கிவிட்டுப் போகலாம், ஓநாய் வேட்டை."

"இல்லை, வீட்டில் அவள் தனியாயிருக்கிறாள்......?"

பத்மன் பத்தர் கையைப் பற்றினான்.

"ஜோதி இங்கே இருக்கட்டும், இன்னும் அவன் என்னிடமுள்ள சாமான்களைப் பூராவும் பார்க்கவில்லை" என்றான்.

"ஆமாம்" பிச்சன் பத்மனை ஆமோதித்தான். "நான் நாளை விலாசனூருக்குப் போகிறேன் ; அப்போது அவனை அங்கு கொண்டு வந்து விடுகிறேன்."

"அவன் அம்மா கோபிப்பாள்" என்றார் பத்தர்.

"அம்மாக்களுக்கெல்லாம் கோபிப்பதுதானே வேலை ; என்ன ஜோதி ?"

"அப்பா ! நான் இங்கேயே இருக்கேன் அப்பா ! நான் விளையாடி எத்தனையோ நாட்களாய்விட்டன" என்று ஜோதி விண்ணப்பம் போட்டான்.

"ஆமாம், முந்தாநாள் முதல் நீ விளையாடவில்லைதான். சரி, சரி, இன்றிரவு தங்கிவிட்டு வா ? பரதரே ! பெக்கி

ஏதாவது குறும்பு செய்தால் அதற்காக என் பையனைத் தண்டித்து விடாதேயும். நான் வருகிறேன்."

புதுத் துப்பாக்கியையும், பழைய துப்பாக்கியையும் தோளில் தாங்கியவாறே பத்தர் தன் குதிரையிடம் சென்றார்.

ஜோதி பின்தொடர்ந்தான்.

"வேறு யாராவது இருந்தால் இவ்வாறு ஏமாற்றிய தற்காக நான் ரொம்பவும் வெட்கப்படுவேன். பத்தர் தனக்குத்தானே பேசிக்கொள்கிறார். அவர் என்னை ஏளனம் செய்ததற்கு......?"

"அப்பா, நீ உண்மையைத்தானே கூறினாய்?" என்றான் ஜோதி.

"வார்த்தைகளென்னமோ நேர்மையானவைதான். ஆனால் மனந்தான் வஞ்சனையால் 'ஊகமா' நதியைப் போல் கோணலாயிருந்தது."

"உண்மையை அறிந்தால் பரதர் என்ன செய் வாரோ?"

"முதலில் கோபத்தால் என்னைக் கிழித்தெறிய நினைப் பார். பின்னால் தான் ஏமாந்ததைப் பற்றித் தனக்குத்தானே சிரித்துக் கொள்வார். சரி, சரி, நான் வருகிறேன். சமத்தா இரு" என்றார் பத்தர்.

"பத்தரை வழியனுப்பப் பரதர்கள் வந்தனர். தந்தை பிரயாணப்பட்டதும் ஜோதிக்கு என்னமோபோலிருந்தது. ஏதோ தனிமையான உணர்ச்சி உண்டாயிற்று. அவரைத் திரும்பக் கூப்பிடலாமா என்று நினைத்தான்; அல்லது தானும் ஓடிப்போய்த் தந்தையோடு......" என்றெல்லாம் தயங்கினான்.

இதே சமயம் பத்மன் அவனைக் கூப்பிட்டான்.

" ஜோதீ ! ஓடிவா ! கறுங்கரடி குட்டையில் மீன் பிடிப்பதைப் பார் " என்ருன்.

ஜோதி கரடி வேலையைக் காண ஓடிவந்தான். அது அச் சிறிய தண்ணீர் தேக்கத்தில் மீன் பிடித்து விளையாடியது. அன்றைய மாலை முழுவதும் பத்மனோடும், கரடியோடும் விளையாட்டிலேயே கழிந்தது.

அந்த அணில் பேழையை சுத்தம் செய்வதிலும், காலொடிந்த செம்பூத்துக் கூண்டைச் சீர் செய்வதிலும் ஜோதி பத்மனுடன் பங்கெடுத்துக்கொண்டான்.

தனக்கென்று தனியாக விளையாட ஒன்றுமில்லையே என்று ஜோதிக்கு ரொம்பவும் வருத்தம். காட்டணிலையும், வேண்டுமானால் குறுங்கரடியையுங் கூடப் பத்மன் ஜோதிக்குக் கொடுப்பானென்பதில் சந்தேகமில்லை. எனினும் இன்னொரு வாய்க்கு—அது எவ்வளவு சிறிதாயிருந்தாலும் ஆகாரம் போட அவன் அம்மாவுக்குக் கஷ்டந்தர அவனுக்கு விருப்பமில்லை.

அஸ்தமன சமயம் ஆகிவிட்டது. இருள் எட்டிப் பார்க்கிறது. எல்லோரும் வீட்டுக்குள் வந்தனர்.

இராச் சாப்பாடு முடிந்தது ; பரதர்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். பத்மனும் ஜோதியும் ஒரு மூலைக்குச் சென்று குறியடி விளையாட்டில் ஈடுபட்டனர். திடீரென்று ஜோதி விளையாட்டை விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

" உனக்குத் தெரியாத ஒரு சங்கதி எனக்குத் தெரியுமே !" என்ருன் ஜோதி.

" என்ன ?"

" ஸ்பானியர்கள் இந்த வழியாகத் தான் போயிருக்க......?"

" ஓ ! அது தெரிந்த விஷயந்தானே. நெருங்கி வந்து ஜோதியின் காதில் ரகசியமாய், 'நானே' நேரில் பார்த் திருக்கிறேனே !—என்றான் பத்மன்.

ஜோதி அவனை ஆச்சரியத்தோடு விழித்துப்பார்த்தான்.

" என்ன பார்த்திருக்கிறாய் ?

" ஸ்பானியர்கள். உயரமானவர்கள், பள பளப்பான கிரீடங்களணிந்தவர்கள் ; கரிய குதிரைகளின்மீது சவாரி செய்வர் !"

" நீ எப்படிப் பார்த்திருக்க முடியும். அவர்கள் போய் வெகு நாட்கள் ஆகிவிட்டனவே."

" அப்படித்தான் எல்லோரும் சொல்லிக் கொள்ளு கிறார்கள். ஆனால், நான் கூறுவதைக்கேள். அடுத்த முறை ஊற்றுக்கிணற்றின் மேற்கில் வளர்ந்திருக்கும் சிவப்பு மந்தாரைச் செடிக்கு அப்பால் சென்று பார். அங்கு எப்போதும் குதிரை சவாரி செய்யும் ஒரு ஸ்பானி யனைப் பார்ப்பாய் "—என்றான் பத்மன்.

ஜோதிக்கு மயிர்க்கூச்செறிந்தது. இது பத்மனது கற்பனையில் பிறந்த பல கதைகளில் ஒன்று என்று ஜோதிக்குத் தெரியும் ; இத்தகைய கதைகளால்தான் அவனை ஒரு மறைகழன்ற பைத்தியம் என்பது. இருந் தாலும் இக்கதையை நம்பவே ஜோதி ஆசைப்பட்டான். என்ன பிரமாதம். செம்மந்தாரைக் கப்பால் பார்க்க வேண்டியதுதானே.

அப்புறம் பேச்சு உலகம் முடியும் இடத்தில் ஒரே இருட்டென்றும், அந்த இருட்டுக் கடலை மேகப் படகு களால் தாண்ட முடியுமென்றும் பேசியவாறே இருவரும் தூக்கத்திலாழ்ந்தனர்.

மேகக் குதிரையேறிச் சவாரி செய்யும் ஸ்பானியர் களைப்பற்றி ஜோதி கனவுகள் கண்டான்,

# 8

எங்காவது போய்விட்டு திரும்பி வீட்டுக்கு வந்தால் ஜோதிக்கு எல்லாமே புதிதாகத் தோன்றும்; பழகிய ஒவ்வொரு வஸ்துவும் பார்த்திராத பரவசங்களைக் காட்டும்.

கொழுமையான பெர்ரிக் கனிகள் கொத்துக் கொத்தாய்க் குலுங்குகின்றன. அன்றுவரையில் அவற்றை அவன் கவனித்ததில்லை. படர் திராட்சைக் கொடிகள் இலைப்பாசிகளுடே பசிய கனிகளைப் பரப்பியுள்ளன அவைகள் மேல் பொன்னீக்கள் தேன் குடிக்கத் தலை கீழாகக் கவிந்துள்ளன.

விறகுப் பேழை அநேகமாய்க் காலியாயிருந்தது; ஜோதி விறகு தறித்து அதை நிரப்பலானான். இன்று என்னமோ வேலை செய்வது அவனுக்கு சிரமமாகத் தோன்றவில்லை.

ஜூலி தள்ளாடி வந்தது. ஜோதி அதைத் தட்டிக் கொடுத்தான். அதுவும் சந்தோஷத்தோடு வாலாட்டியது

அப்போதுதான் அவன் தந்தை வெளியிலிருந்து வீட்டுக்கு வருகிறார். அதென்ன?—அவர் பின்னால் என்னமோ தொங்குகிறதே?

"ஜோதீ! இதோ ஒரு அபூர்வமான வஸ்து" அவன் அவரிடம் ஓடினான். அது ஒரு பழகிய, ஆனால் புதிதான காட்டுமரை—ஏனெனில் கரும் பழுப்பு நிறத்திற்குப் பதில் ஒரே வெளுப்பாயிருக்கிறது.

"வெண் கரடி, இந்த வெளுப்பு எப்படியப்பா வந்தது?"

" இது ஒரு அபூர்வமான மிருகம், பிறக்கும்போதே வெளுப்பாய்த்தான் பிறக்கும் இதோ இந்த வாலிலுள்ள கரு வளையங்களைப் பார்.

ஜோதி குனிந்து அதை ஆராய்ந்தான்.

" கண்ணியிலா அகப்பட்டது ?"

" ஆம், குற்றுயிராயிருந்தது, அதைக் கொல்ல எனக்கு மனமே வரவில்லை."

ஜோதிக்குத்தான் எதையோ இழந்து விட்டதைப் போன்ற உணர்ச்சி, உயிரோடு வெண்கரடியைத் தான் பார்க்கவில்லையே என்ற வருத்தம்.

" நான் கொண்டு வருகிறேன், அப்பா !"

வெண்கரடியை வாங்கி ஜோதி அணைத்துக்கொண்டான். அதன் சருமம் மழ மழப்பாயிருந்தது. அதன் அடிப்புறம் கம்பிளிக் குஞ்சுக் சிறகுகளைக் காட்டிலும் மென்மையாயிருந்தது.

" சிறு வயது முதல் இதை வளர்த்திருந்தால் ?"

" வயது வந்ததும் கடிக்க ஆரம்பித்திருக்கும் !"

அவர்கள் வீட்டு வாசலுக்கு வந்து விட்டனர்.

" தன் கரடி முயல் குட்டி கடிப்பதே இல்லை எனப் பத்மன் கூறினனே "—என்ருன் ஜோதி.

" கடித்தாலும் பரதர்களின் கடுந்தோலில் உறைக்காது " என்ருர் பத்தர்.

" ஒரு வேளை திருப்பிக் கடித்தாலும் கடிப்பார்கள் "

இருவரும் சிரித்தனர்; கதவருகில் பொன்னி அவர்களை வரவேற்ருள். வெண்கரடியைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

EXTEN... UNIVER... LIBRA...

" நல்ல வேளை, கண்டு பிடித்துவிட்டீர்களே, இத்தனை நாளும் என் கோழிக்குஞ்சுகளைத் திருடியது யாரென்று இப்போதுதான் விளங்குகிறது.

" அது கிடக்கட்டும் அம்மா, இதைப் பார், எவ்வளவு வெளுப்பாயிருக்கிறது "—என்றான் ஜோதி.

" கருப்போ ? வெளுப்போ ? கள்ளன் கள்ளந் தானே "—என்றாள் பொன்னி.

ஜோதி பத்தரைப் பார்த்தான், தொட்டியில் குளிக்கப் போன பத்தர் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

" இதன் தோல் என்ன விலைக்குப் போகும் "—இது பொன்னியின் கேள்வி.

" ஒன்றிரண்டு வெள்ளி அதிகம் கிடைக்கலாம். ஆனால், ஜோதி அதை உயிருடன் வளர்க்க முடிய வில்லையே என்று அங்கலாய்க்கிறான் ; அதன் தோலை அவனுக்குக் கொடுத்தாலாவது......?"

ஜோதியின் மனம் சந்தோஷத்தால் கனிந்தது. சாப் பாட்டைக் கூட மறந்துவிட்டான். தன் மகிழ்ச்சியை எந்தவகையிலாவது காட்ட விரும்பினான்.

" அப்பா ! நான் ஊற்றுக் கால்களைச் சரி பண்ணி விட்டு வருகிறேன் "—என்றான்.

பத்தர் தலை அசைத்து ஆமோதித்தார்.

" நானுந்தான் வருஷந்தவறாமல் ஒரு கிணறு வெட்ட ஆசைப்படுகிறேன். என்ன செய்வது. செங்கல் விலை குறையமாட்டேனென்கிறதே !"

" சென்ற இருபது வருஷமாய் நானுந்தான் கிணற்றை எதிர்பார்க்கிறேன். ஊம் ! எதிர்பார்த்துப் பயன் ?" என்று விசனித்தாள் பொன்னி,

"கொஞ்சம் பொறுத்துக்கொள்" என்று பத்தர் சமாதானம் கூறினர்.

பத்தரின் முகம் சுருங்கியது. தண்ணீருக்காகத் தன்னையும், தன் தாயையும் காட்டிலும் தன் தந்தை அதிகம் கஷ்டப்படுகிருர் என்பது ஜோதிக்குத் தெரியும். பிறகு விவகாரத்தை ஜோதி கவனித்துக்கொண்டான். தண்ணீர் விஷயம் அவருடைய தந்தையின் காணியாட்சி, பாவம்! பிரதிதினமும் இரண்டு பெரிய வாளிகளை இரண்டு தோள்களிலும் தாங்கியவராய், மணற்பாதை வழியே சென்று நீண்ட தூரம் நடந்து, மணல் வழியே இலை வலையூடு ஊறும் தட்டைக் குட்டையில் தண்ணீர் மொண்டுகொண்டு வருவார். அவன் தந்தை குடியிருக்க இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பது ஜோதிக்கு விளங்குவதில்லை. ஆற்றேரத்தில் மற்றவர்கள்போல் குடியிருந்தால் என்ன என்று அவன் ஆசைப்படலானுன். ஆயினும் தென்னலும் மரங்களும், மலர்களும் கூடிய இந்தத் தீவுபோன்ற இடம் அவன் மனத்தைப் பரவசப் படுத்தியதும் வாஸ்தவமே. இதன் அழகு கதைகளில் வரும் காவியங்கள்போல் காட்சியளித்தது.

அவன் ஊற்றுக்குப் புறப்பட்டுவிட்டான்.

"ஜோதி! நீ ஊற்றுக்குப்போ; இந்த மரையின் தோலைச் சரி செய்துவிட்டு நான் உன் பின்னுலேயே வருகிறேன்"—என்றுர் பத்தர்.

அன்று இன்பமான நாள், ஒளியும், நிழலும், காற்றும் உறவாடின; ஜோதி வீட்டின் பின் புறமிருந்து அறுவடைக் கோலை எடுத்துக்கொண்டு ஊற்று நீர்த் தேக்கத்தை நோக்கிச் செல்லலானுன்.

ஊற்றைக் கண்டதும் உலகத்தின் விளிம்பைப் பற்றி அவனுக்கு நினைப்போடியது. அது மேகத் தோணிகள்

மிதக்கும் காரிருட்டுக் கருங்கடலென்று பத்மன் கூறினனென்ருலும், அதைப் பற்றி யாருக்குத் தெரியும் ? ஒரு வேளை உலகத்தின் முடிவு ஊற்றின் ஆழத்தின் அடி போலிருக்குமோ ?

அவன் காலடியில் ஒரு உலகமே கவிந்திருந்தது ; அது ஆழ்ந்து குவிந்த வாணலி போலிருந்தது. சில சமயங்களில் ஊற்றுறைகள் ஆழமற்றுத் தட்டையான சிறிய சிமிணிகளாகத் தோன்றும். ஆனல், பத்தரின் ஊற்றுக் குழியோ அறுபதடி ஆழம், அதற்குத் தக்க அகலமும்கூட—பத்தரின் துப்பாக்கிக் கட்டையால் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திலிருக்கும் அணிலை அடிக்கமுடியாது. அதன் ஆழ்ந்த பரப்பைப் பார்க்கப் பார்க்க பத்மன் கதையைக் காட்டிலும் ஆச்சரியம் தோன்றியது.

ஜோதி சுற்றியுள்ள வனத்தெழிலை ஏறிட்டு நோக்கினன் ; எங்கும் பசிய இலைப் பின்னல்கள், பைங்கரு நிழல் வலைகள் ; தண்ணென்ற தழைவு முழைவுகள், அதி ரகசியமான அனுபவங்கள்.

ஊற்றின் அடித் தட்டுக்குச் செல்ல மேற்புறச் சரிவில் ஒரு வழியிருந்தது. அது பல வருஷங்களாக பத்தரின் பாதங்களோடு பழகிப் பதமாயிருந்தது. விலங்குகள் அதில் தான் குளிப்பதும் குடிப்பதும் வழக்கம்.

தன் சொந்த உபயோகத்திற்காகக் கீழ்க்கரை ஆழத்தில் மணலோடும், சுண்ணக் கற் சுதைகளோடும் நீண்ட படிப் படியான நீர் உருளைகளால் சல்லடைச் சரல்களிட்டு மணலூடு வடிகட்டி வரும் தண்ணீரை மூன்று பகுதிகளாய்த் தேக்கிவைத்திருந்தார் பத்தர்.

ஒன்றில் அவரது மிருகங்கள் குடிக்கும் ; மற்ருென்றில் பொன்னி துணிகள் துவைப்பாள், மூன்ருவது ஊற்றின் தெள்ளத் தெளிந்ததெண்ணீரே சமையலுக்கு

உபயோகப்படுவது—குடி நீரும் அதுதான்; இந்த ஊற்றின் கரை விலங்குகள் இறங்கமுடியாத உயரத்திற்கு வளர்ந்திருந்தது.

ஜோதி அநேகமாய்ச் செங்குத்தான கரைச் சரிவில் தன் அறுவடைக் கோலின் உதவிகொண்டு மெதுவாக இறங்கினன். கரைச் சரிவில் இறங்குவது அவனுக்கு இன்பமாயிருந்தது. அவன் கீழே போகப் போகக் கரை அவன் தலைக்குமேல் மேலே மேலே உயர்ந்துகொண்டே சென்றது.

தென்றல் காற்று ஊற்றின் பசிய கோப்பைக்குள் மெதுவாக வீசியது; தண்ணீர்ப் பரப்பில் சிற்றலைகள் சிலிர் சிலிர்த்தன.

சிறு சிறு செடிகள் தங்கள் தழைக் கரங்களோடு தளிர் தளிர்த்தன.

தலை தூக்கிய புல் நாளங்கள் தரையை நோக்கிச் சாய்ந்து சாய்ந்து நிமிர்ந்தன.

ஒரு செங்குருவி ஊற்றின் கரைமேல் வட்டமிட்டது; மறுகணம் உதிரும் சருகுபோல் ஜல விளிம்பைத் தொட்டது; ஜோதியைக் கண்டதும் விர்ரென்று மேலெழும்பிப் பறந்து சென்றது.

ஜோதி தண்ணீர்ப் பரப்பின் அருகில் தணிந்து மண்டியிட்டான்.

ஒரு தனிமையற்ற தனிமை அவனைத் தழுவிக் கொண்டது. தான் பெரியவனானதும் ஊற்றருகில் ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டு, அதன் சாளரங்களின் மூலம், பழகிப்போன காட்டு விலங்குகள் தேனிலவில் வந்து நீராடுவதைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

ஊற்றின் அடித்தட்டைத் தாண்டி அக்கரையை அடைந்தான். அறுவடைக் கோலின் உதவிகொண்டு

மேலே பார்த்தான். நெருங்கி வளர்ந்துள்ள கொடி முழைவுகளைக் கைகளால் பற்றி மேலே போவது சுலபம் என்று கண்டான்.

சல்லடை உருளைகளைச் சுத்தம் செய்தவாறே மேலே ஏறிப் போய்க் குடி நீர் ஊற்றுத் துடுப்புருளைகளை அடைத்துவிட்டான். உடலைச் சரிவோடு பொறுத்திக் கைப் பிடியைவிடாமல் துடுப்புக் கிண்ணிகளில் நீரருந்தினான். தலை கீழாய்க் குனிந்து முகத்தை நனைத்தவாறே வாயால் நீர்க்குமிழிகளை ஊதிக்களித்தான்.

அதே சமயம் அவன் தந்தை ஊற்றடிக்கு வந்து விட்டார்.

"ஜோதி !"

ஜோதி திரும்பினான்

"அப்பா ! நீ எப்போ வந்தே, நான் பார்க்கவேயில்லையே ?"

பத்தர் அவனிருக்குமிடத்தை அடைந்துவிட்டார்.

"இருபது வருஷங்கள் ! உன் அம்மா அதை நினைவு படுத்தியபோது. என்னை ஒரே குலுக்காய்க் குலுக்கி விட்டது. மாறி மாறி, வந்து வந்து போன வருஷங்களை நான் எண்ணிப் பார்த்ததில்லை. ஒவ்வொரு வசந்தத்திலும் நான் ஒரு கிணறு வெட்டத் திட்டம் போடுவேன். ஆனால், கையிருப்போ, எருதுக்கும், பசுவுக்கும் மருந்துக்குமாகக் கரைந்து போகும். செங்கல் விலையோ அதிகம், ஒருமுறை முப்பதடி தோண்டியும் ஜலம் கிடைக்கவில்லை. எனினும் இருபது வருஷங்களுக்குமேல் ஒரு பெண்ணைத் தண்ணீரில்லாமல் காட்டூற்றை உபயோகிக்கச் சொல்வதென்றால்......?"

ஜோதி கவலையோடு தன் தந்தை சொன்னதைக் கேட்டான்,

"என்றாவது ஒரு நாள் அம்மாவுக்கு ஒரு கிணறு வெட்டிக் கொடுத்துவிடுவோம்"—என்றான் ஜோதி.

"இருபது வருஷங்கள், எனினும் ஏதாவது குறுக்கிடுகிறது. இடையில் யுத்தம் வேறு வந்தது. அதன் பின் நிலத்தை மறுபடியும் செப்பனிடவேண்டியதாயிற்று......" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார் பத்தர்.

அவர் மனம் சென்றகால நிகழ்ச்சிகளைச் சிந்தனை செய்தது.

"நான் முதலில் இங்கு வந்தபோது என்னென்னமோ நினைத்தேன்"

ஜோதிக்கு அன்று காலை தனக்குள் உதித்த கேள்வி ஞாபகம் வந்தது.

"எதற்காக அப்பா இவ்விடத்தை வாங்கினாய்?"

"ஏன்?"—ஒரு கணம் பத்தர் சிந்தனையிலாழ்ந்தார். "அமைதி! அமைதியை விரும்பித்தான் இவ்விடத்திற்கு வந்தேன்"—என்றார்.

## 9

இதுதான் மான் குட்டிகள் பிறக்கும் பருவம்; எங்கு பார்த்தாலும் மணலில் அவைகளின் கூர்மையான சிறிய குளம்புகளின் லேசான குறிகள் தென்பட்டன. எங்கு செல்வதானாலும் மான்கள் வந்து நடமாடிப் போன அடிச் சுவடுகளைத் தரையைக் குனிந்து கவனித்தவாறே ஜோதி நடக்கலானான்.

பெரும்பாலும் பிணைமான்களின் பெரிய சுவடுகளைத் தொடர்ந்தே குட்டி மான்களின் சுவடுகள் சென்றன. சில சமயங்கள் பிணைமான் சுவடுகள் பிணக்கம் காட்டின.

அங்கேங்கே தனித் தனியாகச் சுவடுகள் தோன்றின ; எங்காவது இரட்டை மான் குட்டிகளின் சுவடுகளைக் கண்டுவிட்டால் ஜோதியின் சந்தோஷம் அளவு மீறிப் போகும்.

" தாய்மானுக்கொன்று, எனக்கொன்று " —என்று அவன் மனம் திட்டம் போடும்.

ஒருநாள் தன் தாயிடம் இது விஷயமாய்ப் பேசலானான்.

" அம்மா ! நமக்குப் பாலுக்குப் பஞ்சமில்லை. நான் ஓர் புள்ளிமான், குட்டியை வளர்க்கலாமென்று......"

" சே, சே ! பாலுக்குப் பஞ்சமில்லையா ? யார் சொன்னது ; ஒரு நாளும் ஒரு துளிப்பால்கூட மிச்சமாவதில்லை. இந்த லக்ஷணத்தில் மான் குட்டியாவது, மீன் குட்டியாவது......?"—என்றாள் பொன்னி.

" எனக்குப் பால் வேண்டாம் ! அது குடிக்கட்டும்."

" ஆமாம், அது கொழுக்கவென்று நீ இளைத்துப் போகவேண்டும். சரி சரி, மானைக் கொஞ்சினால் மற்ற வேலைகளைக் கவனிப்பது யார் ? அது பகல் இரவு என்றில்லாமல் எப்போதும் கத்திக்கொண்டும் சுத்திக் கொண்டும் உபத்திரவப் படுத்துமே "

" என்னமோ, எனக்கு ஆசையாயிருக்கிறது. கருங்காட்டு மரைக் குட்டியை வளர்க்கலாம், அது குறும்பு செய்யும். கரடிக் குட்டி கடூரமானது. அம்மா, என்னுடையதென்று சொல்லிக்கொள்ள எனக்கு ஏதாவது வேண்டும், என்னைப் பின் தொடரவும், என் சொற்படி கேட்கவும் " —தன் ஆசையை எப்படி வர்ணிப்பதென்பதை அறியாமல் ஜோதி தயங்கினான். " என்னையே நம்பி அண்டிப் பிழைக்கும் ஒரு சின்னப் பிராணி......?"

" மிருகங்களிலும், மக்களிடையும், எங்கும் 'அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரமான எதுவும் கிடையாது. சரி, சரி, என்னை உபத்திரவிக்காதே. மான், மரை, கரடி என்று மறுமுறை சொன்னால் துடப்பத்தைத் தூக்கிக் கொள்ள வேண்டியதுதான் "—என்று தீர்மானமாகக் கூறினாள் பொன்னி.

இவ்வளவையும் பத்தர் ஒரு மூலையிலிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

மறுநாள் காலை ; பத்தர் தன் பையனிடம் " ஜோதி இன்று கலைமான் வேட்டைக்குப் போகலாம். மான் குட்டிகளைக் கண்டாலும் காணலாம். வீட்டில்பழக்குவது போல் காட்டில் அவைகளைக்காண்பதும் இன்பமானதே " என்று கூறினார்.

அவ்வளவுதான் ; ஜோதி விசிலடித்து நாய்களைக் கூவினான் ; பத்தரும், பையனும், நாய்கள் புடை சூழக் காட்டுக்குக் கிளம்பினர்.

இள வசந்தத்தின் காலைநேர இள வெய்யில் இன்பகரமாயிருந்தது. கதிரவன் பொன்னொளியைக் கருங்காலிகள் இலைக் கிண்ணிகளில் ஏந்திச் சேமித்தன.

வெய்யிலின் வெப்பம் ஜோதியின் பாதத்தில் தாக்கியது. பத்தர் வேகமாக நடக்கிறார், ஜோதி சிரமத்தோடு பின் தொடர்கிறான், ஜூலி முன்னால் தாவித் தாவி ஓடுகிறது. இன்னும் அடிச்சுவடுகள் தென்படவில்லை.

கொஞ்சதூரம் சென்றதும் பத்தர் வேறு திக்கில் திரும்பினார் ; அந்த வழியில் மாட்டுச்சுவடுகள் மண்டியிருந்தன.

" இதோ இரண்டு கலைமான்கள் ஒன்றாய் இணைந்து சென்றிருக்கின்றன—இக்குறிகள் இன்று விடியற்காலம் ஏற்பட்டிருக்கவேண்டும் "—என்றார் பத்தர்.

" எப்படியப்பா கண்டு பிடித்தாய் "என ஆர்வத்தோடு கேட்டான் ஜோதி.

" எல்லாம் பழக்கத்தால்தான் !"

ஜோதிக்கோ அடிச்சுவடுகளெல்லாம் ஒரே மாதிரி யாய்த்தோன்றின. பத்தர் மணலில் விரலால் சித்திரங்கள் வரைந்து ஜோதிக்கு விஷயங்களை விளக்கலானார்.

" குழந்தாய் ! நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். கலைமானுக்கும் பிணைமானுக்கும் காற்சுவடுகளின் வித்தியாசம். பிணையின் சுவடுகள் கலையின் சுவடுகளைக் காட்டிலும் கூர்மையும் மென்மையும் கூடியவை. பழைய சுவடுகளில் காற்று மணலைத் தூவியிருக்கும் ; புதியவற்றில் இருக்காது. ஓடும் மானின் சுவடுகள் அகன்றிருக்கும், நடக்கும்போது நெருங்கியிருக்கும்.

இவ்வாறு ஜோதிக்குப் பாடஞ் சொல்லிவிட்டு. ஒரு புதுச் சுவட்டு வரியைக் காட்டி, ஜூலியை அவைகளின் மேல் மோப்பமிட ஏவினார் பத்தர்.

ஜூலி தலை தாழ்த்தித் தன்னுடைய நீண்ட மூக்கால் சுவடுகளை முகர்ந்துகொண்டே போயிற்று.

இப்போது கருங்காலிச் செறிவுகள் பின் தங்கின : இடையில் வெறு வெளி ; தேவதாரு வரிசைகள் தோன்றின.

அந்த இரண்டு மான்களும் இணைந்து சென்றுள்ளன; அவைகளின் சுவடுகள் நெருங்கியுள்ளன. கலைமான்கள் வசந்தத்தில் நேசமாயிருப்பதும், இலை உதிர்காலத்தில் பிணைமான்களோடு இணைந்தோடுவதும், குட்டிகளை விரட்டித் தம்முள் சண்டையிடுவதும் ஏனென்று ஜோதிக்கு அர்த்தமாவதில்லை.

ஒரு கலை மற்றொன்றைக் காட்டிலும் பெரியது.

"ஒரு கலை சவாரி செய்யத்தக்க பெரிதாயிருக்க வேண்டும்"—என்றார் பத்தர்.

ஊஞ்சலிட்ட தழைமுழைவுகளூடே பாதை சென்றது. நாய்நருவிலிச் செடிகள் தங்கள் மணிபோன்ற மஞ்சள் மலர்களை அசைத்தாடின. இங்கு மான்சுவடுகள் பல மண்டியிருந்தன. பத்தர் ஒரு திராட்சைக் கொடியின் முதிர்ந்து முரடான தண்டைப்புரட்டினார்.

எதிர்பாராதபடி அதன் கீழிருந்த சங்கிலி விரியன் பாம்பு திடீரென்று அவர் காலைத் தீண்டிவிட்டது. ஜோதி அதன் மின் வேகத்தைக் கண்டான்; கருங்கிழற் பாய்ச்சலில், கரிக்குருவியின் கடுவேகத்தில், கரடி நகத்தைக் காட்டிலும் கூர்மையாய் அப்பாம்பு பத்தரை ஒரே வீச்சில் கடித்துவிட்டது. பத்தர் பின்னேக்கித் தடுமாறினார். அவர் கிரீச்சிட்டதை ஜோதி கேட்டான், அவனும் பேச நினைத்தான்; வார்த்தைகள் தொண்டையில் அடைத்துக் கொண்டன; கால்கள் நகரமறுத்தன.

"பின்னல் போ, நாய்களைப் பிடித்துக் கொள்" எனக் கத்தினார் பத்தர்.

அவர் குரல்ஜோதிக்கு ஊக்கங் கொடுத்தது, அவன் நாய்களைப் பிடித்துக்கொண்டான்.

பின்னிய நிழல்களோடு சங்கிலிவிரியன் முழங்காலுயரம் தலை தூக்கி நிமிர்ந்தது; அவன் தந்தையின் அசைவுக்கேற்ப அதன் தலை அப்புறமும் இப்புறமுமாய் அசைந்தாடியது. அதன் உடலின் சங்கிலி வளையங்கள் சப்தித்தன. அவ்வொலியைக் கேட்டு நாய்கள் சீறிச் சிலும்பின; அவைகளின் மயிர்கள் நெட்டு நின்றன, ஜூலி உறுமியவாறே உடலை உதறி விட்டுச் சுவடுகளை நாடி ஓடியது, ரிப்பி குரைத்தவாறே பின் தொடர்ந்தது.

கனவில் நடப்பவர்போல் பின்னோக்கியவாறே நகர்கிறார் பத்தர்; சங்கிலி வளையங்கள் சங்கீதம் பாடுகின்றன. பத்தர் தன் துப்பாக்கியைத் தோளில் மெதுவாய்த் தூக்கி வைத்துப் பாம்பைப் பார்த்துச் சுட்டார். ஜோதி நடுக்கமுற்றான். பாம்பு துள்ளித் துள்ளித் துடி துடித்து உயிரற்று ஓய்ந்தது.

பத்தர் ஜோதியைப் பார்த்தார்; என்னைப் பாம்பு கடித்துவிட்டது என்று கூறியவாறே வலக்கரத்திலுள்ள கடிவாய்களைக் கவனித்தார்: பாம்பின் இரண்டு பற்கள் ஆழமாகப் பதிந்தன; அவற்றினின்றும் துளித்துளியாக ரத்தம் துளித்தது, பற்களிடையே அவரது நாக்கு வரண்டு துவண்டது.

"அப்பா! ரொம்பப் பெரிய பாம்பு"—என்றபடியே கடிவாய்களின் கவனிப்பிலிருந்து தலையைத் தூக்கினார், முகம் சாம்பல்போல் வெளுத்திருந்தது.

"சாவோடு சண்டை இன்னும் தீரவில்லை" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

நேரே திரும்பிக் குறுக்கு வழியாய் வீட்டுக்கு விரைந்தார். குண்டும், குழியும், கல்லும் களறும், முள்ளும் முடையும் என்று பாராமல் வேகமாய்ச் சென்றார். ஜோதி மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்கப் பின் தொடர்ந்தான். மர முழைவுகள் தீர்ந்தன; கருங்காலி மரங்கள் செறிந்த விசாலமான வெளிக்கு வந்தனர்.

பத்தர் திடீரென்று நின்றார்; முன்னுள்ள புதரில் ஏதோ சல சலத்தது; பிணைமானொன்று துள்ளி முன் வந்தது. பத்தர் ஒரு பெருமூச்சு விட்டார். தன் துப்பாக்கியால் அப்பிணைமானுக்குக் குறி பார்த்தார். தன் தந்தைக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று ஜோதி நினைத்தான்; வேட்டையாட இதுவா சமயம்?

பத்தர் மானைச் சுட்டு விட்டார். அப்பிணை ஒரு துள்ளுத் துள்ளி, மல்லாந்து புரண்டு ஒரு கணம் துடித்து மறு கணம் மடிந்தது.

பத்தர் உடனே மானிடம் ஓடினார். அதன் உடலைச் சோதிக்க கத்தியை எடுத்தார். வாஸ்தவத்திலேயே தன் தந்தைக்குப் பைத்தியமேதான்.

அவர் மானின் கழுத்தை அறுக்கவில்லை, வயிற்றைக் கிழித்தார், வலக் கையிலிருந்த கத்தியை இடக் கையில் தாங்கினார். பாம்பின் கடிவாய்கள் மூடி விட்டன. முன்னங்கை கருத்து வீங்கி யிருந்தது. அவர் நெற்றியில் வியர்வை துளித்தது. கடிவாய்களைத் கத்தியால் கீறினார். கறு ரத்தம் குமுறியது, மானுடைய ஈரலை அதன் மேல் வைத்து அழுத்தினார்.

"இது ரத்தத்தை உறுஞ்சுகிறது" என்று தாழ்ந்த குரலில் கூறினார்.

மறுபடியும் ஈரலை நன்கு அழுத்தினார்: எடுத்துப் பார்த்த போது அதுகறும் பசளை நிறத்தோடிருந்தது. வேறொரு பக்கத்தைக் காயங்கள் மேல் அழுத்தினார்.

"ஜோதீ! அதன் இருதயத்தில் ஒரு துண்டை அறுத்தெடு"—என்றார்,

திக்பிரமை யுற்றிருந்த ஜோதி திடீரென்று குதித்தான்; கத்தியுடன் தடுமாறினான். மானின் இருதயத்தை அறுத்தான்.

"இன்னொரு துண்டு!"

மாற்றி மாற்றி அவைகளைக் கடிவாய்களின்மேல் பத்தர் உபயோகித்தார்,

"கத்தியைக் கொடு!"

வீக்கம் அதிகமாயிருந்த இடத்தில் பத்தர் கத்தியால் ஆழமாகக் கீறி விட்டார்.

" அப்பா ! அப்பா ! ரத்தப் போக்கே உன்னைக் கொன்று விடும் "—என்று பயத்துடன் ஜோதி கத்தினன்.

" வீங்கி சாவதைக் காட்டிலும் ரத்தப் போக்கால் வெளிறிச் சாவதே மேல் : ஒருவனை நான் பார்த்திருக்கிறேன்"

அமுக்கி எடுத்த மாமிசத் துண்டில் இப்போது பசுமை கிடையாது. பிணை மானுடைய உடல் நெளியும் உஷ்ணம் உறைந்து விறைத்தது. பத்தர் எழுந்தார்......?

" இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை. நான் வீட்டிற்குப் போகிறேன் நீ பரதர்களிடம் ஓடி இந்த விஷயத்தைச் சொல்லி டாக்டர் விலாசரை அழைத்து வரச் சொல்"—என்ருர்

பத்தர் வீட்டை நோக்கி விரைந்து சென்ருர். ஜோதி அவரைப் பின் தொடர்ந்தான்.

" பின்புறம் ஏதோ சல சலப்பு, அவன் பின்னேக்கினன், ஒரு இளமான் குட்டி புதர் விளிம்பில் இன்னது செய்வதென்று தெரியாது தயங்கி நின்றது. அதன் கரு விழிகள் விரிந்து வியப்பில் மலர்ந்திருந்தன. அதைக் கண்டு அப்பாவைக் கூவினன்.

"அப்பா! இப்பிணைமானுக்கு ஒரு குட்டியிருக்கிறது."

" இருக்கட்டும், அதைக் கவனிக்க இப்போது நேரமில்லை, வா "—என்று பத்தர் தடுமாறினர்.

அந்த மான் குட்டியின் வேதனை நிறைந்த பார்வை அவன் மனதைத் கவ்வியது. ஜோதி தயங்கினன். திகைப்புற்று அது தன் சிறிய தலையைத் தூக்கியது. மெது வாய் இறந்து கிடந்த தன் தாய் மானிடம் சென்று முகர்ந்து பார்த்து ஓலமிட்டது.

" சரி, சரி, சீக்கிரம் வா—என்ருர் அவன் தந்தை.

ஜோதி அவரிடம் ஓடிஞன். அவன் தந்தை அவன் பக்கம் திரும்பி,

"யாரையாவது இந்த வழியாக வரச் சொல், ஒரு வேளை வீட்டை யடையுமுன் நான் வழியில் விழுந்து விட்டால் ஓடு—ஓடு—"

தன் தந்தையின் உடல் வீங்கி வெளிறி வழியில் கிடப்பதா! ஜோதியின் உடல் நடுங்கியது. அவன் ஓடிஞன்—ஓடிஞன்—ஓடிஞன்.

அவன் தந்தை தாங்க முடியாத உடலைத் தாங்கிய வராய்த் தயங்கித்தயங்கி வீட்டை நோக்கித் தள்ளாடிச் செல்லுகிருர்.

## 10

ஜோதி பரதர்கள் வீட்டை நோக்கிப் பாய்ந் தோடுகிருன்.

அவன் கால்கள் அசைகின்றன; ஆனல் உடலும் உள்ளமும் அவற்றின் மேல் அசைவற்றுத் தொங்குவது போல் தோன்றுகிறது. மாட்டு வண்டியின் உருளும் சக்கரங்களிடையே படுத்து உறங்கும் பெட்டியைப் போல்.

அவன் பாதங்கள் மேலுங் கீழுமாய் காற்றேறி மிதி கொண்டு விரைகின்றன. ஆனல் அதே மரஞ் செடி கொடிகள் தான் முன்னும் பின்னும் பாய்ந்து வருகின்றன,

பரதர்கள் வீட்டைச் சூழ்ந்துள்ள நெட்டை நெடு மரங்கள் அவன் நெஞ்சை விலுக்கென்றுகுலுக்குகின்றன. அவர்கள் வீட்டைச் சமீபித்து விட்டதிலேயே அவனுக்கு ஒரு கிளர்ச்சி,

புரியாத ஒரு பயம்-தான்உயிரோடு இருப்பதிலேயே இன்ன தென்று தெரியாத ஒரு கலக்கம், அவனைக் கவ்வுகிறது. இக்கலக்கத்தோடும் ஒரு நம்பிக்கை-அவன் தன் நண்பன் பத்மனைக் கூப்பிடுவான். பத்மன் தன் குரலைக் கேட்டு வருவான். தன் கண் கலக்கத்தை கண்டு அவன் கண்களும் கலங்கும்—இந்த எண்ணம் அவனுக்கு ஊக்கம் தந்தது.

கருங்காலி மரங்களூடே ' பத்மா ! பத்மா ! நான்தான் ஜோதி ' என்று கத்திக் கொண்டே வீட்டு வாசலுக்கு விரைகிறான்.

இன்னம் ஒரு விநாடியில் பத்மன் அவனிடம் வந்து விடுவான், அவசரத்தில் விலங்கு போல் கைகால்களை உதறிக்கொண்டு வருவான்—வேகமாய் வரவேண்டு மென்றால் அப்படித்தான் செய்வது வழக்கம். இல்லை என்றால் பக்கத்திலுள்ள புதர்களிலிருந்து தன் குறுமுயற் கரடியோடு வெளிப்பட்டாலும் வெளிப்படலாம்.

" பத்மா ! பத்மா ! நான்தான் !"

பதிலில்லை, வீட்டின் முன்புற வெளி முற்றத்திற்கு ஓடினான்.

" பத்மா, பத்மா ! பத்மா !"

வீட்டில் விளக்கேற்றி யிருந்தது. சிமிணியில் புகை சுழன்று சுழன்று விம்மியது. கொசுக்கள் வராதபடி சாளரக் கதவுகளெல்லாம் சாத்தப்பட்டிருந்தன,

கதவு திறந்தது. உள்ளே தேங்கிய ஒளியில் பரதர்கள் ஒவ்வொருவரராய் எழுந்து வந்தனர். வனத்தின் பெரிய மரங்கள் வேரோடெழுந்து விரைவது போல, லிங்கர் அவனிடம் வருகிறார்.

" நீ பத்மனை இப்போது பார்க்க முடியாதே " என்றார் பரதர்.

இதைக் கேட்டதும் ஜோதிக்கு அழுகையே வந்து விட்டது.

"அப்பா! அப்பா!...அப்பாவைப் பாம்பு கடித்து விட்டது"—என்று விம்மிப் பொருமினுன்.

பரதர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் வெளிப்படையாக விம்மி விம்மி அழுதான்—தன் னிலையும் தன் தந்தையின் ஆபத்தும் தான் வந்த காரியம் முடிந்ததும் அவனை அழவைத்தன.

# 11

**வீ**ட்டிற்குள் விளக்கு மின்னியது; தன் தந்தையைப் பற்றி விசாரிக்க ஜோதிக்குத் தைரியமில்லை.

நேரே தன் தந்தையின் படுக்கையறைக்குச் சென்றுன்; ஒரு புறம் தன் தாயும், மறுபுறம் டாக்டரும் அமர்ந்திருந்தனர். அவன் தந்தை சிரமத்தோடு மூச்சு விட்டார், முகம் கருத்து வீங்கியிருந்தது.

தன் தந்தையைக் கண்ணுறங்காமல் கண்காணிப்பது தன்னுடைய வேலை என்று ஜோதி கருதினுன். அவருக் காக, அவருடன் கூடி அவரைப் போலவே திணறித் திணறி மூச்சுவிட்டு முழித்திருந்தால் தன் தந்தை பிழைத் துக்கொள்வார் என்று அவன் குழந்தை உள்ளம் நினைத்தது.

தன் தந்தையைப்போல் தானும் ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டான்; அதனுல் திகைப்புற்றுன்; தலைப்பாரம் நீங்கியதுபோல் தோன்றியது; வயிறு காலியாய் வெறுமை தட்டியது. உணவு அவனுக்கு ஊக்கம் தரலாம். ஆனுல், விழுங்க முடியாதே !

தரையில் தளர்ந்து படுக்கை விளிம்பில் சாய்ந்தான். அன்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் நினைத்துப் பார்த்தான்—போன வழியே திரும்பி வருவதுபோல. தன் தந்தையின் அருகில் இருப்பதிலுள்ள சாந்தமும் தைரியமும் க்ஷேமமும் வேறெதிலும் இல்லை என்பதை உணர்ந்தான். அவருடன் இருக்கும்போது இன்பமாய்த் தோன்றுவதெல்லாம் அவரில்லாவிட்டால் துன்பமாய்விடுமே! சங்கிலிவிரியன் நினைப்பு அவன் கோபத்தைக் கிளப்பியது.

அதன் முக்கோண முகமும், மின்னல் வேகமும், வளைவுச் சுருணைகளும் அவன் உள்ளத்தில் ஊடாடின. அவனுடைய தசைநார்கள் உறைவதுபோல் தோன்றின. இனி வன சஞ்சாரம் எப்போதும்போல் இராது என்று தோன்றியது. அதைத் தன் தந்தை சுட்டுச் கொன்றதும், அதைக்கண்டு நாய்கள் பயந்ததும் அவன் கண்முன் நின்றன.

பின், அவன் மனம் பிணைமானைப் பற்றி எண்ணியது; தன் தந்தையின் புண்களின்மேல் அதன் உஷ்ணமான மாமிசத் தசைகள் உறைந்ததின் கொடுமை அவன் உள்ளத்தில் உரைத்தது.

பாவம்! அந்த மான் குட்டி, அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். தன்னைப் போலவே அந்த மான் குட்டியும் அந்த நீண்ட இரவில் தனியாய்த்தாயின்றித் தவிக்குமே! தன் தந்தையைக் காப்பாற்றத்தானே அது தன் தாயை இழந்தது; பசியும், பயமும், திகைப்பும் கலக்கத்துவண்டு, தன் தாயின் விறைத்த உடல் மறுபடியும் எப்போது எழுந்து தனக்கு அன்போடும், ஆதுரத்தோடும் பாலூட்டு மென்று காத்திருக்குமே?

அவனுக்கு அழுகை வந்துவிட்டது; படுக்கையில் தலை புதைத்து விம்மி விம்மித் தேம்பித் தேம்பி அழுதான்

அவன் மரணத்தை வெறுத்தான், தனிமையை நினைத்து மனம் உருகிக் கரைந்தான்.

தன் தந்தையோடு சங்கிலிவிரியன் பாம்புகளுடன் அவன் போராடுகிறான். அவைகள் அவனது காலடியில் ஊர்ந்து செல்லுகின்றன. அவற்றின் சங்கிலிவளையங்கள் சப்திக்கின்றன. பல பாம்புகள்களின் பிணையல் ஒரு பெரிய விரியனாய் மாறி அவன் முகத்திற்கு நேராகத் தலை தூக்கியவாறே முன்னே வருகிறது. இப்போது தாக்கு கிறது ; அவன் வீச்சிட்டுக் கத்த முயல்கிறான், முடிய வில்லை. அவன் கண்கள் தந்தையைத் தேடுகின்றன. அவர் விழித்த கண் விழித்தவாறே விழுந்து கிடக்கிறார், ஒரு சங்கிலிவிரியன் அவர் மேல் தாண்டவம் ஆடுகிறது. கரடியளவு கனமாக அவர் உடல் வீங்கியுள்ளது. ஒவ்வொரு அடியாக அப்பாம்புக்குப் பயந்து அவன் பின்னேறுகிறான் ; அவன் பாதங்கள் நகர மறுக்கின்றன. திடீரென்று பாம்பு மறைகிறது. அந்த அகண்ட பரப்பில் அவன் மட்டும் தனியாய் மான் குட்டியை மார் போடணைத்தவாறு நிற்கிறான். பத்தரையும் காணோம். துக்கம் அவன் உள்ளத்தை உடைத்து விடும்போல் தோன்றியது. தேம்பிக்கொண்டே கனவிலிருந்து கண் விழிக்கிறான்.

அந்த வெறும் தரையில் அமர்ந்தபடியே விறுக்கிட்டு நிமிர்கிறான். வெளியே சூரியன் உதிக்கிறான். தூரத்தில் மரங்களோடு காலை வெளிச்சம் கதிரோடுகிறது. மெதுவாய் எழுந்து நின்று தன் தந்தையைக் கவனிக்கிறான்.

அவர் லேசாக மூச்சு விடுகிறார், இன்னும் காய்ச்சல் அவரை விடவில்லை ; உடல் வீங்கித்தான் இருக்கிறது. எனினும் தேனீக்கள் கடித்தால் ஏற்படும் தியக்கம் மட்டுமே அவர் முகத்தில் தோன்றுகிறது.

அவன் தாய் தலையைப் பின்புறம் சாய்த்தவாறே தூங்குகிறாள். படுக்கையடியில் டாக்டர் ஒரு பக்கமாய்ப் படுத்துறங்குகிறார்.

" டாக்டர், டாக்டர் !"—என்று ஜோதி மெதுவாய்க் கூப்பிட்டான்.

டாக்டர் முண்டி முனகியவாறே தலையைத் தூக்கினார்.

" என்ன ? என்ன ? என்ன ?"

" டாக்டர் !" அப்பாவைக் கொஞ்சம்பாருங்களேன்."

டாக்டர் ஒரு கையை ஊன்றிக்கொண்டே எழுந்தார், சோம்பல் முறித்தார், கண்களைத் துடைத்துக்கொண்டார். பத்தரைப் பரிசோதித்தார்.

" அப்பாடா ! தீர்ந்தது !"

" என்ன ?" —அவன் தாய் எழுந்துவிட்டாள். " இறந்துவிட்டாரா ?"

" இல்லை, பயப்பட வேண்டாம், பிழைத்துக் கொள்வார் "—என்றார் டாக்டர்.

அவன் அம்மா அழலானாள்.

" எதற்காக அழவேண்டும் ?"

" என்னையும், இவனையும் தனியே தவிக்கவிட்டு அவர் போய்விட்டால் என்ன ஆகும் "—என்று பொன்னி பின்னும் அழலானாள்.

"ஏன்? ஜோதிதான் வளர்ந்து வாலிபனாய்விட்டானே. உழவும், விதை விதைக்கவும், விளைவுசெய்யவும் அறுவடை செய்யவும் வேட்டை யாடவும்......?" என்று டாக்டர் அடுக்கினார்.

"அதிலெல்லாம் அவனுக்கு இஷ்டமில்லை, இன்னமும் அவன் சிறுவன்தானே, விளையாடவும், வீணாய்த்

திரியவுமே அவனுக்கு நேரம் போதவில்லை"—என்று பொன்னி சலித்துக்கொண்டாள்.

ஜோதி நாணத்தால் தலை குனிந்தான்—அவன் அம்மா சொல்வதெல்லாம் வாஸ்தவந்தானே.

"அவரோ அவனது சோம்பேறித்தனத்திற்கு உற்சாக மளிக்கிறார்" என்றாள் பொன்னி.

"இந்த உற்சாகத்திற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். அது இல்லாமலே நாங்கள் வாழ்த்துவிட்டோம்"—என்று டாக்டர் ஜோதியிடம் கூறித் திரும்பிப் பொன்னியைப் பார்த்து, "கொஞ்சம் பால்கொண்டு வாருங்கள், அவர் எழுந்திருக்கும் நேரமாயிற்று" என்றார்.

"அம்மா! நான் போய்ப் பால் கறந்துகொண்டு வருகிறேன்"—என்று ஆர்வத்தோடு கூறி ஜோதி வெளிப் பட்டான்.

பிச்சன் பரதன் தாவாரத்தில் தூங்கி வழிந்துகொண் டிருந்தான். ஜோதியைக்கண்டு கண்ணை கசக்கிக்கொண்டு விழித்தான்.

"அப்பா பிழைத்துக்கொள்வாரென்று டாக்டர் கூறினார்"—என்றான் ஜோதி.

"நல்ல வேளை, அவர் இறந்ததாக நான் கண்ட கனவு பொய்யாயிற்றே"—என்றான் பிச்சன்.

இளங்காலை இன்பமயமாயிருந்தது. தென்னல் தேவ தாரு மரக்கிளைகளில் சிலிர் சிலிர்த்தது; காலைப் பொன் னொளி தன் நீண்ட கரங்களால் மரங்களிடையேயொளியைப் பரப்பின. மரக்கிளைகளின் மேல் மணிப் புறுக்கள் பறந்தன.

ஜோதி பால் கறக்கிறான்; பசு அவன் வைத்த வைக் கோலைக் கறித்துக்கோண்டே பரமசாதுவாய்ப் பாலைத்

தருகிறது. அவன் சிந்தனை திரிகிறது. ஆகா! பசுவின் தியாகமே தியாகம்; வரண்டு நைந்த சத்தில்லாத வைக் கோலுக்குப் பதிலாக வானமுதம் போன்ற பாலைக் கொடுத்துதவுகிறதே!

அவன் மனம் மான் பிணையையும் குட்டியையும் நினைக்கிறது பாவம்! அந்த மான்குட்டி பசியால்வாடுமே? ஒரு வேளை மரணத்தால் விறைத்த தாய்மானின் முலைக் காம்புகளை வீணுகக் கறிக்குமோ? இல்லையேல், ஓநாய்கள் கிறுபட்ட மானுடலைக் கூறுபோட்டுத் திரித்திரியாகக் குலைத்திருந்தாலும் இருக்கலாம். மான் குட்டியின் மென்மையான உடலையும் கிழி கிழி யென்று கிழித்திருக் கவும் கூடும்.

இதையெல்லாம் எண்ண எண்ணகாலையிலெழுந்ததும் தன் தந்தை பிழைத்துக்கொண்டதால் ஏற்பட்ட இன்பக் களிப்பு துன்பக் கருக்கலாய் மாறுகிறது.

ஜோதி வீட்டுக்குள் சென்றான், பாலைப் பொன்னி யிடம் கொடுத்தான் அவள் அதை வடிகட்டி ஒரு கிண்ணி நிரம்ப விட்டு நோயாளிக்குக் கொடுக்கக் கொண்டு போனாள். ஜோதியும் பின்தொடர்ந்தான். பத்தர் விழித்துக் கொண்டிருந்தார், இவர்களைக் கண்டதும் மெல்லியதோர் புன்னகை செய்தார்.

“சாவு எனக்காக இன்னம் கொஞ்சகாலம் காத் திருக்கத்தான் வேண்டும்!”—என்று முனகினார்.

“எப்படியோ, பிழைத்துக்கொண்டீர்; எப்படி யென்று எனக்கே புரியவில்லை.”

பிச்சன் பரதன் அறைக்குள் வந்தான்; கடு நகையிற் புன்னகை புரிந்தான்.

“உடல் ஓய்ந்து உருக்குலைந்துள்ளது, ஆனாலும் உயிரிருக்கிறதே; அதுவே போதும்” என்றான்.

டாக்டர் கொடுத்த பாலைத் தாகத்தோடு பருகினார் பத்தர்.

அவ்வளவுதான். அவரது கண்கள், சொருகின, சொக்கின "இப்படியே ஒரு வாரம் ஓரேயடியாகத் தூங்கலாமென்று தோன்றுகிறது"...என்றார்.

"அப்படித் தூங்கவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். அதைவிட அதிகமாய் நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை."

டாக்டர் உடல் நிமிர்த்தி ஒரு முறை சோம்பல் முறித்தார்.

"அவர் உறங்கினால் அறுவடையை யார் கவனிப்பது?" என்றாள் பொன்னி.

சிறிது விவாதத்திற்குப் பிறகு பிச்சன் உதவியுடன் ஜோதி பத்தரின் வேலைகளைச் செய்வதென்று தீர்மானிக்கப் பட்டது.

அன்று காலை ஆகாரத்தின் போது ஜோதியின் நினைவெல்லாம் மான் குட்டியின் மேலேயே நிலைத்திருந்தது. பரிதாபம் அவன் உள்ளத்தை உருக்கியது.

துரிதமாக மற்றவர்களுக்கு முன் சாப்பிட்டு விட்டு, மெதுவாய் ஒருவருக்கும் தெரியாமல் தன் தந்தையின் அறைக்கு வந்தான்.

அவர் விழித்துக்கொண்டு தானிருந்தார்; கண்கள் தெளிவாயிருந்தன.

"அப்பா! இப்போது எப்படி இருக்கிறது?"—என்று விசாரித்தான் ஜோதி.

"ஓய்வைத் தவிர வேறொன்றுமில்லை. ஆபத்துச் சமயத்தில் வீணே கலங்காமல் உன் கடமையை உறுதி

யோடு செய்தாயே ; அதற்காக நான் பெருமை யடைகிறேன் !"

" அப்பா...... ?"

" என்ன வேண்டும் ? ஏன் தயங்குகிறாய் ?"

" அப்பா ! அந்த மானும் குட்டியும் உனக்கு நினைவிருக்கிறதா ?"

" குழந்தாய் ! அவைகளை எப்படி மறக்கமுடியும், அந்த மானிறைச்சிதானே என் உயிரைக் காப்பாற்றியது ?"

" அப்பா ! அந்த மான்குட்டி இன்னும் அங்கேயே இருக்கலாம். அது பசியால் பரிதவிக்குமே."

" ஆம், அப்படித்தான் நானும் நினைக்கிறேன் " என்றார் பத்தர்.

" அப்பா ! எனக்கோ வயது வந்துவிட்டது ; பால் தேவையில்லை. காட்டுக்குப்போய் அந்த மான் குட்டியை எடுத்து வரலாமென்று...... ?"

" வீட்டில் வளர்க்கவா ?"

" ஆமாம்."

" பத்தர் கூரையைப் பார்த்தவாறே சிந்தனையில் ஆழ்ந்தார்.

" அப்பா ! அக் குட்டியை வளர்க்கச் செலவு அதிகமாகாது. கொஞ்ச நாளில் அது தழை குழைகளைக் கறித்து வயிற்றை நிரப்பிக்கொள்ளும். அதன் தாயை நாம் கொன்று விட்டோமே, பாவம், அது என்ன செய்யும் ?"

" வாஸ்தவந்தான் ; அதைத் தனியாய்த் தவிக்க விடுவது பெரிய பாவச் செயலேயாகும், உறங்கிய என்னுயிர் உயிர்த்தது, அம்மானால் தானே ; எனவே, எனக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை."

" அப்படியானல் நான் பிச்சனேடு சென்று அதைக் கண்டு பிடித்து...?"—

" எதற்கும் உன் அம்மாவிடம் நான் அனுமதி கொடுத்ததாகச் சொல் " என்ருர் பத்தர்.

ஜோதி தன் தாயிடம் சென்ருன் ; அவள் அப்போது தான் காபி ஆற்றிக்கொண்டிருந்தாள்.

" அம்மா ! அந்த மான் குட்டியைக் காப்பாற்றிக் கொண்டு வரச் சொன்ஞர் அப்பா "—என்று மெதுவாய்க் கூறினன்.

ஆற்றிக்கொண்டிருந்த காப்பிக் கோப்பை அந்தரத்தி லேயே நின்று விட்டது.

" மான் குட்டியா ? ஏது ?" என்ருள்.

" அதுதான், அப்பா கொன்ற பிணமானின் குட்டி, அதன் ஈரலும் இதயமுமே விஷத்தை உறுஞ்சி அப்பா வைக் காத்தது !" என்ருன் ஜோதி.

அவள் ஆவென்று வாயைப் பிளந்தாள்.

" ஊம், கருணைக்காக......?"

" அக் குட்டியைப் பட்டினியாய்ச் சாக விடுவது பாவம் என்று அப்பா சொல்லுகிருர்."

" அவர் சொல்வது சரிதான். வாழ்க்கையில் எதுவும் சும்மா கிடைப்பதில்லை. கட்டாயம் அந்தக் குட்டியைக் காப்பாற்றத்தான் வேண்டும் " என்று ஆமோதித்தார் டாக்டர்.

" ஊம் ! நீ உன் பங்குப் பாலை அந்தக் குட்டிக்குக் கொடுப்பதானல்......இல்லையேல் அதற்கும் ஆகாரம் தர நம்மிடம் ஒன்றுமில்லை "—என்ருள் பொன்னி.

" அதைத்தான் நானும் சொல்லுகிறேன். எனக்குப் பால் வேண்டாம். எல்லாம் கொஞ்சநாளைக்குத் தானே.

அப்புறம் அது தானுகத் தன் ஆகாரத்தைத் தேடிக் கொள்ளுகிறது !'' என்ருன் ஜோதி.

இதற்குள் டாக்டர் எழுந்து விட்டார் காபியைக் குடித்துவிட்டு ; " இனிப்பயமில்லே ; அப்படி ஏதாவது வியாதி மறுக்களித்துக் கொண்டால் எனக்கு உடனே சொல்லியனுப்புங்கள்.''

" டாக்டர் ஸார் ! உங்களுக்கு எவ்வளவு தர வேண்டும். இப்போது எங்களிடம் பணம் கிடையாது. அறுவடையானதும்......?'' என்று தயங்கிஞள் பொன்னி.

" பணமா ? எதற்கு ? நான் என்னசெய்துவிட்டேன். நான் இங்கு வரு முன்பே அவர் மானிறைச்சியால் காப் பாற்றப்பட்டு விட்டாரே ! ஓரிரவு தங்குமிடமும், நல்ல சாப்பாடும், டிபனும் எனக்குச் சும்மா கிடைத்ததே போதாதா. வேண்டுமானுல் கரும்புகளேவெட்டி கொஞ்சம் கருப்பஞ்சாறு அனுப்பி வையுங்கள் '' என்ருர் டாக்டர்.

" டாக்டர் ! டாக்டர் ! பொன்னியின் குரல்உணர்ச்சி யால் விம்மியது, உங்களேப்போன்ற நல்லவர்களும் இவ்வுலகத்திலிருக்கிருர்களே !''

" நல்லவர்களுக்கென்ன ; உன் கணவர் ரொம்ப நல்லவர் ; அவருக்கு நிறையப் பால் கொடுங்கள் ;அப்புறம் கீரைகளும், கிடைக்குமானுல் புதிய இறைச்சியும் கொடுங்கள் " என்று பணிவுடனுரைத்தார் டாக்டர்,

" கிடைக்காமலென்ன, நானும் ஜோதியும் அதைக் கவனித்துக்கொள்ளுகிருேம் ''—என்ருன் பிச்சன்.

டாக்டர் புறப்பட்டுவிட்டார். சுவரில் மாட்டியிருந்த வெண்கரடித்தோல் பெட்டி அவர் கண்ணில் பட்டது. அது அன்று கிடைத்த வெண்கரடித் தோலாலானது.

ஜோதியிடம் மற்றவர்களுக்குத் தரக்கூடிய விலை யேறப் பெற்ற பொருள்கள் வேறொன்றும் கிடையாது எனவே, அதை எடுத்து ஜோதி டாக்டருக்களித்தான்.

'இது என்னுடையது, இதை எடுத்துக் கொள் ளுங்கள் !

"வேண்டாம் வேண்டாம் உன் பொருளை-?" என்றார் டாக்டர்.

"இல்லை, இதனால் எனக்கு உபயோகமில்லை: வேண்டுமானால் நான் வேறொன்று செய்துகொள்வேன். தாங்கள் இதை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்றான் ஜோதி.

"ரொம்ப சந்தோஷம்" டாக்டர் முகம் களிப்பால் மலர்ந்தது. "இந்தப் பரிசை நான் என்றும் மறக்க மாட்டேன்."

டாக்டரின் களிப்பு ஜோதிக்கும் பெருமை அளித்தது.

## 12

**வ**னமெங்கும் ஒரே அமைதி: அவன் பாதங்கள் பட்டு முறியும் குழை குச்சிகளைத் தவிர எல்லாம் நிசப்தமே !

ஒரு வேளை வழி தவறி வந்து விட்டோமோ என்று ஜோதி நினைத்தான். அதே சமயம் அவன் முன் ஒரு கருங் கா்க்கைச் சிறகடித்து வானிற் பறந்தது.

அவன் கருங்காலிகள் சூழ்ந்த வன வெளிக்கு வந்து விட்டான். அங்கு மரக்கிளைகளின் வட்டத்தில் வரிசை யிட்டுக் கருங் காக்கைகள் மானின் செத்த உடலைக் கொத்தத்தயாராயிருந்தன. இவனைக் கண்டதும் அவை

கத்தின. அவன் ஒரு கிளையை ஒடித்து அவைகளை விரட்டினான். அவைகள் தாவி அடுத்துள்ள மரங்களில் அமர்ந்தன.

மானின் சவத்தைச் சுற்றியுள்ள புல் முழைவை ஆராய்ந்தான். மான்குட்டி நின்ற புதர் முழைவை விலக்கிப் பார்த்தான். அந்த இடைவெளியைச் சுற்றி சுற்றிச் வளைய வந்தான். சப்தமுமில்லை, சம்சயிக்கத் தக்க குறிகளையும் காணோம். கருங்காக்கைகள் பொறுமை இழந்து சிறகடித்தன.

ஒரு குறும்பனை மரத்தடியில் கூர்மையும் வடிவும் மிகுந்த மான்குட்டியின் அடிச்சுவடுகள் தெரிந்தன. மெதுமாய் ஊர்ந்து அக்குறும்பனையைத் தாண்டிச் சென்றான்.

எங்கோ ஒரு சலசலப்பு ஜோதி தயங்கிப் பின் வாங்கினான்.

அந்த மான் குட்டி தலையைத் தூக்கி அவனைப் பார்த்தது. அது திகைப்புற்றுத் தலையாட்டியது. அதன் தெண்ணீரெனத் தெளிவான கண்கள் அவனைக் கூர்ந்து நோக்கின. அதன் உடல் நடுங்கியது. பாவம்! அது எழுந் திருக்கவோ ஓடவோ முடியவில்லை. தான் அசைந்தால் அது ஓடி விடுமோ என்று ஜோதிக்கு பயம்.

“நான்தான்” என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

மான் குட்டி தன் நீள் மூக்கைத் தூக்கி அவனை முகர்ந்து பார்த்தது. மெதுவாய்த் தன் வலக் கரத்தை நீட்டி அதன் கழுத்தில் வைத்தான். அந்தப் பரிசம் அவனைப் பரவசப் படுத்தியது.

கொஞ்சம் கொஞ்சமாய் ஊர்ந்து ஊர்ந்து தவழ்ந்து அதன் பக்கத்திற்கு வந்துவிட்டான் ஜோதி. அக் குட்டி

யைத்தன் கைகளால் மென்மையாய் அரவணைத்தான். ஒரு லேசான சிலிர் சிலிர்ப்பு அதன் உடலில் உலுக்கி ஓய்ந்தது. மெதுவாய் அதைத் தட்டிக் கொடுத்தான். வெண் கரடித் தோலைக் காட்டிலும் இம்மான் குட்டியின் தோல் மென்மையாயிருந்தது. தெள்ளத் தெளிந்து பசும்புல்லின் பத்தோடு பளபளத்தது,

தயக்கத்தோடு தரையைவிட்டு எழுந்தான். மான் குட்டியைக் கைகளால் அணைத்தவாறே தூக்கினான்; அது கனக்கவில்லை. அதன் கால்கள் செயலற்றுத் தொங்கித் துவண்டன. அவைகள் நீண்டிருந்தன; எனவே தரையிற் படாதபடி உயரத்தில் தூக்கிப் பிடிக்க வேண்டியிருந்தது.

அது இறந்த தன்தாயைக் கண்டால், அல்லது அதன் வாசனையை மோப்பம் பிடித்தால் எங்கு கத்திக்கொண்டு தன் கையைவிட்டு ஓடிவிடுமோ என்று ஜோதிக்குப் பயம்.

புதர்களை விலக்கி வழி செய்துகொண்டு மானை அணைத்தவாறே வீட்டைநோக்கி நடந்தான். அதன் கால்கள் புதர் முழைவில் மாட்டிக் கொண்டன. அவற்றை மெதுவாய் விலக்கினான். முட் புதர்கள் அதன் முகத்தின்மேல் படாதபடி ஜாக்கிரதையாக முன்னேறினான்.

அவனது நடையசைவால் அதன் தலையும் மேலும் கீழுமாய் அசைந்தது. தன்னை வெறுக்காமல் அந்தக் குட்டி ஏற்றுக் கொண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

வீட்டருகில், பாதைக்கு வந்ததும் மான் குட்டியை இறக்கிவிட்டுத் தானும் ஒரு மர நிழலில இளைப்பாறினான். துவளும் கால்களோடு அது தள்ளாடியது; அவனைப் பார்த்துக் குரலெடுத்துக் கூவியது.

“ பயப்படாதே, கொஞ்சம் இளைப்பாறியதும் உன்னை எடுத்துக்கொள்ளுகிறேன் !” என்றான் ஜோதி.

அவன் அப்பா கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது எடுத்து வந்த மான்குட்டியைக் கீழே விட்டுவிட்டால் அது பின்னுலேயே தொடர்ந்து வருமென்று. உடனே அவன் மெதுவாய் நடக்கலானுன். மான் குட்டி அவனைப் பரிதாபமாய்ப் பார்த்தது. அவன் திரும்பி வந்து அதைத் தட்டிக் கொடுத்துவிட்டு சில அடிகள் முன் சென்றுன். அதுபாவம் அவனிடம் தள்ளாடித் தடுமாறி வந்து பரிதாபமாய்க்கத்தியது.

ஆகா ! அது அவனைப் பின்தொடர்ந்துவர ஆசைப் படுகிறது; அது அவனுடையது, அவனுக்கே சொந்த மானது. அதை அணைத்துக் கொண்டான் ; இனித்தன் தனிமை தீர்ந்ததென்று சந்தோஷமுற்றுன்.

## 13

ஆனி வெய்யில் அலையாடுகிறது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் உருளைக் கிழங்குகள் கடல்போலப் பரந்து கிடக்கின்றன ; பாத்திகள் கண்ணுக்குத் தெரியவில்லை.

காலை மணி பத்து இருக்கலாம். கால்பங்குக்குமேல் அறுவடையாய்விட்டது ; பாக்கியுள்ள பகுதியோ அள வற்றுத் தொடுவான்வரை அகண்டு கிடக்கிறது.

ஜோதி வியர்வை வழித்துக்கொள்ளுகிறுன். உச்சிக்கு முன் அறுவடையை முடித்துவிட்டால் அவன் பரதர்கள் வீட்டுக்குப் போகலாம். பத்மனைப் பார்க்கலாம் ; தன் புது மான்குட்டிக்கு நாமகரணம் செய்யலாம்.

மான்குட்டி அருகிலுள்ள பெர்ரி மர நிழலில் படுத் திருக்கிறது. ஆரம்பத்தில் அது வேலைக்கு இடைஞ்சலா

யிருந்தது. உருளைக்கிழங்குப் பாத்திகளில் பாய்ந்து குழைகளைக் குலைத்து, பத்திகளைச் சிதைத்தது; அவன் முன் நின்றுகொண்டு விலக மறுத்து விளையாடக் கூவியது, புதிதில் வியப்பால் விரிந்திருந்த அதன் கண்கள் இப்போது உணர்ச்சியோடு ஒளி வீசின—ஜூலியின் கண்களைப் போல் அறிவுடன் பிரகாசித்தன. அதைப் பட்டியில் அடைக்க நினைத்தபோது, நல்ல வேளை, அதே சமயம் அது நிழலிற் படுத்து இளைப்பாறலாயிற்று.

அது பக்கத்திலில்லாவிட்டால் ஜோதிக்கு வேலை ஓடாது. இன்றுபோல் என்றும் அறுவடை இவ்வளவு லேசாய் இருந்ததில்லை. அதிகரித்த சுறுசுறுப்போடு அறுவடையைத் தொடர்ந்தான், பத்தி பத்தியாய் அவன் கத்தி பட்டுச் சாய்ந்தன. அவன் வாய் சீரற்ற ஏதோ ஒரு சங்கீதத்தை முணுமுணுக்கிறது.

அவன் தன் மான் குட்டிக்கு வைக்கப் பல பெயர்களைப் பற்றி யோசித்தான். ஒன்ருவது சரிப்படவில்லை. பத்மன்தான் பேர் வைக்க லாயக்கு—அவன் தன் செல்லப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் வைத்துள்ள பேர்கள் அழகானவை—அற்புதமானவை.

தந்தை படுத்தது முதல் ஜோதி ரொம்ப ரொம்ப சுறுசுறுப்பாய் வேலை செய்திருக்கிருன், பத்தர் பிழைத்துக் கொண்டு விட்டார், பலம் பெற்று வருகிருர், எனினும் அடிக்கடி மயக்கமுறுகிருர். அவருக்கு ஓய்வு தரவேண்டும் என்ற எண்ணத்தை மறவாமலிருக்க முயன்ருன், அதே நினைவாய் வேலை செய்தான்.

மான்குட்டி பக்கத்திலிருப்பது அவனுக்கு மகிழ்ச்சி யளித்தது; அதை மறுக்காது ஏற்றுக்கொண்டதற்காக அவன் தன் தாய்க்கு வந்தனம் செலுத்தினுன். அதற்குப் பாலொன்றும் அதிகமாய்த் தேவையில்லை என்பது வாஸ்

தவமே ; ஆனால், அது அவன் அம்மாவைப் பல தடவை களில் உபத்திரவம் செய்தது. ஒரு நாள் சமையலுக்குப் பிசைந்து வைத்திருந்த கோதுமை மாவை அது காலி செய்துவிட்டது. அதுமுதல் அது பசிய இலைகளையும், தானியங்களையும், ஊறவைத்த கடலைகளையும், ரொட்டித் துண்டுகளையும் உண்ண ஆரம்பித்துவிட்டது.

அதைப் பட்டியில் கட்டிவிட்டுத் தான் பத்தர்கள் சாப்பிடுவார்கள் ! இல்லையேல் அது கூச்சலிட்டவாறே குதித்துத் தட்டுமுட்டுச் சாமான்களைத் தவிடு பொடி செய்துவிடும். நாய்கள் முதலில் மான்குட்டியை வெறுப் போடு பார்த்தன. நாளாக நாளாக வெறுப்பு நீங்கி விட்டது. அவன் தாயும் அதைப் பற்றிக் குறை கூறுவ தில்லை. எனினும் அதனிடம் அக்கறை கொண்டாள் எனவும் கூறமுடியாது. ஜோதி எத்தனையோ முறை தன் தாய்க்கு மான்குட்டியிடம் அன்புண்டாக்க முயற் சித்தான்.

“ அம்மா ! இதன் கண்களைப் பார், எவ்வளவு அழகா யிருக்கின்றன ?”

“ ஆமாம், ரொம்ப அழகுதான், தான்யங்களைத் திருடித் தகடுதித்தம் செய்ய அக்கண்கள் வெகு தீட்சண்யமாக யிருக்கின்றன.”

“ அதன் வாலைப் பார், எவ்வளவு......?”

“ எல்லாம் ார்த்துக் கொண்டுதானிருக்கிறேன்.”

“ கள்ளங்கபடற்ற......”

“ கள்ளங் கபடைத் தவிர வேறொன்றுந்தான் கிடை யாதே !”

சூரியன் உச்சிக்கு வருகிறது. ஜோதி தன் வேலையை அநேகமாய் முடித்துவிட்டான். இன்னும் ஒன்றிரண்டு பாத்திகளே பாக்கியாயிருக்கின்றன.

அவனுக்குத் தாக மெடுக்கிறது. வீட்டுக்குப்போய்த் தண்ணீர் குடித்து வர விரும்பினான். எனினும் வேலை கெட்டு விடுமே என்று விரைவாய் அறுவடையில் ஈடுபட்டான்.

சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். இன்னம் ஒரு பாத்தி பாக்கியிருக்கிறது. பகல் சாப்பாட்டிற்குள் அதை முடிக்காவிட்டால் பத்மனைச் சந்திக்க முடியாது.

வேலிக்கப்பால் யாரோ வருவதுபோல் தோன்றியது. அங்கே பார்த்தான். பத்தர் மகனது வேலைப் பாங்கைக் கண்காணித்தவாறே அங்கே நின்றுகொண்டிருந்தார்.

"அப்பா! என்னால் முடியவில்லை; காலையிலிருந்து ஒரு கணங்கூட நான் சும்மாயிருக்கவில்லை. எனினும் இன்னும் ஒரு பத்திபாக்கியாயிருக்கிறது."

"ஊம்! நான் சொன்ன சொல் மாற மாட்டேன்; இருந்தாலும், வேறொரு வகையான பேரம் செய்வோம். எனக்கோ ஊற்றுக்குச் சென்று குடி நீர் கொண்டு வர முடியாது. நீ போய் அந்த வேலையை முடித்து விடு! பாக்கியுள்ள அறுவடையை நான் பார்த்துக் கொள்ளு கிறேன்"—என்றார் பத்தர்.

அவ்வளவுதான்; ஜோதி மண் கொத்தியைக் கீழே போட்டுவிட்டு வாளிகளை எடுத்துவர வீட்டுக்குள் ஓடினான்.

## 14

**அ**ன்று சாப்பாட்டிற்குப் பின் பத்மனைக் காண ஜோதி பரதர்கள் வீட்டிற்குப் பிரயாணமானான்.

மான்குட்டி முன்னும் பின்னுமாய் ஓடிப் பாதை யோரத்துப் பசியதழைகுழைகளைச் கறித்தவாறே அவனுடன் சென்றது.

சில சமயங்கள் அது அவன் பக்கத்திலேயே நடந்து சென்றது. அப்போதெல்லாம் அவன் மகிழ்ச்சியோடு அதன் கழுத்தைக் கையால் தழுவியவாறே அதன்நாற்கால் பாய்ச்சலுக் கேற்பத் தன் இருகால் நடையை இணைத்து நடப்பான்.

பாதை அருகில் இருந்த பைங்கொடி ஒன்றைப் பிடுங்கி மான் குட்டியின் கழுத்தில் கட்டிப் பிடித்துக் கொண்டான். அப்பைங்கொடியில் பூத்திருந்த செம் மலர்கள் அதன் கழுத்தைச் சுற்றி அலங்காரம் செய்தன; இப்போது மான்குட்டியைப் பார்த்தால் தன் தாயார்கூட மகிழ்ச்சி யடைவாள் என்று ஜோதி நினைத்தான்.

இப்போது பரதர்கள் வீட்டுக்குச் செல்லும் நேர் பாதைக்கு ஜோதி வந்துவிட்டான். உடனே ஓடலானான். துரிதமாகச் சென்று தன் மான்குட்டியைப் பத்மனுக்குக் காட்டவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

தன் நண்பனை ஆச்சரியத்திலாழ்த்தவேண்டும். பத்மன் வனத்திலிருக்கலாம், அல்லது வீட்டின் பின் புறம் தன் பிராணிகளுடன் விளையாடிக்கொண்டிருக்கலாம், அல்லது, தேக அசௌக்கியம் இன்னும் தீராதிருந்தால் படுக்கையில் படுத்திருக்கலாம்; எப்படியிருந்தாலும் தான் அவனைத் தனியாய்ப் பார்க்கவேண்டும். அந்த மான் குட்டி அவன் பக்கத்தில் இருக்கும், அதைப் பார்த்துப் பத்மன் முகம் பிரகாசமடையும். அவன் தன் கொக்காணி உடலோடு கோணி நடந்து தன் அன்பு நிறைந்த—ஆனால் குறுகிக் கூனிய கைகளால் மான்குட்டியைத் தழுவிக்கொள்வான். அதைக் கண்டு நான் சந்தோஷமடைவேன். என் சந்தோஷத்தைக் கண்டு அவனும் சந்தோஷத்தோடு புன்னகை புரிவான் என்றெல்லாம் ஜோதி கற்பனை யுலகில் சஞ்சரிக்கலானான்.

இப்போது வீட்டருகில் வந்து விட்டான். வீடு உறக்கத்திலாழ்ந்ததுபோல் தோன்றியது. புகைப் போக்கியில் புகையைக் காணோம். இன்று, வழக்கத்திற்கு விரோதமாய் நாய்களுள் ஒன்றுகூடக் காணோம். எங்கோ வீட்டின் பின்பக்கத்திலிருந்து ஒரு வேட்டைநாய் ஊளையிட்டது. ஜோதி பத்மனைக் கூப்பிட்டான்.

"பத்மா! பத்மா! நான்தான் ஜோதி!"

நாயின் ஊளை உறுமியது. வீட்டிற்குள் தரைமேல் ஏதோ நாற்காலியை இழுப்பதுபோல் சப்தம் கேட்டது. கதவு திறந்தது; பிச்சன் வெளிப்பட்டான். அவன் ஜோதியைப் பார்த்தான். தன் கையால் வாயை மூடி ஏதோ சைகை செய்தான். அவன் கண்கள் வெளிறியிருந்தன. அவன் ஒருவேளை குடித்திருப்பானோ என்று ஜோதி நினைத்தான்.

"நான் பத்மனைப் பார்க்க வேண்டும்; அவனுக்கு என் மான் குட்டியைக் காட்டவேண்டும்!"

பிச்சன் ஏதோ தன்னைக் கடிக்க வந்த கருவண்டொன்றை விலக்குவதுபோல் கைகளை உதறினான்; தன் உலர்ந்த உதடுகளை நனைத்துக்கொண்டான்.

"நான் அவசியம் அவசரமாய் அவனைப் பார்க்க வேண்டும்."

"அவன் இறந்து விட்டான்!"

ஜோதிக்கு விஷயம் இன்னும் விளங்கவில்லை, பழுப்புச் சருகுகள் அவன் கண்முன் பறந்தன. ஆனால், அவைகளைத் தொடர்ந்து ஒரு உறைபனிப் படலம் சூழ்ந்தது. அவன் உடலில் ஏதோ அசைவற்று விறைத்தது. என்னமோ அவனைக் கலக்கியது.

"நான் அவனைப் பார்க்க வந்தேன்" என்று மறுபடியும் முனகினான்.

" நீ தாமதித்து விட்டாய். நான் உங்களுக்குச் சொல்லி அனுப்ப நினைத்தேன். ஆனால், நேரமில்லை. டாக்டரைக் கூப்பிடக்கூட அவகாசமில்லை. ஒரு கணம் மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். மறுகணம் பத்மன் மூச்சு நின்றுவிட்டது. ஊதி அணைந்த விளக்குத்திரி போல் அவன் உயிர் ஒரு கணத்தில் ஓய்ந்துவிட்டது, வா, வந்து நீயே அவனைப் பார்" என்று அழைத்தான் பிச்சன்.

அடிமேல் அடி வைத்து மெதுவாய் அவன் பின் சென்றான் ஜோதி. உள்ளே பரதர் குடும்பம் செயலற்றுச் சோர்ந்திருந்தது. அவர்கள் அவனைப் பார்த்ததாகவே தெரியவில்லை. பிச்சன் அவன் கையைப் பற்றிப் பத்மன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

பத்மன் அப்பெரும் படுக்கையின் நடுவே குறுகிக் குவிந்து கிடந்தான்; கண்கள் மூடியிருந்தன.

அவனை ஒரு வெண் துணியால் தாவாய் வரையில் மூடி இருந்தனர். கைகளிரண்டும் மார்பின்மேல் கட்டப் பட்டுக் கிடந்தன. அவன் தாய் லிங்கம்மா படுக்கை அருகில் அமர்ந்து அழுதுகொண்டிருக்கிறாள்.

"என் மகன், சோணி! இருந்தாலும் என் மகனை இழந்து விட்டேனே?"

ஜோதிக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. எலும் பேறிக் கொக்கரித்த அந்த முகம் பார்க்கப் பயங்கரமா யிருந்தது. அது பத்மன் முகமேதான், இருந்தாலும் அவன் முகம்போலில்லை. பிச்சன் அவனைப் படுக்கை யருகில் ஈர்த்தான்.

" அவனுக்குக் காது கேட்காது, எனினும் அவனோடு கொஞ்சம் பேசேன்."

ஜோதியின் தொண்டை அசைந்தது. ஆயினும், வார்த்தைகள் வரவில்லை. பத்மன் இறுகிப் போய் முறுக்கிக் கொண்ட மெழுகுருவம்போல் தோன்றினான்.

" ஹா !"—என்று விசும்பினான் ஜோதி.

அவனுக்குப் பிரமை நீங்கியது. பேசிவிட்டா னல்லவா? ஆனால், மேலே பேச முடியவில்லை. ஏதோ குரல்வளையை அடைப்பதுபோல் தோன்றியது.

பத்மனின் மௌனம் பயங்கரமாயிருந்தது. மரணம் இன்னதென்று ஜோதிக்கு இப்போதுதான் விளங்கியது. அது அசைவற்ற, பதிலற்ற ஆழ்ந்த மௌனம். இனிப் பத்மன் தன்னுடன் பேசமாட்டான். துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது; பிச்சன் மார்பில் முகம் புதைத்த வாறு ஜோதி விம்மினான். பிச்சன் தன் பெருங் கைகளால் அவனை அணைத்துக் கொண்டான். நெடுநேரம் அதே நிலையில் நெட்டுயிர்த்து நின்றான் ஜோதி.

"பாவம்! உன்னால் இதைப் பார்த்துச் சகிக்க முடியாதென்று எனக்குத் தெரியும்!" என்றான் பிச்சன்.

இருவரும் அந்த அறையை விட்டு வெளிப்பட்டனர். லிங்கப்பரதர் ஜோதியைக் கூப்பிட்டார் அவன் அவரிடம் சென்றான், அவர் அவனைத் தட்டிக் கொடுத்து மற்றவர் களைக் காட்டி.

" இவர்களில் எவராவது போயிருந்தாலும் நான் இவ்வளவு கவலைப் படமாட்டேன்; அவன், பாவம்! ஒன்றும் தெரியாதவன்; அவனைக் கடவுள் எடுத்துக் கொண்டார் "—என்று வருந்தச் சாய்ந்தார் லிங்கர்.

ஜோதி மெதுவாய் வீட்டின் பின்புறம் சென்றான். பத்மன் வளர்த்த செல்வப் பிராணிகள் அங்கே கவனிப்பா ரற்றுத் தியங்கின. ஜோதி அவைகளுக்கு ஆகாரம் கொடுத்துத் தண்ணீரும் கொடுத்தான். பத்மன் இனிச் செய்ய முடியாத கடமையைத்தான் செய்வது ஜோதிக்கு இன்னதென்றுரைக்க முடியாத ஒரு மன நிம்மதியைக் கொடுத்தது.

அன்றைய மாலைப்பொழுது முடிவில்லாமல் நீண்டு கொண்டே போயிற்று. பரதர்கள் அவனைக் கவனித்த தாகத் தெரியவில்லை; எனினும் அவன் போவதையும் யாரும் விரும்பவில்லை என்றும் தோன்றியது; அப்படித் தோன்றி யிருந்தால் பிச்சன் அப்போதே அவனுக்கு முடிவான வந்தனம் அளித்திருப்பான். தான் அங்கேயே தங்கினால் அவன் அம்மா கோபிப்பாள். சூரியன் அஸ்த மிக்கிறான். எனினும், பரதர்களை விட்டுப்போக அவன் மனம் இடந்தரவில்லை.

அன்றிரவு மௌனமும் பேச்சுமாய்க் கழிந்தது. இடையில்—?

" உன்னையும், உன் குட்டியையும் பார்க்கப் பத்மன் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பான், எங்கள் எல்லோ ரையும்விட உன்னிடம்தான் அவனுக்குப் பிரியம் "— என்றாள் லிங்கம்மா.

ஜோதிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. " என் மான் குட்டிக்குப் பத்மன்தான் பெயர் வைக்க வேண்டு மென்று நான் எத்தனையோ ஆவலாய்...?

" ஏன் ? அவன்தான் பெயர் வைத்து விட்டானே. உனக்கு மான்குட்டி கிடைத்ததும் எவ்வளவு சந்தோஷப் பட்டான் தெரியுமா ? என் நண்பனுக்கு ஒரு சகோதரன் கிடைத்துவிட்டான் என்று துள்ளித் குதித்தான். மான் குட்டியின் வால் பட்டுக் குஞ்சம்போல் பளபளப்பாயும் மென்மையாயுமிருக்கும். ஆதலால் அதற்கு ' குஞ்சலம் ' என்று பெயர் வைக்கவேண்டும் என்று சாவதற்கு முதல் நாள்தான் கூறினான் " என்றாள் லிங்கம்மா.

" குஞ்சலம் "—என்று திருப்பிச் சொன்னான் ஜோதி.

அவன் மனம் வெடித்துவிடும்போல் தோன்றியது. பத்மன் தன்னை மறக்கவில்லை. தன் மான் குட்டிக்குப்

பெயர் வைத்து விட்டான். ஆகா! அவன் அன்பே அன்பு! இன்பமும் நண்பனை இழந்த துன்பமும் இணைந்து அவனை என்னமோ செய்தது.

"குஞ்சலம்"—ஜோதி தன் மான் குட்டியைக் கூப்பிட்டான்.

அதுவும் தன் பெயரை அறிந்துகொண்டதுபோல் அவனருகில் வந்தது.

அவன் வீட்டுக்குள் போகும்போது அதுவும்கூட வந்தது.

"குஞ்சலம்......?" என்றான் ஜோதி.

"அதையும் அழைத்து வா"—என்றார் லிங்கப்பரதர்.

ஜோதி பத்மனுடைய முக்காலியில் மௌனமாய் அமர்ந்தான்.

"இன்றிரவு நீ இங்கு வந்தது பத்மன் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும்"—என்றார் பெரியவர்.

எனவே, தான் அங்கிருப்பதை எல்லோரும் விரும்புகின்றனர் என்பதை ஜோதி உணர்ந்தான்.

"நீ இல்லாமல் அவனைப் புதைப்பது சரியல்ல. உன்னைத் தவிர உலகத்தில் உண்மையான நண்பன் ஒருவருமே கிடையாதே"—என்று பெருமூச்செறிந்தார் பரதர்.

இதைக் கேட்டதும் ஜோதி தன் வீட்டை அடியோடு மறந்துவிட்டான். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தன் வீட்டு விஷயம் அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

மான்குட்டி துக்கம் விசாரிப்பதுபோல் ஒவ்வொருவரையும் முகர்ந்து பார்த்துவிட்டு ஜோதியின் காலடியில் முடங்கியது.

அன்றிரவு ஒன்பது மணி இருக்கும். பத்தர் பையனைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். விஷயமறிந்து மிக மிக வருந்தினர். அன்றிரவு அங்கேயே தங்கினர்.

அன்றிரவு ஜோதி பத்மன் அருகில் ரொம்ப நேரம் கண்காணித்துக் கலங்கினன்.

மறுநாள் காலை சவத்தை அடக்கம் செய்தனர். ஜோதிக்குத் துக்கம் தாங்கவில்லை.

சவக்குழியில் மண் போடும்போது பத்மன் வளர்த்த முயற்கரடி அப்படுக்கையிற் பாய்ந்து கண்ணீர் விட்டுக் கதறி அதை விட்டு நகர மறுத்தது. பிச்சன் அதைச் சிரமத்தோடு விலக்கினன்.

பத்தரே வேத முறைப்படி சவச் சடங்குகளை நடத்தி வைத்தார். எல்லோரும் சேர்ந்து இறந்த ஆன்மாவுக்குச் சாந்தி அருளும்படி இறைவனை வேண்டினர்.

வெகு நேரங் கழித்துப் பத்தரும் ஜோதியும் வீடு திரும்பினர்.

"ரொம்ப நன்ருயிருக்கிறது. இரவில் ஒருத்தியைத் தனியே விட்டுவிட்டு இரண்டு பேரும்......?" என்ருள் பொன்னி.

"என்ன செய்வது, சந்தர்ப்பம் அப்படி. பத்மன் இறந்துவிட்டான். சவத்தை அடக்கம் செய்து முடிந்ததும் நேராக வருகிரேம்"—என்று சமாதானம் கூறினர் பொன்னன் பத்தர்.

ஆறிப்போன ஆகாரத்தை அனலிலிட்டுச் சூடாக்குகிருள் பொன்னி,

"பாவம்! பரதர்களது துக்கம் பார்க்கப் பரிதாபமாயிருந்தது."

" துக்கமா ? அந்த .. முரடர்களுக்கா ?" என்று வியந்தாள் பொன்னி.

" அப்படிச் சொல்லாதே. துன்பம் எல்லோருக்கும் பொது. அது தராதம்யமின்றி எல்லோரையும் தாக்கு கிறது. ஒவ்வொருவரிடத்தில் அது ஒவ்வொரு வகையான வடுவை உண்டாக்குகிறது; எனினும் அதன் தாக்கும் வேகமும் கொடுமையும் ஒரேமாதிரிதான். இனித் துன்பத் தைப் பற்றிப் பேசும்போது கடுமையாகப் பேசாதே !" என்று பத்தர் கனிவுடன் கூறினுர்.

" என்னமோ, எனக்கு மட்டும் துக்கமில்லையா ? ஆனுல் கடுமையான முறையில்தான் அதை என்னுல் அனுபவிக்க முடிகிறது " என்றுள் பொன்னி.

பத்தர் அவளைத் தட்டிக் கொடுத்தார்.

" எனக்குத் தெரியாதா ? எதற்கும் பிறர் துன்பத் தைப் பற்றி இழிவாய்ப் பேசக்கூடாது. அவ்வளவுதான் " என்று சமாதானம் செய்தார் பத்தர்.

## 15

இளவேனில் முதுவேனிலாய் மாறுகிறது. வெய்யில் கடுமையாய்த் தாக்குகிறது ; வெறி மிகுந்து துள்ளுகிறது. எனினும் அதில் வேகமில்லை.

வேலையோ கொஞ்சம், அதற்கும் அவசரமில்லை. போது மெதுவாய்ப் போகிறது.

கார்மழை பொழிந்து கதிர்கள் முத்தியுள்ளன ; அவற்றின் ஙாளங்கள் வெய்யிலில் காய்ந்து வெளிறி யுள்ளன.

ஏகர் ஒன்றுக்கு எண்ணூறு வள்ளம் விளைவை எதிர் பார்க்கலாம். உருளைக்கிழங்குகளும் உரமேறிக் கொழுத்

துள்ளன. பட்டாணியும், பயறும், கடலையும் வளமிக்கு வளர்ந்துள்ளன. அந்த வருஷம் ஆகாரத்திற்குக் குறை யில்லை.

பத்தர்கள் இலையுதிர் காலத்தை எதிர்பார்த்தனர். அப் போது உருளைக்கிழங்கும், பன்றி இறைச்சியும், தான்யங் களும், கருப்பஞ்சாறும் தாராளமாய்க் கிடைக்கும்; ஆகா ரத்திற்குப் பஞ்சமிருக்காது; ஆனால் அதிகரித்த மிச்சத்தையும் எதிர்பார்க்க முடியாதென்பது வாஸ்தவமே.

வெப்பத்தின் கடுமையால் பொன்னியின் பருத்த உடல் சிரமப்படுகிறது. ஒல்லியான பத்தருக்கும் ஜோதிக் கும் ஓடியாட முடியவில்லையே என்ற ஒரே வருத்தம் தான். இருவரும் பங்கு போட்டுக்கொண்டு வீட்டு வேலைகளை—தண்ணீர் கொண்டு வருவது உட்பட— ஒழுங்காகச் செய்து வந்தனர்.

பத்மன் இறந்துவிட்டதைப் பற்றி ஜோதி நினைக்காத நாளே கிடையாது. இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு பத்மன் அவனது எண்ணங்களுக்கு ஊக்கமளித்தான்.

மான்குட்டி குஞ்சலம் நாளொருமேனியும் பொழு தொரு வண்ணமுமாக அதிசயம் காட்டி வளர்ந்து வரு கிறது. அதன் வளர்ச்சியில் ஜோதியின் மகிழ்ச்சி அதிகரிக் கிறது. அதன் புள்ளிகள் மறைவதாக ஜோதி நினைத்தான். பத்தர் யாதொரு மாறுதலையும் காணவில்லை. எப்படி இருந்தாலும் அதன் அறிவு அபாரமாய் விருத்தி அடை கிறது. கரடிக்கடுத்தபடி அறிவுள்ள காட்டு மிருகம் மான்தான் என்று பத்தர் அடிக்கடி கூறுவார்.

“சீ! இந்த மான்குட்டியின் சாமர்த்தியம் மகா சங்கடமாயிருக்கிறது” என்றாள் பொன்னி.

"அதற்காகச் சந்தோஷப்படு" என்பார் பத்தர். இப்படிச் சொல்லும் போதெல்லாம் அவர் ஜோதியைப் பார்த்துக் கண் சிமிட்டுவார்.

குஞ்சலத்துக்குக் குறும்புத்தனம் மிகுந்துவிட்டது. கட்டிப் போடாவிட்டால் அது தன் பட்டிக் கதவின் படலை மெதுவாய்த் திறந்து கொண்டு இரவு பகலென்று இல்லாமல் வீடு முழுவதும் இஷ்டப்படி உலாவும்.

ஒரு நாள் அது ஜோதியின் தலையணையை வீடு முழு வதும் உதறி உதறி மூலை முடுக்குகளிலெல்லாம் பஞ்சு பறக்கவிட்டது. மற்றும் சில சமயம் யாருமறியாதபடி ஆகாரத் தட்டுகளைக் காலி செய்துவிடும்.

இப்போது அது நாய்களோடு விளையாடுகிறது. மான் குட்டியைக் காணும்போது ஜூலி கம்பீரமாய் வாலாட்டு வதோடு நிறுத்திக்கொள்ளும்; ரிப்பி ஆடிப்பாடி விளை யாடும்; எனினும் ஜோதியோடு விளையாடுவதில்தான் அதற்கு அதிகமான பிரியம்.

மான்குட்டியும், நாய்களும் ஜோதியுமாக நெடுநேரம் மல்லாடுவார்கள்; பொன்னி ஜோதி மெலிந்து இளைத்துப் போகிறான் என்று குறைகூறும் வரையில் விளையாட்டுத் தீராது.

## 16

வெந்துபோன எலும்பைப் போல் உலகம் வெளிறிக் கிடந்தது. வேனிலின் கடுமை உச்சநிலையை அடைந்தது. வெறும் புல் பூண்டுகள் மட்டுமே நிரம்ப வளர்ந்தன.

இருந்தாலும் இன்னதென்று சொல்ல முடியாத ஏதோ ஒரு மாறுதல் ஏற்படப்போகிறது. அதைத்

தாவரங்களெல்லாம் உணர்ந்துள்ளனபோல் தோன்று கிறது. ஒரு பருவம் மாறி மறு பருவம் வருவதை யாவும் எதிர்பார்க்கின்றன.

விலங்குகளெல்லாம் ஆகாரம் கிடைக்காமல் திண்டாடுகின்றன என்று பத்தர் கூறினர். வசந்த பெர்ரி, வேனில் பெர்ரி, நெரிஞ்சில் பழம், படர் பெர்ரி, நெட்டிக் கனி, அடைக்காய்ப்பழம், முடைப்பூசினி -- முதலியவை யாவும் போய் ரொம்ப நாட்களாய் விட்டன. பேரீச்சையும் புல்லீட்டியும் கனிகளைக் கண்டு மாதக்கணக்காய் விட்டன; காட்டுத் திராட்சைகளைக் கரடிகள் காலி செய்து விட்டன.

பப்பாளி, கல்லுள்ளி, பசைமுடையான் கனிகளெல்லாம் இன்னும் பழுக்கவில்லை. தேவதாருச் சில்லுகளும், கருவாலி வித்துகளும் பனம்பழங்களும் பனிக்காலத்தின் ஆரம்பத்தில் தான் தயாராகும்.

மான்கள் மெல்லிய தழைகுழைகளையும் சடைப் பாசிகளையும், பசுமின் வெண்மலர் மருதப் புதர்களையும், கம்பிச்சாரணை நாளங்களையும், அரோருட் முளைகளையும் உண்டு வாழ்ந்தன.

ஆனல் அவைகள் வனத்தின் மறுபுறத்தில்தான் அதிகமாய்ச் சஞ்சரித்தன. சென்ற ஒரு மாதத்தில் பத்தர் வேட்டையாடி கொண்டு வந்தது ஒரே ஒரு மரைமானின் இறைச்சி மட்டுமேதான்.

பத்தர்கள் ஆவணிப் பிறையை ஆவலோடு நோக்கினர். பிறை தோன்றியதும் பொன்னிக்கும், ஜோதிக்கும் அதைக் காட்டினர் பத்தர். வெள்ளிப்பிறை அநேகமாய்ச் செங்குத்தாய் ஒளி வீசியது. அவர் மனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

“வெண்பிறை நேரே நெட்டு நின்ருல் கட்டாயம் மழை வரும்” என்ருர் பத்தர்.

அவர் சொன்னது சரியாய்விட்டது. மூன்றுவது நாள் வானத்தில் கருக்கல் தட்டியது.

பத்தரும் பையனும் ஊற்றோரத்தில் வேட்டையாடிக் கொண்டிருந்தனர். ஜானு ஊற்றின் ஆழத்தில் முதலைகள் முழக்கமிட்டன. தலைக்குமேல் சில கடற் பறவைகள் பறந்து சென்றது. கண் வழுக்கும் கதிரொளியைக் கைகளால் மறைத்தவாறே பத்தர் அக் கடற் பறவைகளை உன்னிப்பாய்க் கவனித்தார்.

"கடற் பறவைகளுக்கு இங்கு என்ன வேலை? பத்தர் முகத்தில் கவலை தட்டியது. இதன் அர்த்தம் கடும் புயல் வீசும் என்பதுதான்."

ஜோதியின் உள்ளம் அப் பறவைகளைப்போல் உணர்ச்சியோடு உயரப் பறந்தது. புயலென்றால் அவனுக்கு எப்பொழுதுமே பிரியம். அது கம்பீரமாய் உருண்டு செல்லும். மக்களையெல்லாம் அவரவர்கள் வீட்டின் வெதுவெதுப்பை அனுபவிக்கத் தூண்டும்; வேலைக்கு ஓய்வு தரும். பலகணிகளில் தத்தடியிட்டுச் சங்கீதம் பாடும். அவன் தாய் கருப்பஞ்சாறு கலந்த பால் கட்டிகளைச் சாப்பிடக் கொடுப்பாள்; அவன் அப்பா கதைகள் சொல்லுவார்.

"புயல்! புயல்! எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று தனக்குள் தானே சந்தோஷப்பட்டான் ஜோதி.

பத்தர் ஜோதியைக் கடுமையாகப் பார்த்தார்.

"மகனே! புயல் கொடியது, புயலை விரும்பாதே. புயல் கதிர்களைக் குலைக்கிறது, கப்பல்களை முழுக்கடிக்கிறது, பழங்களை மரங்களிலிருந்து பறித்து நாசம் செய்கிறது. வீடுகளை வேரோடு பிடுங்கி எறிகிறது; பனியால் மக்களை வாட்டி வதைக்கிறது" என்றார் பத்தர்.

" அப்பா ! இனி நான் என்றும் புயலை விரும்ப மாட்டேன் ; எனினும் மழையும் காற்றும் மகிழ்ச்சியளிக்கின்றன."

" வெறும் மழையும் காற்றும் புயலாகாதே !" என்றார் பத்தா.

அன்று சூரியன் ஆச்சரியமான வகையில் அஸ்தமித்தது. அந்தி நேரத்துச் செந்தீச் செக்கருக்குப் பதில் கலங்கிய பசுமை வானத்தை வரியிட்டது.

அஸ்தமனத்திற்குப் பிறகு மேல் வானம் கரும் பழுப்புக் கனல் நிறமாய் மாறியது. கீழ்வானத்தில் இளந் தான்யக் கதிரின் நிறம் இழைந்தது. பத்தர் மறுப்புக் குறியாய்த் தலையை ஆட்டுகிறார்.

" என்னமோ, எனக்கொன்றும் பிடிக்கவில்லை. எல்லாமே, பேய்த் தன்மையாயிருக்கின்றன."

மறுநாள். காலை உதயம் தெளிவாய்த்தானிருந்தது ; ஆனால் வானம் கரு ரத்தநிறமாய்க் கடுகடுத்தது.

பத்தர் சிமிணிக் கூரையைச் சீர் செய்தார் ; இரண்டு முறை ஊற்றுக்குச் சென்று தண்ணீர் கொணர்ந்து சகல பாத்திரங்களையும் நிரப்பினார்.

உச்சிக்கு முன்பே வானம் பழுப்பாய்க் கருத்து, காற்று அசைவற்றுத் தேங்கியது.

" அப்பா ! புயலா வருகிறது ?"

" என்னமோ வருகிறது, இயற்கையான, சகஜமான நிலையை மீறிய எதுவோ ஒன்று "—என்றார் பத்தர்.

மாலையாக ஆக வானம் பரிபூரணமாய்க் கருத்து விட்டது ; கோழிகளெல்லாம் கூடுகளை நாடின.

ஜோதி பசுவையும் கன்றையும் முற்போதிலேயே தொழுவத்திற்குள் ஓட்டிக் கட்டி விட்டான் ; சாயந்

தரம் ஆவதற்கு முன்னாலேயே பத்தர் பாலைக் கறக்கலானார்.

குதிரை சீசரைக் கொட்டத்தில் அடைத்துக் கொஞ்சநஞ்சமிருந்த புல்லின் குவியலை அதற்கு ஆகாரமாகப் போட்டார்.

"சீக்கிரமாய்ப் போய், கோழி முட்டைகளைக் கூடுகளிலிருந்து எடுத்துக்கொண்டுவந்துவிடு. சீக்கிரம், சீக்கிரம்; நான் வீட்டுக்குள் போகிறேன்"—என்று பத்தர் ஜோதியைத் துரிதப்படுத்தினார்.

கோழிகள் அதிகமாக முட்டை இடுவதில்லை; கூடுகளில் மூன்றே முட்டைகள்தானிருந்தன. பக்கத்திலுள்ள உமிமேட்டில் வாத்து இரண்டு முட்டை இட்டிருந்தது. இந்த ஐந்து முட்டைகளையும் தன் சட்டைப் பையில் பதுக்கிக்கொண்டு ஜோதி வீட்டுக்குத் திரும்பினான்.

தன் தந்தையின் அவசரத்தை அவன் சரியானபடி உணரவில்லை. திடீரென்று முன்னெச்சரிக்கையில்லாது அது நேர்ந்து விட்டது.

தூரத்தில் எங்கோ ஏதோ உறுமுகிறது. அது வேறொன்றுமில்லை, காற்றின் கர்ஜனையே. அந்தக் கர்ஜனை வரவரச் சமீபிக்கிறது; வாஸ்தவமாகவே காற்று தன் கடுங்கால் கொண்டு மரக்கிளைகளை உரசியவாறே நகர்ந்து வருவது நன்றாய்த் தெரிகிறது. ஆம்! காற்று இப்போது கதிர் வயலைக் கணத்தில் தாண்டுகிறது; வீட்டின் முன்னுள்ள மரங்கள் வீச்சிடுகின்றன; பெர்ரிக் கிளைகள் தலை சாய்த்துக் கீச்சிடுகின்றன.

காற்று ஜோதியின் உடலின்மேல் தாவிச் செல்லுகிறது; நூற்றுக் கணக்கான நாரைச் சிறகுகள் அவன் மேல் உராய்வதுபோல் தோன்றுகிறது. தேவதாரு

மரங்கள் வீக்கி அடிக்கின்றன; மழையும் ஆரம்பித்து விட்டது.

காற்று தலைக்குமேல் சுழன்றடிக்கிறது. வானுக்கும் மண்ணுக்கும் சுவரிட்டதுபோல் இடையீடின்றி மழை பொழிகிறது. ஒரு கையால் முட்டைகளை மூடிக் கொண்டும், மறு கையால் கண்ணில் நீர் விழுந்து மறைக் காதபடி தடுத்துக் கொண்டும் ஜோதி தட்டுக் கெட்டுத் தடுமாறி வீட்டின் வெளி முற்றத்தை அடைந்தான்.

மான் குட்டி நடுக்கத்தோடு அவனுக்காகக் காத் திருந்தது. அதன் வால் நனைந்து துவண்டு படிந்திருந்தது; நிமிர்ந்த காதுகள் இரு புறமும் நெகிழ்ந்து தொங்கின.

அது இவனைக் கண்டதும் ஓடிவந்து கால்களின் பின் ஒண்டிக் கொள்ளப் பார்த்தது, அவன் வீட்டின் பின்புறம் விரைந்தான், மான் குட்டியும் நிழலைப்போல் பின் தொடர்ந்தது.

பின்கதவு தாழிட்டிருந்தது; காற்றும் மழையும் வீசி யடித்த வெறியில் அவனால் கதவைத் திறக்க முடியவில்லை. கதவைத் தட்டினான்; கொஞ்சநேரம் இந்த மழையின் ஆரவாரத்தில் தன் கூச்சல் மற்றவர்களுக்குக் கேட்குமா என்று சந்தேகப்பட்டான்; தானும் மானும் மழையில், குளிரில், வெளியில், பனியில்.........இதே சமயம் கதவு திறக்கப்பட்டது. ஜோதி உள்ளே பாய்ந்தான், மானும் பாய்ந்தது, ஜோதி நெடுமூச்செறிந்தான், கண்களைத் துடைத்துக் கொண்டான், மான் திகைத்து நின்றது.

"சிறிதுமுன் யார் இப்படிப்பட்ட மழையை விரும் பியது?"—என்று பத்தர் ஜோதிக்கு ஞாபக மூட்டினார்.

"நான் விரும்பியதெல்லாம் உடனுக்குடனே நடந்து விடுமென்றால் என் விருப்பங்களைப் பற்றி நான் மிக மிக ஜாக்கிரதையாயிருப்பேன்"—என்றான் ஜோதி.

"சரி, சரி, இந்த ஈர உடைகளைக் களைந்துவிட்டு உலர்ந்தவைகளை உடுத்துக் கொண்டுவா. வரும் போது உன் மான் குட்டியைப் பட்டியில் பூட்டி விட்டு வரக் கூடாதா?"—என்றாள் பொன்னி.

"இல்லையம்மா, அதற்கு நேரமில்லை, பாவம்! அது நனைந்து பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது"—என்றான் ஜோதி.

"என்னமோ, அது என்னை உபத்திரவம் செய்யாதிருந்தால் சரிதான்"—என்று பொன்னி சலித்துக் கொண்டாள்.

மழை கூரைமேல் தத்தடியிட்டது; காற்று வீட்டைச் சுற்றிச் சுற்றி வீச்சிட்டது. வீட்டுக்குள் இன்ப மயமான வெது வெதுப்பு பரவி குதூகலித்தது. இன்னும் ஒரு வாரத்துக்குள் இன்னொரு புயல் வந்தால் கூடப் பரவாயில்லை என்று ஜோதி நினைக்கலானான்.

பத்தர் பலகணி வழியாய் வெளியில் நடக்கும் வெறியாட்டைக் கவனித்தார்; இது 'தவளைகளுக்குக் கூடச் சலிப்புத் தட்டும் தாரை மழை' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார்.

இரவு ஆகாரம் முடிந்தது, ஜூலியும் குஞ்சலமும் ஒரு மூலையில் இணையாகப் படுத்திருந்தன. பொன்னி தன் சொந்தக் கையால் அன்று மான்குட்டிக்கு ஆகாரம் ஊட்டினாள்; ஜோதி ரகசியமான நன்றியோடு பாத்திரம் விளக்குவதில் அவளுக்கு உதவி புரிந்தான்.

மறுநாட் காலை பத்தர் பால் கறக்க வெளியே போகப் புறப்பட்டார். 'சீக்கிரம் வந்து விடுங்கள்; எங்காவது சளி பிடித்துக் கொள்ளப்போகிறது'—என்று ஜாக்கிரதைப் படுத்தினாள்.

"அப்பாவுக்குப் பதில் நான் போய்ப் பால் கறந்து கொண்டு வருகிறேன்?"—என்றான் ஜோதி.

அதற்குள் பத்தர் போய்விட்டார், அவர் திரும்பி வந்த போது உடலெல்லாம் நனைந்திருந்தது.

"நல்ல வேளை, நேற்றே தண்ணீரைச் சேமித்து வைத்தேனே"—என்றார் பத்தர், தன் மேலுள்ள தண்ணீரைத் துடைத்தவாறே.

அன்று முழுமையும் புயல் நிற்கவில்லை—அதிகரித்தது. மழை நீர் வீழ்ச்சிகளைக் கொட்டியது; காற்று சாட்டியடித்து அலைகளை ஓட்டியது. பத்தர் அடிக்கடி வெளியே போய் வந்தார், ஈரத் துணிகள் அடுப்புத் தணலில் உலர்த்தப் பட்டன.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து நாட்கள் கழிந்தன. புயல் நிற்கவே இல்லை. மழை எங்கும் ஒரே வெள்ளக்காடாய் மண்ணைக் குடைந்து கும்மாளமிட்டது இதைப் போன்ற அடை மழை என்றுமே பெய்ததில்லை என்றார் பத்தர்.

வரவர ஆகாரம் குறைந்தது; மழையும் காற்றும் இடையீடின்றி மாறி மாறிப் பொழிந்தது. வீசியது, வீசியது; வீறிட்டுப் பொழிந்தது.

ஆறும் நாட் காலையும் மழை நிற்கவில்லை. எனினும் பத்தரும் ஜோதியும் இடைச் சல்லடத்தை மட்டுமே அணிந்தவர்களாய் ஆகாரத்திற்காகக் கதிரறுத்தனர். உச்சிச் சாப்பாட்டிற்குத் தவிர அவர்கள் ஒரு கணத்தைக் கூட வீணாக்கவில்லை. வைக்கோல் பாழாய் விட்டது, எனினும், கதிர்களையாவது காப்பாற்றலாமல்லவா?

ஏழாம் நாள்தான் சூரியன் வெளிப்பட்டான்; அதை முதல்நாள் உதயம் என்றுதான் கூறவேண்டும், பத்தரும் ஜோதியும் தான்யக் கதிர்களைப் பரிசோதித்தனர், எல்லாம்

தரையோடு தரையாய் தகைந்து கிடந்தன. கிடைத்ததை யெல்லாம் வாரிக்கொண்டு இருவரும் வீடு திரும்பினர்.

"இந்த ஈரத் தான்யங்களை உலர்த்துவது எப்படி?"—என்றாள் பொன்னி.

இதற்காக அடுப்பு மூட்டினர், தான்யங்களை இளசாக வறுக்கலாயினர்.—ஜோதி தானியங்களை புரட்டிவிடும் வேலையில் ஈடுபட்டான்.

"கரும்புகள் எப்படி?"—என்று விசாரித்தாள் பொன்னி.

"படிந்து படுத்துச் சாய்ந்து விட்டன"—என்றார் பத்தர்.

"உருளைக் கிழங்குகள்......?"

பத்தர் தலை அசைத்தார். அவை அழுக ஆரம்பித்து விட்டன, இப்பொழுதே தோணடிநால் அநேகமாய் அவைகளை உபயோகிக்கக் கூடும்.

"மறுபடியும் புயல் தொடர்ந்தால் நாம் எல்லோரும் மரணத்தை எதிர்பார்க்க வேண்டியதுதான்" என்றார் பத்தர்.

அவன் தந்தை இவ்வளவு துக்கத்தோடு பேசுவதை ஜோதி இன்றுதான் காண்கிறான்; துக்கத்தால் அவன் உள்ளம் உறைந்து விடும்போல் தோன்றியது.

மான் குட்டியும் போஷணைக் குறைவால் மெலிந்து விட்டது. முதுகுத்தண்டு முறுக்கித் தோன்றியது. விலாவெலும்புகள் வீங்கிப் புடைத்தன. அது அடிக்கடி எதையோ எண்ணிக் கூவியது.

அன்றிரவு, ஜோதி திடீரென்று கண் விழித்தான். தன் தந்தை வீட்டுக்குள் உலாவுவதைப்போல் தோன்றியது.

எழுந்து பார்க்க எண்ணியபடியே மறுபடியும் தூங்கி விட்டான்.

எட்டாம் நாள் காலை ; ஏதோ ஒரு நல்ல மாறுதல். ஆரவாரத்திற்குப் பதில் அமைதி, மழை நின்றுவிட்டது ; காற்று அடங்கி மௌனமுற்றது, மாதுளை மலரின் வண்ணம் ஈரமான, பழுப்படைந்த வானத்தில் வரி யிட்டது.

பத்தர் கதவுகளையும், சாளரங்களையும் அகலத் திறந்து விட்டார்.

"வெளியிற் சென்று வியப்படையத் தக்க விரிந்த உலகம் இங்கு இல்லை ; என்றாலும் வெளிப்பட்டுச் செல்ல வென்று ஒரு வெத்துலகமாவது இருக்கிறதே அதற்காகக் கடவுளுக்கு வந்தனம் செலுத்துவோம்" என்றார் பத்தர்.

நாய்கள் அவருக்கு முன்னால் பாய்ந்து வெளியே ஓடின—பக்கம் பக்கமாக.

"வாருங்கள். போகலாம்"—என்றார் பத்தர்.

ஜோதி குதித்துக்கொண்டு வெளிப்பட்டான். அவன் பக்கத்தில் மான்குட்டி துள்ளிக்கொண்டு ஓடியது.

"நாங்கள் இரண்டு மான்குட்டிகளும் தயார் !" என்றான் ஜோதி.

பொன்னி பகலொளியைக் கண்டு கண்ணீர் விட்டாள்.

காற்று குளிர்ச்சியாய் மெதுவாய் வீசியது.

மான்குட்டிக்கும் அதே நினைப்புத்தான் போலும் அது வேலியைத் தாண்டி விளையாடியது.

வெள்ளங் கீறி புண்பட்ட உலகம் அது. எனினும் பத்தருக்குள்ளதெல்லாம், அவர் அடிக்கடி பொன்னிக்குக் கூறுவதுபோல், அந்த ஒரே ஒரு உலகந்தானே,

## 17

இரண்டு வாரங்கள் வரை பத்தர் இடைவிடாது தான்யங்களைச் சேகரித்துச் சேமிப்பதில் கழித்தார்.

உருளைக் கிழங்குகள் அழுக ஆரம்பித்துவிட்டன. இப்போதே அவைகளைத் தோண்டி எடுக்காவிட்டால் எல்லாமே நஷ்டமாய்விடும். இந்த வேலையில் ஜோதி ஈடுபட்டான். வெகு ஜாக்கிரதையாக வேலை செய்தான். அநேகமாக எல்லாக் கிழங்குகளையும் கிண்டி எடுத்து விட்டான்.

அழுகல் நீக்கி அவற்றைப் புறவடையில் உலர்த்திச் சேமித்தாள் பொன்னி.

பட்டாணி வைக்கோல் பாழாகிவிட்டது. மழையில் சேகரித்த பயிறுகள் தான் மிச்சம்.

மூன்று வாரங்களாயின. நீர்ப்பரப்பிலுள்ள நாணற் புற்களை வெட்டி உலர்த்தினர் பத்தர்.

" வைக்கோலுக்குப் பஞ்சமில்லை"—என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

## 18

நவம்பர்! வேட்டைக்கு ஒன்றுமில்லை. மானும், வான் கோழியும், அணிலும் முயலும் அரிதாயின. கடு விலங்குகளையும் காணோம்.

பத்தர்கள் தம்மிடமுள்ள பன்றிகளைக் கொன்று பனிக்காலத்துக்கு இறைச்சி சேமித்து வைத்தனர்.

இன்னும் சில நாளில் புறவடைப் புறம் கல்லரித் தழைகளும், கடுங் கடுகும் நிரம்பத் தழைக்கும். உலர்ந்த பட்டாணிக் குறுணிகள் தாராளமாயிருந்தன, பொறிப்

பொறி மாவுகள் பல மாதம் ரொட்டித் துண்டங்களுக்குப் போதும் எனவே வேட்டையில்லாக் குறையால் வீடு பட்டினி கிடக்காது.

தான்யச்சேதம் அதிகமென்று கூற முடியாது. ஜோதி இயந்திரஞ் சுழற்றி மாவரைக்கிருன். வேலை கஷ்டமாய்த் தானிருந்தது. எனினும் அதிலே ஓர் இனிமையும் தோன்றியது.

இப்போதெல்லாம் ஜோதி அடிக்கடி யோசனையில் ஆழ்ந்துவிடுகிருன். ஒரு நாள் பத்தர் அவனை இந்த நிலையில் கண்டுவிட்டார்.

"அப்பா! இப்போது நான் மனக் கணக்குப் போடு கிறேன்"—என்ருன் ஜோதி.

"நன்ருகப்போடு; உபாத்தியாயர் செய்யவேண்டிய வேலையை புயல் உனக்குச் செய்திருக்கிறது. பத்மன் இருந்தபோது பத்மனுக்கும் உனக்கும் பொதுவாக ஒரு வாத்தியாரை நியமிப்பதென்று நானும் பரதரும் திட்டம் போட்டோம். பத்மன் போனதும் உனக்கு மட்டுமாவது ஒரு வாத்தியாரை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் எண்ணினேன். எனினும், என்ன செய்வது? வேட்டை கிடைத்தால் தானே வியாபாரம் செய்யமுடியும். வியாபாரம் செய்யாமல் வேறு காரியங்களுக்குப் பணம் ஏது?" என்று பத்தர் வருத்தமாய்க் கூறினர்.

"பரவால்லேப்பா, எனக்குத்தான் எல்லாம் தெரிஞ்சுடுத்தே"—என்ருன் ஜோதி பெருமையாக.

"பையா! முட்டாளைப்போல் பேசாதே, எல்லாம் தெரிந்தவர்கள் யாருமில்லை. இந்த வருஷம் என்ருல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உனக்குப் போதிக்

கிறேன். நீ படிப்பில்லாத பாமரனுய் வளர்வதை நான் விரும்பவில்லை ''—என்ருர் பத்தர்.

மறுநாளிலிருந்து பாடங்களாரம்பித்தன. படிப்பது ஜோதிக்கு சிரமமாகவே தோன்றவில்லை. தம்மை மறந்து தந்தையும் மகனும் கணக்கிலோ, எழுத்திலோ—ஆழ்ந் திருப்பர் — பொன்னி சாப்பாட்டுக்குக் கூப்பிடும் வரையில்.

படிப்பால் ஜோதியின் மனம் பரவசமடைந்தது. அவன் சந்தோஷத்தோடு மாவறைக்கப் போவான்.

மான்குட்டி அங்கு வரும், குப்பை கூளங்களைக் கிளறும்.

இப்போதெல்லாம் அதற்குத் தைரியம் வந்துவிட்டது ஒன்றிரண்டு மணி நேரங்கள் அது வெளியிற் சென்று உலாவி விட்டு வரும். அதைப்பட்டியிலடைத்துப் பயனில்லை, தட்டிகளைத் தாண்டி வெளிப்பட்டுவிடும். மான்குட்டி என்ருவது அதன் இயற்கைப்படி வனத் திற்குள் ஓடிப்போகும் என்பாள் பொன்னி—அப்படி ஓடிப்போவது தான் அவள் விருப்பம். ஆனல்......?

ஜோதிக்குத் தன் மான் குட்டி என்ன நினைக்கிற தென்பது நன்ருய்த் தெரியும். அது தன்னைச் சுற்றியுள்ள வனுந்தர உலகத்தை ஆராய விரும்புகிறது. ஜோதியும் அப்படியே விரும்பினன்.

மற்ருென்றும் ஜோதிக்குத் தெரியும், மான்குட்டி எங்கே சுற்றினுலும் ஜோதியின் குரல் கேட்காத அளவு தூரத்துக்குச் செல்வதில்லை, அருகில் எங்காவது தான் வளைய வந்துகொண்டிருக்கும்.

# 19

நவம்பர் முடிவில்தான் முதல் முதலாகப் பெரும் பனி பெய்தது. வாலிக்கொட்டை இலைகள் மஞ்சட் பழுப்பாய் நிறம்மாறின. பிசினிமரங்கள் மஞ்சட் சிவப்பாய் மதமதத்தன. பாதையோரத்து கரும்பலாவின் கொத்துக்கள் தீக்கொழுந்தெனச் சிவந்து செழித்தன. ஒவ்வொரு நாளும் காலையில் குளிர்ந்து, பகலில் இள வெப்பமுண்டு மறுபடியும் மாலையில் குளிராய் ஒடுங்கி மெதுவாய்க் கழிந்தது.

பத்தர்கள் நெகிடித் தீயைச் சூழ்ந்துள்ளனர். ஜோதி கவிழ்ந்து படுத்தவனாய்க் கனவின் கும்மாளத்தில் மனத்தைப் பறிகொடுத்துள்ளான். செந்தழல்கள் பொங்கிப் புரள்வது, பத்மன் கூறிய ஸ்பானியச் செந்தலைக் குதிரை வீரர்களை அவனுக்கு நினைப்பூட்டியது.

பொன்னி துணி தைத்துக்கொண்டிருந்தாள். ஜோதி மெதுவாய்ப் புரண்டு அருகில் தூங்கும் தன் மான் குட்டியைத் தடவிக்கொடுத்தான். இப்போதெல்லாம் அதைப் பற்றிப் பொன்னி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

அவள் பத்தரின் கால் சட்டை யொன்றை ஜோதிக்காகச் சரி செய்துகொண்டிருந்தாள்.

“ஜோதி ! நெகடியில் ஒரு விறகைத் திணி, எனக்குக் கண் சரியாகத் தெரியவில்லை!”—என்றாள்.

சட்டை சரியாய் விட்டது.

“இந்த வருஷம் வளர்ந்ததைப்போல் இனியும் வளர்ந்தால் உன் சட்டைகளைத் தான் உன் அப்பாவுக்காகச் சரி செய்ய வேண்டியிருக்கும் ’—என்றாள் பொன்னி.

எல்லோரும் அவள் ஹாஸ்யத்தைக் கேட்டுச் சிரித்தனர்.

“குழந்தாய்! நாளைக்கு நாம் அந்தத் திருக்கிப் பூண்டுகளை......?” என்று பத்தர் முடிக்கு முன் “நீருள்ளிகள் தீர்ந்திருக்கும்” என்றான் ஜோதி.

“இலக்கணத்தை நன்றாகப்படி. நீருள்ளிகள் அவைகளைத் தீர்த்திருக்கும் எனச் சொல்லவேண்டும்”—என்று திருத்தினாள் பொன்னி.

“என்னமோ, இந்தப் பனிக்காலம் அதிகக் குளிராயிராது என்று நினைக்கிறேன்”—என்றார் பத்தர்.

“குளிரை நான் விரும்புகிறேன்” என்றான் ஜோதி.

“என்னமோ இந்தப் பனிக் காலம் நல்லதாய் முடியவேண்டும். விளைவும், வேட்டையும் நிரம்பக் கிடைக்கும்”—என்றார் பத்தர்.

“ஆ”மென்று ஆமோதித்தாள் பொன்னி.

“பஞ்சமும் பட்டினியும் வேறிடங்களை நாடிச் சென்று விட்டன” என்றான் ஜோதி.

அன்று முழுவதும் அமைதியாய்க் கழிந்தது. கெகிடித் தீயின் நெரி நெருப்பைத் தவிர வேறு சப்தமில்லை.

சில சமயங்கள் பத்தரின் அசைவுநாற்காலி ‘க்ரீச்’ சிட்டது.

காற்று சல சலத்தது.

வாத்துகளும், நாரைகளும் தென்திசையை நோக்கிச் சென்றன.

ஜோதி கதைப் புத்தகங்களைப் படிக்கலானான்; கதைகள் நன்றாய்த்தானிருந்தன. எனினும், புத்தகக் கதைகள் அவன் அப்பா சொல்லும் கதைகளைப்போல் அவ்வளவு சுவையாகத் தோன்றவில்லை.

# 26

வெள்ளையாக அகன்று வளைந்த அலகுகளுடைய ஆக்காட்டி நாரைகள் அபரிமிதமாய் அங்கு வந்தன. பத்தரும் ஜோதியுமாய் அவற்றை உணவுக்காக வேட்டை யாடினர். வான்கோழிகளின் இறைச்சியைக் காட்டிலும் நாரை இறைச்சி ருசியாயிருந்தது.

வேலை அதிகமுல்லை. ஜோதி ரொம்ப நேரம் தன் மானோடு விளையாடுவான். அந்தக் குட்டி வளர்ந்து விட்டது; குழந்தைப் பருவப் புள்ளிக் குறிகள் மறைய லாயின. அதன் நீண்ட கால்கள் நேர்மையும் வலிமையும் பெற்று நிமிர்ந்து துள்ளின.

ஜோதி அதன் நெற்றியை ஆராய்ந்தான்; கொம்பு வரும் குறிகளைக் காண. அதைக் கண்டு அவன் அப்பா சிரித்தார்.

" நீ நடக்க முடியாத அற்புதங்களை எதிர்பார்க்கிறாய். வெய்யில் காலம் வரும்வரையில் அதற்குக் கொம்பு முளைக்காது. ஒரு வருஷம் கழியவேண்டும், அப்போதும் கொம்பு கொப்பி தட்டிய சாணம்போல் ஒரு சின்னக் குமிழாய்த்தானிருக்கும் " என்றார் பத்தர்.

ஜோதியின் உள்ளத்தில் இப்போதெல்லாம் ஒரு திருப்தி; லேசான ஓர் இன்ப உணர்ச்சி.

ஒவ்வொரு நாளும் துப்பாக்கியோடு மானையும் கூட்டிக்கொண்டுபோய் அவன் வனம் சுற்றுவான்.

கரும்பலாத் தழைகளின் செந்நிறம் ஆரஞ்சு வண்ண மாக மாறியது.

ஒவ்வொரு நாளும் காலையில் பனி பெய்தது.

## 21

ஜனவரி மாத முடிவில் சீதோஷ்ண நிலை இன்ப கரமாக மாறியது, வசந்தம் வருமுன் ஒரு முறையாவது பனி அடிக்கும் என்பது வாஸ்தவமே; எனினும் அது வசந்தத்தின் வரவைத் தெரிவிக்கும் தூதுதானே.

அந்த வருஷம் பணம் தேவை; எனவே ஒரு பகுதியில் பருத்தியும், வேறொரு பகுதியில் புகையிலையும், சமவெளியில் உணவுக்காகத் தான்யமும் விதைக்கப் பத்தர் திட்டம் போட்டார். தந்தையும் மகனுமாய் வரம்பு திருத்தி, வயலுழுது நிலத்தைச் செப்பனிட்டு வைத்தனர்.

பிப்ரவரி மாதம் வழக்கமாக வரும் கீல்வாயுப்பிடிப் பால் பத்தர் படுத்துவிட்டார். ஜோதி அவர் வேலைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டான்.

இப்போதெல்லாம் ஜோதி சுறுசுறுப்பாகிவிட்டான். சீக்கிரம் வேலைகளை முடித்துவிட்டு நெடுநேரம் தன் மான் குட்டியோடு வனத்தில் உலாவுவான். தண்ணீர் கொண்டு வரும்போதெல்லாம் மானும் அவனுடன் சென்று வரும்.

நீரூற்றுப் பக்கத்தில் வேறு சில மான்குட்டிகளைக் கண்டான். அவைகளில் ஒன்றுவது குஞ்சலத்தளவு பெரிதாயில்லை. அவன் உள்ளம் சந்தோஷத்தால் பொங்கியது.

வீட்டுக்கு விரைந்தான்; அவன் அப்பா போர்வை யோடு நெகிடியருகில் உட்கார்ந்திருந்தார்."

"அப்பா! அப்பா! மான் குட்டிக்கு அநேகமாய் ஒரு வயது ஆகிவிட்டதல்லவா?"

பத்தர் அவனை வியப்போடு பார்த்தார்.

"ஒரு வயதாவதற்கு இன்னும் ஒரு மாதம் இருக் கிறது" என்றார் அவர்.

" ஒரு மாதத்திற்கப்புறம் என்னப்பா மாறுதல் ஏற்படும்?"

" ரொம்ப நேரம் வனத்திலேயே திரிய ஆசைப்படும். இன்னுங் கொஞ்சம் உயரமாகவும், பருமனுகவும் வளரும். மதின்மேற் பூனைபோல் குழந்தைத் தனத்திற்கும் பெரிய தனத்துக்கும் இடையில் ஊடாடும்" என்ருர் பத்தர்.

ஜோதி வெறு வெளியைப் பார்த்தான். " அப்போது கொம்பு வந்து விடுமா?" என்ருன்.

" ஜுலை மாதம் வரையில் கொம்பு வராது" என்ருர் பத்தர்.

ஜோதி மான் குட்டியின் தலையை ஆராய்ந்தான்; கொம்பு வரும் இடங்கள் கடினமாயிருந்தன.

அந்தச் சமயத்தில அவன் தாய் பொன்னி அந்தப் பக்கம் வந்தாள்.

" அம்மா! இன்னும் கொஞ்ச நாளில் குஞ்சலத்துக்குக் கொம்பு முளைத்து விடும். அப்போது எவ்வளவு அழகாயிருக்கும்!" என்ருன் ஜோதி.

" அழகாவது, மண்ணுங்கட்டியாவது; கொம்பு முளைக்கட்டும், இல்லாவிடில், குஞ்சம் முளைக்கட்டும், வம்பு முளைக்காமலிருந்தால் அதுவே போதும்" என்று பொன்னி சலித்துக் கொண்டாள்.

அதற்கு ஜோதி பதில் கூறவில்லை. அது வளர வளர அம்மாவுக்கு அதனிடமுள்ள வெறுப்பும் வளர்ந்தது.

இப்போதெல்லாம் அதைக் கட்டிப் போடுவதால் பயனில்லை. இறுக்கிக் கட்டிஞல் இறந்துவிடும்போல் இழுத்து வெறித்து வியர் வியர்த்து விழி பிதுங்கி மூச்சுத் திணறும்; அப்போது அதை அவிழ்த்து விடாமல் எப்படி

இருக்க முடியும்? அவிழ்த்து விட்டாலோ ஒரே அமர்க்களம்தான்!

அதைப் பட்டியில் பூட்டுவதாலும் பயனில்லை. படல்களை ஒடித்து நாசம் செய்துவிடும்.

இப்போதெல்லாம் அது முரடாய்விட்டது. முன் போல் அது இரவு நேரத்தில் அதிகம் தூங்குவதில்லை; வீட்டில் அங்கு மிங்குமாய்த் திரியும்.

ஒரு நாள் இரவு; திடீரென்று அவன் தாய் வீறிட்டுக் கத்தியதைக் கேட்டு ஜோதி விழித்தான். விஷயமென்ன வென்றால் இருட்டில் அங்கு மிங்குமாய் உலாவிய மான் குட்டி பொன்னியின் முகத்தில் தன் ஈரமான நீண்ட மூக்கை வைத்து முகர்ந்து பார்த்திருக்கிறது. அவள் பயந்து அலறியிருக்கிறாள்.

"அவ்வளவுதான். இரவில்லை, பகலில்லை, இதனால் எப்போதுமே உபத்திரவந்தான். இனி அது இந்த வீட்டுக்குள் வரக்கூடாது; கண்டிப்பாக வரக்கூடாது!" என்று கத்தினாள் பொன்னி.

அதற்குள் மெதுவாய் ஜோதி மான்குட்டியை வாயிற் கதவு வழியாக அப்புறப்படுத்தினான். இல்லையேல் அவன் அம்மா அதை என்ன செய்திருப்பாளோ!

பத்தர் அதுவரையில் பேசாதிருந்தவர் இப்போது படுக்கையிலிருந்தவாறே பேசினார்.

"அம்மா சொல்வது வாஸ்தவந்தான். உன் மான் குட்டி வளர்ந்துவிட்டது. வெறி மிக்க அது, வீட்டுக்குள் வர லாயக்கற்றுவிட்டது" என்றார்.

ஜோதிக்குத் துக்கம் தாளவில்லை, தூக்கமும் வர வில்லை, மான் குட்டி வாயிற்புறம் பனியால் வாடுமே

என்று வருந்தினான். அதன் பரிசுத்தமான மூக்குப் பட்டதற்காகத் தாயார் ஏன் கோபிக்கவேண்டும் என்று அவனுக்கு விளங்கவே இல்லை. கடைசியில் தலையணையை அணைத்தவாறே தூங்கினான். தலையணைதான் மான் குட்டி என்று நினைத்தானோ என்னமோ ?"

## 22

மறு நாள் காலை பத்தருக்கு உடம்பு கொஞ்சம் பரவாயில்லை. அவர் தடியூன்றித் தள்ளாடியவாறே தன் நிலங்களைப் பார்வையிட்டார்.

வரப்புகளில் சுற்றிவிட்டு வீடு திரும்பினார். அவர் முகம் கருத்திருந்தது, ஜோதியைக் கூவினார்.

மான் குட்டி குஞ்சலம் புகையிலைப் படுகையில் ஒரு பெரும் பகுதியைப் பாழாக்கி இருந்தது.

"ஜோதி"—பத்தர் குரலில் கோபமில்லை, வருத்தந்தானிருந்தது; "உன் மான்குட்டி வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை. அறியாமையால் நடந்த இக்காரியத்திற்காக நான் மிகவும் வருந்துகிறேன். இப்படுகைகளைச் சரி செய்வது உன்னுடைய பொறுப்பு. இனியாவது உன் மான்குட்டி முளைகளை முறிக்காதபடி நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும்."

அம்மாவின் கோபத்திற்கும் அப்பாவின் பரிவுக்குமுள்ள வித்தியாசம் ஜோதியைப் பரவசப்படுத்தியது. அவன் மறு வார்த்தை பேசாமல் வேலையிலீடுபட்டான்.

"ஏதோ அசந்தர்ப்பமாய் இப்படி நடந்து விட்டது; இது உன் அம்மாவுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை"—என்றார் பத்தர்.

வேலை செய்யும்போதே ஜோதியின் மனம் பல விதமாக யோசித்தது. குஞ்சலத்தின் குறும்புகளை யெல்லாம் அவன் வெறும் வேடிக்கையாகவே கருதினான். எனினும், பயிர்களை அழிப்பது மன்னிக்க முடியாத பெருங் குற்றம். இனி இப்படி நேராது—நேரக் கூடாது என்று ஜோதி தீர்மானித்தான்.

## 23

மார்ச் மாதம் பிறந்தது—இளவேனிலின் இன்பத் தோடு, மஞ்சள் மல்லிகைகள் மலர்ந்து வாசனை வீசின. பீச்சி மரங்களும், பேரீச்சைகளும் இதழ்கள் விரித்தன. செங்குருவிகள் பகல் பூராவும் பாடின. மாலை நேரத்தில் மற்றைப் பறவைகள் கூச்சலிட்டன. நிலப் புருக்கள் குசலம் பேசிக் குலாவின.

" இறந்த சவமானாலும் இந்த இன்பமான நாளைப் பார்க்க எழுந்து வருவேன் "—என்றார் பத்தர்.

காலையில் சிறு தூறல் தூறியது ; கலங்கிய சூர்யோ தயம் மாலையிலும் கொஞ்சம் மழை பெய்யும் என ஜோஸ்யம் கூறியது. எனினும் பகல் முழுமையும் வெய்யிலால் பரவசமுற்றது.

" பருத்தி, பயிர், புகையிலை எல்லாவற்றிற்குமே ஏற்ற பருவம் இது "—என்று பத்தர் தனக்குத் தானே கூறிக் கொண்டார்.

அந்த வாரம் பூராவும் விதை விதைப்புத்தான் ; பட்டாணிக்கப்புறம் பருத்தி, பருத்திக்கப்புறம் உருளைக் கிழங்கு.

புறவடைப் பக்கமுள்ள காய்கறித் தோட்டத்தைச் செப்பனிட்டனர்.

காலையிலெழுந்து மாலைவரையில் பத்தர் ஓயாது ஒழியாது உழைத்தார். விதைகளெல்லாம் விதைத்தாயிற்று; எனினும் அவருக்குத் திருப்தியில்லை. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். காலம் வெகு அநுகூலமாயிருந்தது. இத்தருணம் தவறினுல் மறுதருணம் வாய்ப்பதரிது. பல முறை ஊற்றுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து பாத்திகளுக்கு நீர் பாய்ச்சுவார்.

வேர்கள் பின்னி மேடிட்ட ஒரு மரக்கட்டை முழைவு. அதைச் சமன் செய்ய அடிமரக் கட்டையில் கயிறு கட்டிக் குதிரையும் அவருமாய் இழுக்கும் போது குடல் வலி தாங்காது பத்தர் குப்புற விழுந்து விட்டார்.

ஜோதியும் பொன்னியும் உதவிக்காக ஓடினர்.

ஆனுல், பத்தர் படுத்தவர் படுத்தவர்தான், பொன்னி டாக்டரை அழைக்க விரும்பினுள்: பத்தர் மறுத்து விட்டார்; இலவச வைத்தியம் செய்து கொள்ள அவருக்கு இஷ்டமில்லை.

ஜோதி கவலையுற்றுன்; பத்துப்பேர் வேலையை உடல் நலிவையும் கவனியாமல் பத்தர் ஒருவராகவே செய்து ஆபத்தை உண்டாக்கிக் கொள்வது அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. எனினும், எப்படியோ எல்லா ஆபத்துகளிலும் தன் தந்தை பிழைத்துக் கொள்வார் என்பதில் அவனுக்குப் பெரு நம்பிக்கை.

அவர் படுத்த அன்று மாலை ஜோதி நிலங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தான்.

" அப்பா! வித்துக்களெல்லாம் நாத்து விட்டு நிற்கின்றன "—என்று சந்தோஷத்தோடு கூறினுன்.

" இந்தச் சமயத்தில் நான் படுத்துவிட்டேனே. நீதான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும். உன்

மான்குட்டி எதையாவது நாசம் பண்ணிவிடப்போகிறது; ஜாக்கிரதையாயிரு ''—என்று எச்சரித்தார் பத்தர்.

" மான்குட்டியை நான் கவனித்துக் கொள்ளுகிறேன், கவலைப்பட வேண்டாம் ''—என்று உறுதி கூறினன் ஜோதி.

" கட்டாயம் அது பயிர்களின் பக்கம் தலைகாட்டக் கூடாது. ஜாக்ரதை! ஜாக்ரதை!''—என்று முடிவாய்க் கூறிவிட்டார்.

அன்றிரவு ஒரு சிறு மழைபெய்தது. காலையில் ஜோதி பயிர்களைக் கண் காணித்து வரச்சென்ருன். அவன் மனம் திடுக்கிட்டது. மான்குட்டி நாத்து முளைகளை அழித்து விட்டிருந்தது. ஒரு பெரும் பகுதியில் வெறு நிலத்தைத் தவிர வேறொன்றும் காணேம்.

அவன் தயங்கித் தயங்கி வீட்டுக்கு வந்தான். அவன் அப்பா அவனைக் கூப்பிட்டார்.

" பயிர்களெல்லாம் எப்படி ''—என்ருர் அவர்.

" பருத்தி நன்ருய் நிமிர்ந்து நிற்கிறது; பட்டாணிப் பயிர்கள் முளை விட்டுள்ளன '' என்ருன் ஜோதி பயந்த வாறே.

" தான்யக் கதிர்கள் ?''

அவன் இதயம் தத்துக்கிளியின் இறக்கைகள் போலத் தத்தடியிட்டுத் தடுமாறியது; தொண்டையை எதுவோ அடைத்துக் கொண்டது. எச்சிலை விழுங்கியவனய் எப்படியோ பேசலானன்.

" அவைகளை என்னவோ சாப்பிட்டுவிட்டது.''

பத்தர் மௌனமாய்ப் பேசாதிருந்தார்; அவரது மௌனம் பயங்கரமாயிருந்தது. கொஞ்ச நேரங் கழித்து அவர் பேசினர்.

" என்ன சாப்பிட்டு விட்டதென்று உனக்குத் தெரியாதா ?"

ஜோதி அவன் அப்பாவைப் பார்த்தான், அப் பார்வை பரிதாபகரமாயிருந்தது.

" ஊம் ! அது கிடக்கட்டும், உன் அம்மாவைக் கூப்பிடு ; அவள் போய்ப் பார்த்து......?"

" அப்பா ! அப்பா ! அம்மாவை அனுப்பாதே "— என்ருன் ஜோதி.

" எப்படியும் அவளுக்குத் தெரியாமல் போகாது, மான்குட்டிதானே பயிர்களை மாய்த்தது ?"

" ஆம்......அப்படித்தான் நினைக்கிறேன்."

பத்தர் அவனைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

" உன்னைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது. உன் மான்குட்டி இப்படி எதையாவது செய்யுமென்பது நான் எதிர்பார்த்ததே. சரி, சரி, நீ போகலாம். உன் அம்மாவை நான் கூப்பிட்டதாகச் சொல்லி விட்டுப் போ "—என்ருர்.

" அப்பா ! அப்பா ! அம்மாவிடம் சொல்லாதே."

" அவளுக்குத் தெரியத்தான் வேண்டும். அவள் உன்னைக் கோபிக்காதபடி நான் பார்த்துக்கொள்ளு கிறேன். போய் வா !"

ஜோதி சமையலறைக்குச் சென்ருன்.

" அம்மா ! உன்னை அப்பா கூப்பிடுகிருர் "— என்ருன்.

ஜோதி வீட்டை விட்டு வெளிப்பட்டான்; மான்குட்டியைக் கூவினுன்; அது அவனிடம் ஓடி வந்தது. முன்னங் கால்களை உதைத்துத் துள்ளிய வாறே அவனை விளையாட அழைத்தது; ஜோதிக்கு விளை யாட்டில் மனம் செல்லவில்லை. மான்குட்டியுடன் நீரூற்றுக்குச் சென்ருன். நீரூற்றைச் சுற்றி மலருஞ் செடியும் மனேகரமாயிருந்தன. எனினும் அவன் அவற்றைக் கவனிக்கவில்லை.

தன் மான்குட்டி செய்த தவறுதலை அவன் நன்கு உணர்ந்தான். எனினும் அதை வெறுக்க அவனுல் முடிய வில்லை.

நெடுநேரம் அங்கேயே இருந்தான்; பின் வீடு திரும் பினுன். அப்போதும் அவன் அப்பாவும் அம்மாவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அம்மாவின் முகக்தில் தோல்வியால் ஏற்பட்ட தோய்வு தோன்றியது. அவள் உதடுகள் இறுக்க மூடியிருந்தன.

"ஜோதி! உன் அம்மாவும் நானும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். நடந்த தீங்கென்னமோ நடந்து விட்டது; நடந்த நாசத்தைச் சரிக்கட்டவும், இனி இத் தகைய தீமை ஏற்படாமல் காத்தலும் நமது கடமை. நீ கஷ்டப்பட்டு வேலை செய்யத் தயார்தானே" என்ருர் பத்தர்.

"அப்பா! நான் எதற்கும் தயார்; பயிர்கள் முற்றி அறுவடையாகும் வரையில் மான்குட்டியைக் கட்டி வைக்கிறேன்" என்ருன் ஜோதி.

"கட்டு மீறிய அதைக் கட்டி வைப்பதால் பய னில்லை, நான் சொல்வதைக் கேள். வீணுன பகுதிகளில்

நீதான் மறுபடியும் விதைக்க வேண்டும் ; நீர் பாய்ச்ச வேண்டும். வேலி கட்டிப் பயிர்களைக் காப்பாற்ற ·வேண்டும். வேலிகட்டப் பரதர் வீட்டுக்குப் போகும் கிளை வழியிலுள்ள கிராதிகளைப் பிளந்து கொண்டு வர வேண்டும்...!"

இவ்வாருகப் பத்தர் வேலைகளைக் கூறிச் செல்லச் செல்ல கூண்டுக்கிளி விடுதலை பெற்றது போன்ற ஒரு உணர்ச்சி ஜோதிக்கு ஏற்பட்டது. அதுவரையில் இருளா யிருந்த அவன் மனம் ஒளியால் விகசித்தது.

அவன் வேலையிலீடுபட்டான். ஓய்வொழிச்சலில்லாது வேலை செய்தான் ; பசி தாகம் என்றில்லாது பாடு பட்டான் ; மூச்சுவிட நேரமின்றி வேலி கட்டுவதில் முனைந்தான்.

வேலி முடியுமுன் விதைத்த விதைகள் முளைத்து விடுமோ என்று பயந்தான். நல்லவேளை விதைகள் இன்னும் மண்ணைக் கீறிக் கொண்டு வெளிப்படவில்லை.

விடியுமுன்பே எழுந்து இருட்டிய பிறகே அவன் ஓய்வு கொள்வான். அவன் பாடுபடுவதைப் பார்த்து அப்பாவே பரிதாபப்பட்டார்.

" குழந்தாய் ! உன் சுறுசுறுப்பைக் கண்டு நான் பெருமை அடைகிறேன். ஆனால், ஒரு மான்குட்டிக்காக நீ உன்னைச் சாகடித்துக்கொள்வது சரியல்ல " என்று அன்புடன் கூறினர்.

" சாகடித்துக் கொள்கிறேனு ? வேலையால் உரம் பெறுகிறேன். இதோ, என் தசைகளெல்லாம் எவ்வளவு வலிமை பெற்றிருக்கின்றன பார்த்தீர்களா ?" என்று பயில்வானைப்போல் முண்டா தட்டிக் காண்பித்தான்.

வாஸ்தவந்தான், வேலி வேலை அவன் உடலுக்கு உரமளித்தது. கையும், காலும், துடையும், தோளும், இடையும், முதுகும் திரண்டுருண்டு சேகேறித் திகழ்ந்தன.

வேலையில் அவனுக்குள்ள உற்சாகத்தைக் கண்டு அவன் அம்மாகூட ஆச்சரியப்பட்டாள்; ஒழிந்த நேரத்தில் அவளும் அவனுக்கு உதவியாய் வேலை செய்வாள்.

இப்படியே நான்கு நாட்கள் கழிந்தன; கொஞ்சம் மழையும் பெய்தது. வேலியும் அநேகமாய் முடிந்து விட்டது; பயிர் வரிசையும் ஒரு அங்குல உயரத்துக்கு நாத்துவிட்டு நின்றது.

ஐந்தாம் நாள் காலை; பயிர் நாத்துக்களில் ஒரு பகுதியைக் காணோம். மான்குட்டி வேலியையும் தாண்டி அவற்றை மண்டிவிட்டது. இதை முதல் முதலாகப் பார்த்தவள் பொன்னிதான்.

"ஐயோ! இந்த முறையும் அது பயிரை நாசம் செய்து, விட்டதே" என்று கத்தினாள்.

"இல்லையம்மா; ஒன்றிரண்டு பத்திகள்தான்" என்று திக்கித் தயங்கினான் ஜோதி.

"எல்லாவற்றையும் காலி செய்ய எத்தனை நேரமாகும்?"

அவள் வீட்டுக்குள் போகத் திரும்பினாள்.

"முன்னால் நான் இடங்கொடுத்தது தப்பாகி விட்டது; இனி, இதற்கோர் முடிவுகட்ட வேண்டியது தான்" என்று உள்ளே போய் விட்டாள்.

ஜோதி வேலியின்மேல் சாய்ந்தவன் சாய்ந்தவன்தான். அவன் உடல் உறைந்தேபோய் விட்டது அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை; உணர்ச்சி ஓய்ந்துவிட்டது.

அந்த மான்குட்டி மோப்பம் பிடித்தவாறே அவனிடம் வந்தது. அதை அப்போது பார்க்க அவன் இஷ்டப்படவில்லை. அவன் நேரே தன் அறைக்குச் சென்று தலையணையில் முகத்தைப் புதைத்தவாறே படுத்து விட்டான்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் அப்பா அவனைக் கூப்பிடுவார். இந்தத் தடவை அவன் அப்பா அம்மா விவாதம் சீக்கிரம் முடிந்துவிடாது.

பல நாட்களாய் அவனைப் பயமுறுத்தி வந்த அந்தப் பரம சங்கடமான கட்டம் வந்து விட்டதென்று அவனுக்குத் தெரியும். எனினும், பத்தர் கூறிய வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

“ மகனே ! என்னென்ன செய்யலாமோ அவற்றையெல்லாம் செய்தாயிற்று. உன்னிடம் இதைப் பற்றிப் பேச வருத்தமாயிருக்கிறது ; எவ்வளவு வருத்தம் என்பதை வார்த்தைகளால் அளக்க முடியாது. என்ன செய்வது ? வேறு வழியில்லை. பயிர்கள் பாழாவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது : நாமெல்லோரும் பட்டினி கிடக்க முடியாது. எனவே உன் மான் குட்டியை வனத்திற் கழைத்துச் சென்று ஒரு மரத்தில் கட்டிச் சுட்டுவிடு ” என்றார்.

## 25

**அ**வன் தோளில் பத்தரின் துப்பாக்கி ; பக்கத்தில் மான் குட்டி ; செய்வதறியாது ஜோதி மேற்குப் புறமாகச் செல்கிறான் ; அவன் இருதயம் நின்று நின்று துடிக்கிறது.

" என்னால் முடியாது, முடியவே முடியாது. என்னை அடித்தாலும் சரி, கொன்றாலும் சரி, என்னால் முடியவே முடியாது " என்று தனக்குள் தானே முனகினான்.

அவன் தன் தாய்தந்தையரோடு பேசுவதாக மனக் கோட்டை கட்டினான். அவர்களைத்தான் அடியோடு வெறுப்பதாகக் கூறினான். அவன் அம்மா கோபத்தால் கொந்தளித்தாள். அப்பா அமைதியாய்ச் சும்மாயிருந்தார்.

அவனுக்குத் துக்கம் தாளவில்லை ; ஒரு சீனப் பெர்ரி மரத்தடியில் புல்லின்மேல் சாய்ந்தான் ; பொருமினான் ; இனிப் பொரும முடியாது என்ற அளவுக்குப் பொருமி னான். மான்குட்டி அவனை முகர்ந்தது, அவன் அதைக் கட்டிக் கொண்டான் : விம்மலும் பொம்மலுமாய் வெகு நேரம் கிடந்தான்.

" என்னால் முடியாது ! முடியாதென்றால் முடியாது தான் !"

அவன் எழுந்தான், தலை சுற்றியது ; அடி மரத்தைக் கட்டிக் கொண்டான். அம்மரத்தில் மலர்கள் மலர்ந் திருந்தன, வாசனை வீசியது ; வசந்தக் காற்றில் மிதந்து வண்டுகள் பாடின.

தான் அழுததை எண்ணித்தானே வெட்கப்பட்டான். அழுவதற்கு இதுவா சமயம். ஆபத்துக் காலத்தில் அழுவது ஆண்மையல்ல. தன் அப்பாவைப்போல் ஆலோசித்து ஆபத்தை விலக்கிக் கொள்ளவேண்டும்.

அவனுக்குப் பத்மன் ஞாபகம் வந்தது. அவன் மட்டும் உயிரோடிருந்தால்...—? அவன் தான் இல்லையே !

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பிச்சனைக் கேட்டால் !......ஆம், பரதர்களைக் கொண்டு மான் குட்டியை ஒரு தோட்டக்காரனுக்கு விற்றுவிட்டால் !

சில தோட்டங்களில் மிருகங்களைக் கண்காட்சியாகக் காட்டுகிறார்களாமே. அப்புறம் தேவையான பணம் சம்பாதித்துத் தன் மானைத்தானே மீட்டுக்கொள்ளலாம்.

இந்த எண்ணம் அவனை ஊக்கியது ; எனவே பரதர்களின் வீட்டை நோக்கி அவன விரைந்தான்.

## 26

லிங்கரையும், அவர் மனைவியையுந் தவிரப் பரதர்கள் வீட்டில் வேறு யாருமில்லை ; எல்லோரும் வியாபாரத்திற்காக வெளியே போயிருந்தனர்.

"வாப்பா வா! திராட்சை வற்றல் வடை செய்திருக்கிறேன். அது உனக்கும் பத்மனுக்கும் பிடித்த பட்சணமாயிற்றே"—என்று லிங்கம்மா அன்போடு வரவேற்றாள்.

"இல்லேம்மா, நான் போகவேண்டும், ரொம்ப வேலையிருக்கிறது"—என்றவாறே போகத் திரும்பினான். திடீரென்று ஒரு அவசர முடிவுக்கு வந்தான் ; வேகத்தோடு திரும்பினான்.

உங்களிடம் ஒரு வருஷ மான்குட்டி ஒன்றிருந்தால், அது பயிர்களை நாசம் செய்தால், அது அவ்வாறு செய்வதைத் தடுக்க முடியாமற்போனால், உங்கள் அப்பா அதைச் சுட்டு விடும்படி சொன்னால், நீங்கள் என்ன செய்வீர்கள் ?"—என்றான் ஜோதி.

இருவரும் அவனை வியப்போடு பார்த்தனர். லிங்கம்மா கினுகினுத்தாள்.

"ஏன் ? நான் உடனே போய்ச்சுட்டு விட்டு மறு வேலை பார்ப்பேன்" என்றார் லிங்கப்பரதர்.

தான் விஷயத்தைச் சரியானபடி விளக்கவில்லை என்று ஜோதி எண்ணினான்.

" நீங்களெல்லோரும் பத்மனிடம் வைத்திருந்த அளவு அந்த மான் குட்டியிடமும் அன்பு வைத்திருந்தால்......?"

" பயிருக்கும் பிரியத்திற்கும் சம்பந்தமில்லை. பயிர் பாழாவதை யாரும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது., பயிரே உயிருக்கு ஊன்று கோல் என்பதை, எல்லோரும் உணர வேண்டும் " என்றார் பரதர்.

" நீ நாமகரணம் செய்ய இங்கு கொண்டு வந்தாயே, அந்த மான் குட்டியா ?"—என்றாள் லிங்கம்மா.

" ஆம், அதே குஞ்சலந்தான். அதை நீங்களே வாங்கிக் கொள்ளுங்களேன் ; பத்மன் உயிரோடிருந்தால் எவ்வளவோ பிரியத்துடன்......?"

" எல்லாம் சரிதான் ; ஆனால் ஒரு வயதான மான் குட்டியை எப்படிக் கட்டுப்படுத்துவது. அது இங்கே தங்குமா. நாலு மைல் அதற்கொரு பிரமாதமா ? உடனே அங்கே ஓடிவந்து விடாதா ? அப்போதும் பயிர்களைப் பாழாகத்தானே போகும் ?" என்றார் பரதர் முடிவான குரலில்.

" சரி, இங்கும் பயனில்லை "—என்பதை ஜோதி உணர்ந்தான். எனவே சலிப்புற்ற நெஞ்சோடு விடை பெற்றுக்கொண்டு வெளிக்கிளம்பினான்.

## 27

ஜோதிக்கு மான்குட்டியோடு வீடு திரும்ப விருப்பமில்லை. ஜானு நகர் சென்று அதை விற்று வர யோசிக்கிறான்.

ஒரு படர் திராட்சைக் கொடியைத் தன் பேனுக் கத்தியால் அறுத்து அதன் கழுத்தில் கட்டிக் கையில் பிடித்துக்கொள்கிறான்.

கொஞ்ச தூரம் போகும் வரையில் மான்குட்டித் தன்னைக் கட்டியுள்ள கொடியைப் பற்றிக் கவலைப்பட வில்லை. பின்னால் முரண்டு செய்ய ஆரம்பித்தது; குரல் வளை பிதுங்கச் சுண்டிச் சுண்டி இழுத்து எகிறிக் குதித்து ஏழாட்டம் காட்டியது.

அவனால் சமாளிக்க முடியவில்லை. கட்டை அவிழ்த்து விட்டான். அதுவும் திருப்தியடைந்ததுபோல் அவனுடன் நடந்து சென்றது.

அவனுக்கு ஒரே பசி; காலை ஆகாரம் செய்யாமல் கிளம்பிவிட்டானல்லவா? அவனுக்கு எங்காவது கண் காணாத தூரத்துக்குப் போனால் போதும் என்று தோன்றியது. வெய்யில் வேறு. பசியும், சோர்வும், வெய்யிலும் தாங்காமல் ஒரு மரத்தடியில் படுத்தான்.

மறுபடியும் அவன் எழுந்தபோது மான்குட்டியைக் காணோம். அதன் அடிச்சுவடுகளின் போக்கை ஆராய்ந் தான்.

எது வேண்டாமென்று எண்ணினானோ அதுவே நேர்ந்துவிட்டது. அதன் சுவடுகள் வீட்டை நோக்கி விரைந்து சென்றுள்ளன.

வேறு வழியில்லை அவனும் வீடு நோக்கித் திரும் பினான்.

## 28

ஜோதி வீட்டுக்கு வரும்போது இருட்டிவிட்டது. சமையலறையில் ஒரு மெழுகு விளக்கு மினு மினுத்தது. நாய்கள் அவனிடம் ஓடி வந்தன. அவைகளை அமைதியா யிருக்கும்படி அவன் தட்டிக் கொடுத்தான்.

மெதுவாய் வெளி முற்றத்திலிருந்து உள்ளே எட்டிப் பார்த்தான். இராச் சாப்பாடு முடிந்துவிட்டது. ஒரு மூலையில் உட்கார்ந்து அவன் அம்மா தையல் வேலை செய்துகொண்டிருந்தாள்.

உள்ளே போகலாமா? வேண்டாமா? என்று நெடு நேரம் தனக்குத்தானே விவாதித்தான். அதற்குள் மான் குட்டி அங்கு ஓடி வந்தது. அவன் அம்மா இதென்ன சப்தம் என ஏறிட்டு நோக்கினுள்.

உடனே அவன் மான் குட்டியை மெதுவாய்க் கூவியவாறே வீட்டின் பின்புறம் சென்ருன். அதே சமயம் சமையலறைக் கதவு திறந்தது. ஒளிப் படல மொன்று வெளி மணலை வரியிட்டது. மறுபடியும் கதவு மூடப்பட்டது.

சமையலறை விளக்கு அணையும் வரையில் ஜோதி காத்திருந்தான். அதுவும் அணைந்தது. அவன் அம்மா அவ்வறையை விட்டு நீங்கக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தான், பின் மெதுவாய்ப் பதுங்கிச் சென்று சமையல் கட்டின் வெளிப்புறத் தாழ்வரையை அடைந் தான். அங்கு மிச்சமாயிருந்த ஒரு இறைச்சித் துண்டை எடுத்துக்கொண்டான். அது முறிந்துபோய்க் கடினமா யிருந்தது. கடிக்க முடியாமல் அதைக் கடித்து உண்டான். உள்ளே சென்று நல்ல ஆகாரத்தை ருசி பார்க்க அவனுக்குத் தைரியமில்லை. தன் சொந்த வீட்டி லேயேதான், களவாட ஒரு வந்த கள்ளனென்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

அன்று அவன் மான் பட்டியிலேயே அதன் அருகில் படுத்துக் கொண்டான் அதை அணைத்தவாறே. பனி யடித்தது, எனினும் அதை அவன் பாராட்டவில்லை.

# 29

மறு நாள் விடிந்து வெகு நேரத்துக்கப்புறந்தான் ஜோதி எழுந்தான். பக்கத்தில் படுத்திருந்த மான்குட்டியைக் காணோம்.

உடம்பெல்லாம் ஒரே வலி லாகவமற்ற ஒரு விறைப்பு. இஷ்டமில்லாவிட்டாலும் வீட்டுக்குள் செல்லத் திரும்பினான்.

வாயிற்படியில் அவன் அம்மா கோபத்தோடு கூச்சலிட்டாள். அங்கு சாத்தியிருந்த அந்தத் துப்பாக்கியை அவள் பார்த்துவிட்டாள். அத்துடன் அதிகாலையிலேயே அவன்மான்குட்டி பயிர்களைப் பாழாக்கியிருந்ததையும் பார்த்துவிட்டாள்.

எப்படியும் அவள் கோபத்தை ஏற்றுத்தானே தீர வேண்டுமென்று அவன் அங்கு சென்றான். அவள் இதுவரையில் இல்லாதபடி எரிந்து விழுந்தாள். கடைசியில்...?

"சரி, சரி, உன் அப்பனிடம் போ, இப்போது அவர் என் கட்சி" என்று உத்தரவிட்டாள்.

அவன் அப்பாவின் அறைக்குச் சென்றான். அவர் முகம் வாடியிருந்தது.

"நான் சொன்னபடி நீ ஏன் செய்யவில்லை?"—அவர் குரலில் கடுமையில்லை.

"என்னால் முடியவில்லை, முடியாது"—என்றான் பையன்.

அவர் தலையணைமேல் தலையைச் சாய்த்தவாறே அவனைத் தன் அருகே வரச் சொன்னார்.

"ஜோதி! நீ உன் மான்குட்டியை இழக்கக் கூடாதென்று, நான் என்னால் ஆனவரையில், எல்லாம் செய்து பார்த்து விட்டேன்."

"ஆமப்பா."

"பயிரில்லாமல் நாம் உயிர் வாழ முடியாது என்பது உனக்குத் தெரியுமல்லவா ?"

"தெரியும்."

"உன் மான்குட்டி உயிரோடிருக்கும் வரையில் அது பயிர்களைப் பாழாக்காதபடி கட்டிப் போட முடியா தென்பது உனக்குத் தெரியாதா ?"

"தெரியும்."

"பின் ஏன் நான் சொன்னபடி செய்யத் தயங்கு கிருய் ?"

"என்னல் முடியாது."

பத்தர் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார்.

"சரி, சரி, நீ உன் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொள், உன் அம்மாவை இங்கு வரச் சொல்லு" என்று கூறினர்.

"சரியப்பா."

ஜோதி தன் அம்மாவிடம் போனன்.

"அப்பா உன்னைக் கூப்பிடுகிருர்."

அப்புறம் அவன் தன் அறைக்குச் சென்றுன் ; கதவைத் தாழிட்டுக்கொண்டான் ; கைகளைப் பிசைந்த வாறே படுக்கையில் அமர்ந்தான்.

முதலில் இருவர் பேசும் கிசுகிசுப்பு, பின்னர் ஒருவரது நடமாட்டம், அப்பால் ஒரு துப்பாக்கி வெடி. அவன் வெளியே ஓடினன். வாயிற்படியில் அவன் அம்மா நின்றுகொண்டிருந்தாள் ; அவள் கையில் இருந்த துப்பாக்கி புகைந்து கொண்டிருந்தது. வேலியருகில் துன்பம் தாளாது அவன் மான் குட்டி துள்ளித் துடித்தது.

"அதைத் துன்புறுத்த நான் விரும்பவில்லை. எனினும் என்ன செய்வது, எனக்குத்தான் நேராகச் சுடத் தெரியாதே" என்றாள் பொன்னி.

ஜோதி மான்குட்டியிடம் ஓடினான். அது அடிபடாத தன் மூன்று கால்களுடன் நொண்டிக்கொண்டே அப்பால் சென்றது. அவனையும் அது தன் எதிரிகளில் ஒருவனாகத்தான் கருதியது போலும். அதன் முன் இடக்கால் துடை கிழிந்து ரத்தம் கொட்டியது.

பத்தர் சிரமத்தோடு படுக்கையிலிருந்து வெளிப்பட்டார். தள்ளாடித் தடுமாறி வாசற் கதவருகில் வந்து தாளாமற் கீழே சாய்ந்தார்.

"இந்த வியாதி மட்டுமில்லாதிருந்தால், என்னால் முடியுமானால் இப்போது நானே சுட்டு விடுவேன். ஜோதி அதன் துன்பத்தை நீக்குவது நம் கடமை. அது சாகத்தான் வேண்டுமானால் துயரப்படாமலாவது சாகட்டும். போ! உடனே அதைக் கொன்று விடு" என்று திணறினார் பத்தர்.

ஜோதி தன் அம்மாவிடம் ஓடினான். ஒரு கணத்தில் அவள் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான்.

"நீ வேண்டுமென்றே அதைக் காயப்படுத்தினாய்; உனக்குத்தான் அதைக் கண்டாலே வெறுப்பாயிற்றே" என்று தாயைச் சீறினான்.

அடுத்த கணம் அவன் அப்பாவிடம் திரும்பினான்.

"அப்பா! நீ என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாய். அதைச் சுடும்படி அம்மாவை ஏவினாய். நான் உன்னை அடியோடு வெறுக்கிறேன். நீ இறந்து போகவேண்டுமென்று விரும்புகிறேன். இனி, நான் உங்கள் முகத்தில் விழிக்கமாட்டேன்."

இப்படிக் கூறியதும் அவன் மான்குட்டியின் பின்னால் ஓடினான்.

பத்தர் எழுந்திருக்க முயன்றார், முடியவில்லை. "என்னைக் கொஞ்சம் பிடித்துக் கொள். என்னால் நிமிர முடியவில்லை" என்று கத்தினார்.

மான்குட்டி பயத்தாலும் துன்பத்தாலும் தூண்டப் பட்டு மூன்றுகால் பாய்ச்சலில் முன்னேறியது; இரு முறை கீழே விழுந்தது. ஜோதி அதன் அருகிற் சென்று, "நான்தான் குஞ்சலம், நான்தான்" என்று கத்தினான்.

அது நிற்கவில்லை; மிரண்டோடியது. வழியெல்லாம் ரத்தம்.

கடைசியில் அது நீரூற்றை அடைந்தது; சிறிது தயங்கியது, கீழே விழுந்து உருண்டது.

ஜோதி அதன் பக்கத்தில் போனான். அது அவனை அதிசயத்தோடு தன் விசால விழிகளை விரித்துப் பார்த்தது.

அவன் துப்பாக்கி நுனியை அதன் பிடறியில் வைத்து கொக்கியை இழுத்தான். அது ஒரு கணம் துடித்தது; மறு கணம் மாண்டு அடங்கி அசைவற்றது.

## 30

ஜோதி கோட்டை வாசற்பாதை வழியாக நடந்து செல்கிறான். அவன் உடல் மரத்துவிட்டது; உணர்ச்சி உறைந்துவிட்டது; கால்கள் மட்டுமே உயிரோடு உலாவு கின்றன.

தான் கொன்ற மான்குட்டியைத் திரும்பிப் பார்க்க அவனுக்குத் தைரியமில்லை. வீட்டை விட்டு எங்காவது ஓடிப்போக வேண்டும் என்ற ஒரே ஒரு எண்ணம்

அவனை இழுத்துச் சென்றது. எங்கு போவது? எப்படிப் போவது—இதையெல்லாம் பற்றி அவன் யோசிக்கவில்லை.

கோட்டை வாசலுக்குப் போய் படகேறி ஆற்றைக் கடக்க வேண்டும்—இப்போதுதான் அவன் திட்டங்கள் தெளிவாகின்றன. அங்கிருந்து ஜாறு நகரம் செல்ல வேண்டும்; கப்பலில் வேலைக்குச் சேர்ந்து கடற்பிரயாணம் செய்ய வேண்டும்.

ஒரு பரிசிலாவது இருந்தால் சௌகரியமாக ஆற்றோரமாய்ப் போய் ஜாறு நகரை அடைந்துவிடலாம்.

சின்ன வயதில் ஒரு நாள் ஒரு பழுதான பழைய துக்காணித் தோணியொன்றில் அவன் தந்தையோடு ஆற்றைக் கடந்தது அவன் நினைவுக்கு வந்தது. அந்தத் தோணி அந்தப் பழைய இடத்தில் இன்னும் இருந்தாலும் இருக்கலாம்.

எனவே, அவன் உப்பானூற்றுக்கு வந்து சேர்கிறான்; ஓரே தாகம். ஊற்று நீரை உறுஞ்சிக் குடிக்கிறான். நல்ல வேளை ஊற்றடியில் அத்தோணி உறங்குகிறது. அதை சிரமப்பட்டு இழுத்து வெளிக் கொணர்ந்தான். ஓட்டை ஓடைசல்களைத் தன் சட்டைத் துணியாலும், தேவதாருப் பிசினாலும் அடைக்கிறான்.

ஓட்டைத் தோணி, ஒடிந்த துடுப்புகள்; ஓட்டத் தெரியாது. அது அக்கரைக்கும் இக்கரைக்குமாக ஊசலாடிக் கொண்டே நீரோட்டத்தில் நெளிந்து செல்கிறது.

அஸ்தமனமாய்விட்டது; இருள் சூழ்கிறது. உப்பானூற்று ஓடையின் முடிவுக்கு வந்துவிட்டான் ஜோதி.

இவ்விடம் அந்த ஓடை ஒரு பெரிய ஆற்றிடை ஏரியில் சங்கமமாகிறது. ஜோதி கரை யேறினான். தோணியை மணலில் இழுத்துவிட்டான். ஒரு கருங்காலி மரத்தடியிற் சாய்ந்து சிறிது இளைப்பாறினான்.

ஏரியின் அந்தப் பக்கம் ஒரு யந்திரப் படகு தெற்கு நோக்கிச் செல்லுகிறது; ஆனால் கூப்பிட்டால் அங்கு குரல் கேட்காது; சைகை செய்தாலும் தெரியாது.

இவ்விடத்திலிருந்தே அந்தப் பக்கம் போகும் ஒரு படகேறி ஜானு நகரை அடையவேண்டும் என்பது அவன் உத்தேசம். அவன் தோணியில் இனியும் பிர்யாணம் செய்வது சரியில்லை.

அன்றிரவுக்குள் அவ்விடம் யாதொரு படகும் கிடைப்பது அரிது. எனவே, சுற்றியுள்ள தழைகுழைகளைக் குவித்து மரத்தடியில் படுத்தான். எங்கோ ஒரு ஆந்தை அலறுகிறது; அவன் உடல் நடுங்குகிறது. பனி பொழிகிறது, குளிர்காற்று வீசுகிறது.

அவன் தந்தையும் கூட இருந்தால் இப்படியா இருக்கும். இதற்குள் குளிர் காய நெருப்பும், உண்ண ஏதாவது உணவும் தயாராயிருக்குமே. ஊம்! அதை எண்ணிப் பயனென்ன? அவனுக்குப் பயம் கிடையாது; துக்கந்தான் தாளவில்லை; அழுதுகொண்டே உறங்கினான்.

மறுநாட் காலை வெய்யில் வந்துதான் அவனை எழுப்பியது. செஞ்சிறைச் சில்வண்டுகள் காற்றில் குடைந்தன. அவன் எழுந்தான், நிற்க முடியாது தள்ளாடினான். உறக்கம் தீர்ந்து, உடலெல்லாம் வலித்தது. பசி வயிற்றைக் கிண்டியது; பல கூரிய கத்திகளைக் கொண்டு குடைவது போல் தசைகள் திரங்கி முறுக்கிக்கொண்டு வயிற்றை வதைத்தன.

தன் வீட்டின் வழக்கமான ஆகாரத்தைப் பற்றி அவன் காய்ச்சற் கலக்கத்தோடு கனவு காணலானான். அக்கனவு அவன் பசியை இன்னும் அதிகமாய்த் தூண்டியது.

இப்போதுதான் அவனுக்குப் பசி இன்னதென்று தெரிகிறது. இந்தக் கட்டத்தில் வீட்டிலிருந்தால் எச்சிலாகாரத்திற்காக நாய்களோடு போட்டியிட்டிருப்பான். வேளா வேளைக்கு கிடைக்கப்போகும் ஆகாரத்தை விரும்பியுண்பது வேறு; வெறும் வயிற்ருேடு வெந்து புழுங்கும் வேதனை வேறு என்பதை இப்போதுதான் உணர்கிருன். ருசிக்கும் பசிக்குமுள்ள வித்தியாசம் இன்றுதான் அவனுக்கு விளங்குகிறது.

அவன் அம்மா, "நாமெல்லோரும் பசியால் மடிவோம்" என்றது இதைத்தானே ?

பசி !...பசி !...பசி !...மிக மிகப் பயங்கரமானது. அது அவன் உடலை முறுக்கி உலைத்தது. தேளின் கொடுக்குகள் வயிற்றில் கொட்டித் திருக்கியது. உணர்வைக் கலக்கி உன்மத்தமாக்கி உலுக்கியது. அவன் ஒருவேளை, ஒரு வயிற்றுச் சோற்றுக்காக எங்காவது சென்று பிச்சை எடுக்கத் தயாரானுன். கரையோரமாகவே ஏதாவது குடிசையாவது தென்படாதா என்று தேடித் திரிந்தான்.

பகல் நேரம் கழிந்தது, பசி காதடைத்தது. மயக்கமாயிருந்தது.

அஸ்தமன சமயம். தூரத்தில் எங்கோ ஒரு குடிசை தென்பட்டது, அங்கு செல்கிருன். அக்குடிசையில் யாருமில்லை. கரடியைப்போல் கள்ளத்தனமாக உள்ளே நுழைகிருன். அலமாரி நிறையக் காலிப் பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனுல், ஆகாரந்தான் கிடையாது.

அவ்வீடு முழுமையும் தேடினுன்; கடைசியில் ஒரு ஜாடியில் கொஞ்சம் மாவிருந்தது—அது என்ன மாவோ? அதைத் தண்ணீரில் கரைத்துக் குடித்தான். அந்தப்

பசியிலும்கூட அதன் சுவை தொண்டை குமட்டியது; எனினும், அதைக் குடித்ததும் அவன் வயிற்றுளைச்சல் ஒருவாறு தீர்ந்தது.

## 31

காலை! நேரங் கழித்துத்தான் ஜோதி கண்விழித்தான். அணில்கள் கறித்துக் கழித்த அரைகுறை அக்ரூட்டுக் கனிகளை ஆவலோடு உண்டு பசியாற்ற முயன்றான்.

ஒரு மந்தாகாரமான மதமதப்பு அவன் உடலைத் தோய்த்துத் துவட்டியது. அவனுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. துடுப்புகளைத் தூக்கக்கூடக் கஷ்டமா யிருந்தது; உடல் மரத்த உணர்ச்சி.

அன்று மாலை வரையில் யாதொரு படகும் காணோம். அப்பால் மூன்று படகுகளைக் கண்டான். அவைகளது கவனத்தை ஈர்க்கக் கத்தினான், கையாட்டினான்—ஒன்றும் பயனில்லை. அவன் மனம் உடைந்துவிட்டது. அழுது கொண்டே திரும்பினான். அடுத்து வரும் படகைத் தடுத்து நிறுத்தி ஏறிக்கொள்ள ஏரி நடுவிற்குச் சென்றால் தான் முடியும் என்று நிச்சயித்தான். காற்றில்லை, தண்ணீரில் கலக்கமில்லை, கடுமையான வெய்யில், கனற்சி அதிகரித்துக்கொண்டே போகிறது. ஜோதிக்குத் தலை சுற்றுகிறது. கண்ணில் பூச்சி பறக்கிறது—பொன் சிறை யிட்ட கரும் புள்ளிகள். காதடைக்கிறது, காதுக்குள் ஏதோ ரீங்காரம் குடைகிறது; அதுவும் நின்று போகி கிறது. அப்பால்—?

அவனுக்கு ஒன்றும் தெரியாது. அடுத்தபடி கண் விழிக்கும்போது ஏதோ இருண்ட பள்ளத்திலிருந்து யாரோ தன்னை மேலே எடுப்பதுபோல் தோன்றுகிறது.

எங்கோ ஒரு குரல் கேட்கிறது; "அந்தப் பெட்டிப் படுக்கையில் அவனைப் படுக்க வையுங்கள்; பாவம் வியாதியஸ்தன் போலிருக்கிறது. அவன் தோணியைப் படகின் பின்னால் கட்டி விடுங்கள்."

ஜோதி தன்னைச் சுற்றிப் பார்த்தான். தான் தபாற் படகில் இருப்பதாக உணர்ந்தான். பலகைச் சுவற்றில் ஒரு விளக்கு தொங்கியது. ஒருவன் இவன் அருகில் குனிந்தான்.

"பையா! என்னதான் நடந்தது, இந்த இருட்டில்?"

பதில் சொல்ல முயன்றான், முடியவில்லை; வாய் வீங்கி உதடுகள் ஒட்டிக் கொண்டன.

மேலே இருந்து அதே பழைய குரல் கேட்டது.

"பாவம், பட்டினி போலும், ஏதாவது ஆகாரம் கொடு."

"பையா! பசிக்கிறதா?"

ஆமென்று ஜோதி தலையசைத்தான். அவனுக்குக் குளிர்ந்த 'சூப்' ரசத்தை ஒரு கோப்பையில் கொடுத்தனர். முதலில் ருசி தெரியவில்லை; பின் ஜோதி ஆவேசத்தோடு ஒரே முட்டாய் அவ்வளவையும் குடித்தான். சிறுசிறு இறைச்சித் துண்டுகள் தொண்டையில் மாட்டிக் கொண்டதைக்கூட அவன் கவனிக்கவில்லை.

"பையா! நீ எப்போது சாப்பிட்டாய்" என்றான் 'சூப்' கொடுத்தவன்.

"தெரியாது" என்றான் ஜோதி.

"பாவம்! இவனுக்கு எப்போது சாப்பிட்டோமென்பதே தெரியவில்லை" என்று மேலிருந்தவனிடம் கூறினான் சூப் கொடுத்த ஆள்.

" நிறைய ஆகாரம் கொடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுங்கள் " என்ருன் மேலிடத்தோன்.

அடுத்தபடி சூப்பும் பிஸ்கத்துகளும் வந்தன. அதையுண்டதும் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டது.

மூன்ருவது தடவையாக சூப்புக் குடித்ததும்—அது ரொம்ப ருசியாயிருந்தது. ஓய்வு ஜோதியின் உடலைத் தழுவியது. நெடுமூச்செறிந்தான். விளக்கு ஊஞ்சலாடியது; இமைகள் மூடி மூடித் திறந்தன. ஜோதி உறங்கிஞன்.

## 32

மறுநாள் காலை ஜோதி கண் விழித்தபோது அச்சிறு தபால் கப்பல்—அது ஒரு நீராவி யந்திரப்படகு—ஒரு துறையில் நின்றது.

ஒரு கணம் தான் தன் பழைய தோணியில் இருப்பதாக நினைத்தான். அது எங்கோ தன்னை இழுத்துக் கொண்டு செல்வதாகத் தோன்றியது. பயந்தவாறே எழுந்தான். கண்களைக் கசக்கிக் கொண்டான். முந்தின நாள் சூப்பும் பிஸ்கோத்துகளும் ஞாபகம் வந்தன. வயிற்றில் இப்போது உளைச்சலில்லை. மெதுவாக மேல் தட்டுக்குச் செல்லும் படிகளில் ஏறிஞன்.

காலை நேரம், கதிரொளி கப்பலைக் கவ்வியிருந்தது. தபால் பைகளைக் கரையில் இறக்கிக் கொண்டிருந்தனர். அது வாலிசா நதிக்கரை என்பதை ஜோதி அடையாளம் கண்டு கொண்டான். இச் சமயத்தில் கப்பித்தான் அவனைக் கண்டு அன்புடன் விசாரிக்கலாஞன்.

" பையா! நீ பெரிய ஆபத்திலிருந்து தப்பினாய்: உன் வீடு எங்கே?" என்றான்.

" பத்தர்கள் தீவில்."

" பத்தர் தீவா? அப்படி ஒரு தீவு இருப்பதாக நான் கேள்விப்பட்டதேயில்லையே!"

இதைக் கேட்டதும் துணைக்கப்பித்தான் இடையிற் புகுந்து விளக்கம் கூறினான்.

" அது ஒரு தீவல்ல. வரண்ட நிலக் கடலில் வனப் பாங்கான ஒரு திட்டு. தீவு என்பது வெறும் உபசார வார்த்தை. இங்கிருந்து செல்லும் பாதை வழியே பதினைந்து மைல் போனால் பத்தர் முழையை அடைய லாம்" என்றான் அவன்.

" அப்படியானால் நீ இங்கு இறங்க விரும்புகிறாயா? இங்கு உன்னைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா?" என்றான் கப்பித்தான்.

"ஆம்" என்று தலையசைத்தான் ஜோதி.

" வீட்டை விட்டு ஓடிவந்து விட்டாயா? உன்னைப் போன்ற பையனாயிருந்தால் நான் ஒருக்காலும் உற்றார் பெற்றாரை விட்டு ஓடமாட்டேன். உன் தாய் தந்தையர் களைத் தவிர உன் போன்றவர்களைப் பற்றி ஒருவரும் கவலைப்பட மாட்டார்கள். எனவே, இனிமேல் இப்படி யெல்லாம் செய்யாதே" என்று கடுமையாக, எனினும் கனிவு குறையாதபடி உபதேசித்தான்.

அப்புறம் அவன் ஜோதியைக் கரையில் இறக்கினான். அவனது தோணியையும் அங்கேயே விட்டு விட்டனர்.

" விசி"லடித்தது, கப்பல் கிளம்பித் தன் வழியே போய்விட்டது.

# 33

தனியே விடப்பட்ட ஜோதி மேற்குப்புற பாதை வழியே நடக்கலானான். அவன் யாதொரு திட்டமும் போடவில்லை, பத்தர் தீவு அவனைக் காந்தம்போல் இழுத்தது.

ஆனால், வீட்டுக்குப் போனால் தன்னை ஏற்றுக்கொள் வார்களா? அவர்களுக்குத் தன்னால் பயனென்ன? ஆபத்துகள்தான் அதிகம்.

தன் வீட்டின் சமையல் கட்டுக்குச் சென்றால் அவன் அம்மா மான் குட்டியை விரட்டியதுபோல் தன்னையும் ஒருவேளை விரட்டினால்...? தன்னால்தான் யாருக்கும் யாதொரு பயனும் கிடையாதே; வீணாய்த் திரிவது, விளையாடுவது, வெட்டிச் சோறு கொட்டிக் கொள்வது. இவை தானே அவன் வேலை. எத்தனை நாளைக்குத் தன் உபத்திரவத்தைப் பொறுப்பார்கள். அவன் மான் குட்டியோ அந்த வருஷத்துப் பயிர்களை அநேகமாய் அழித்துவிட்டது. எனவே தான் வருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்தினான்.

அவன் பாதை போனபடி, கால் போனபடி தன்னை மறந்து போய்கொண்டே இருந்தான்.

வெய்யில் கடுமையாயிருந்தது. பனிக்காலம் தீர்ந் திருக்கவேண்டும். ஒரு வேளை சித்திரை பிறந்து விட்டதோ என்னமோ?

அதோ பறவைகள் மரக்கிளைகளில் குஷியாகப் பாடிக் கொண்டிருக்கின்றன. வசந்த காலம் வந்துவிட்டது.

நேர்ப் பாதையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் கிளைப்பாதை அருகில் அவன் சிறிது இளைப்பாறலானான். இங்குள்ள குறளிச் செடிகள் வெய்யிலில் வெதும்பின.

அவனுக்குத் தலை வலித்தது, மறுபடியும் எழுந்தான். வெள்ளி வனத்தை நோக்கி நடந்தான். வீட்டுக்குப் போகாவிட்டாலும் வெள்ளி வன ஊற்று நீரில் ஸ்நானம் செய்ய விரும்பினான்.

கிழக்கே செல்லச் செல்ல வன நிழல்கள் நெருங்கி வளமுற வளர்ந்து மனோகரமாயிருந்தன. எனவே அருகில் எங்கோ ஜலம் இருக்கவேண்டும்.

இப்போது அவன் வெள்ளி ஊற்றுப் பாதைக்கு வந்துவிட்டான். ஒரே தாகம்—நாக்கு அண்ணத்தோடு ஒட்டிக் கொள்ளுகிறது.

அவன் வெள்ளி ஊற்றின் மணற் சரிவில் விழுந்து புரண்டு, ஊற்றோரம் வந்து, அதன் தெள்ளிய நீரை வாயிட்டுறுஞ்சினான். ஊற்று அவன் முகத்தின் மேல் பொங்கிப் பொங்கி அலை வரியிட்டது,

தன் வயிறு வீங்கும் வரையில் நீரை மண்டினான்; அசதி ஏற்பட்டது; மல்லாந்து கண்ணை மூடினான், ஓய்வின் உறக்கத்தில் ரொம்ப நேரம் ஒடுங்கியிருந்தான்.

முன்னும் சரி, பின்னும் சரி எங்கும் போக அவன் விரும்பவில்லை. ஒரு கட்டம் முடிந்துவிட்டது, மறு கட்டம் ஆரம்பமாகவில்லை.

மாலைக் காலம். மேலைத் திசையை கதிர் அணுகும் நேரம். அவன் கண் விழித்தான், எழுந்தான்; அவன்மேல் மந்தாரையின் மென்மலர் ஒன்று விழுந்து கிடந்தது.

“இது சித்திரை வசந்தந்தான்” என்று தனக்குள் தானே முணுமுணுத்தான்.

போன சித்திரைக்கு இங்கு வந்து பனைமடல் நீராடி செய்து விளையாடியது அவன் நினைவுக்கு வந்தது. அந்த சந்தர்ப்பத்தின் ஒவ்வொரு கட்டமும் இன்றைக்கு நடப்பதுபோல் அவன் மனத்தில் ஊடாடின.

எழுந்தான்; அந்தப் பழைய இடத்தை நோக்கிச் சென்றான். அங்கு போனால் தன் இழந்த இன்பத்தைக் காணலாமென்று அவனுக்குள் எதுவோ கூறியது.

அந்தப் பழைய நீராடி சிதைந்து போய்விட்டது; வெள்ளத்தின் வேகம் அதன் விறுவிறுக்கும் விசிறிச் சுழல் விசையை வீணாக்கிவிட்டது.

"இப்போது ஒரு புதிய நீராடி செய்தாலென்ன?" என்று எண்ணினான்.

பனை மடல்களை வெட்டினான், சீவிச் சீவிச் சீராக்கினான். குச்சிகளை ஒடித்துத் தண்டு செய்தான்; மடற் துடுப்புகளை அதில் பொறுத்தினான்; நீரோட்ட வாக்கில் பாறையின் நெருக்கில் அதைப் பதித்தான். மேலே கீழே, கீழே மேலே நீராடி சுழன்றது: நீர் முத்துக்கள் சிலிர் சிலிர்த்தன. ஆனால், அதன் சுழற்சியில் அந்தப் பழைய பரவசம் ஏற்படவில்லை; புதுமையில்லை, இன்பம் ஏற்படவில்லை, என்னமோ, நீராடி என்பதெல்லாம் நீரை மடற் துடுப்புகள் தட்டுவதுதானே என்று சர்வ சாதாரணமாய் தோன்றியது.

தான் செய்த நீராடியைத் தானே தன் காலால் உதைத்துச் சிதைத்தான். மடல்கள் நீரோட்டத்தில் சிக்கி மடிந்தன.

அவனுக்கு எங்கும் எதிலும் புகலிடமில்லை. மணலிற் படுத்து அழுதழுது விம்மினான். இந்த உலகத்தில் தன்னை விரும்புபவர்கள் யாருமேயில்லை.

இல்லை, அவன் அப்பா பொன்னன் பத்தர். அவரைப் பார்க்கவேண்டும் — அவரைப் பார்க்காமல் அவனால் எப்படி இருக்க முடியும்?

எழுந்தான், ஓடினான், அப்பாவைக் கூவியவாறே ஓடினான்.

ஒருவேளை அவர் அங்கே எங்காவது இருந்தாலும் இருக்கலாம். பயிரும் அழிந்து, மகனும் மறைந்த வருத்தத்தில் ஒருவேளை எங்காவது போயிருப்பாரோ ? தான் அவரைப் பார்க்க முடியாது போய்விடுமோ ? அல்லது ஒருவேளை செத்துப் போயிருப்பாரோ ?

அவனுக்குத் துக்கம் தாளவில்லை.

"அப்பா ! அப்பா ! இதோ வருகிறேன், எனக்காக காத்திரு" என்று தேம்பினான்.

## 34

வீட்டுக்கு அரை மைலிருக்கும்போதே இருட்டி விட்டது. அந்த இருட்டிலும் பழைய பழகிய இடங்கள் தெளிவாய்த் தெரிந்தன. இருளோடு நிற்கும் இருளாய் வீட்டையடுத்துள்ள தேவதாரு மரங்கள் தலை தூக்கின.

வீட்டு வெளி வாயிலைத் தாண்டி ஜோதி முற்றத்துக்கு வந்துவிட்டான். பக்கவாட்டில் சென்று ஒரு பலகணி வழியாய் உள்ளே பார்த்தான்.

கெகிடியில் ஒரு தாழ்ந்த தணல் தழைந்தது. அதன் அருகில் அவன் அப்பா கூனிக் குறுகியவராய் உடல் முழுதும் போர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். ஒரு கை அவரது கண்களின்மேல் படிந்திருந்தது.

ஜோதி கதவருகிற் சென்று அதன் தாழை மெதுவாய்க் கழற்றித் திறந்து கொண்டு உள்ளே அடி எடுத்து வைத்தான். பத்தர் தலையை நிமிர்த்தினார்.

"யாரங்கே ?"

"நான்தான் !"

பத்தர் தலையைத் திருப்பி அவனைப் பரவசத்தோடு பார்த்தார்.

" ஜோதி !"

அவன் அப்பாவின் அருகில் சென்றான்; அவர் தன் கைகளை நீட்டி அவனை அணைத்துக் கொண்டார்.

" மகனே—என் மனத்தில் பால் வார்த்தாய்; சௌக்கியந்தானே !" என்றார் பரிவாக.

ஜோதி தலையசைத்தான்.

" என் குழந்தை இறந்து போகவில்லை, சௌக்கியமாயிருக்கிறான். என்னிடம் வந்து விட்டான் "—அவர் முகத்தில் தெய்வீகமான ஓர் ஒளி தாண்டவமாடியது. " கடவுள் பெரியவர்—கருணை உடையவர்."

ஜோதியை அவர் வெறுக்கவில்லை—அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. அவர் அவனை விரும்புகிறார். என்ன ஆச்சரியம் !

" அப்பா ! வீட்டுக்கு வராமலிருக்க என்றால் முடியவில்லை."

" எப்படி முடியும் ?"

" அப்பா ! என்னை மன்னித்து விடுங்கள்; நான் தங்களை கண்டபடி ஏசிவிட்டேன் ! உங்களை வெறுப்பதாக......?"

" அதனாலென்ன ? குழந்தையா யிருக்கும்போது எல்லோரும் குழந்தைத்தனமாகப் பேசுவது சகஜந்தானே. அது கிடக்கட்டும். நீ சாப்பிட்டாயா ?"

" ஒரே ஒரு வேளைதான் சாப்பிட்டேன், அதுவும் நேற்றிரவு !" என்றான் ஜோதி.

" ஒரு வேளைதான் சாப்பிட்டாயா ?" அவர் கண்கள் நெகிடித் தீ வெளிச்சத்தில் பளிச்சிட்டன. அப்போது

உனக்குத் தெரிந்துவிட்டது. பசியின் முகத்தை நீ பார்த்து விட்டாய். அது கடுங்கால் கரடியின் முகத்தைக் காட்டிலும்......?"

"பயங்கரமாயிருந்தது."

"சரி சரி, முதலில் சாப்பிடு. அதோ அந்த அலமாரியில் பிஸ்கோத்துகள் இருக்கின்றன. பக்கத்திலேயே தேன் ஜவ்வும், அடுத்தாற்போல் பாலும் இருக்கின்றன."

ஜோதி நின்றவாறே ஆகாரம் செய்தான், ஆவலாய், ஆவேசத்தோடு சாப்பிட்டான். அவன் சாப்பிடுவதைப் பத்தர் அக்கறையோடு கவனித்தார்.

"ஊம்! இவ்வளவு கஷ்டத்துக்குப் பிறகுதான் நீ உண்மையை அறிய முடிந்ததென்பதற்காக நான் வருத்தப் படுகிறேன்" என்றுர் அவர்.

"அம்மா எங்கே அப்பா?" என்று பேச்சை மாற்றினுன்.

"அவள் பரதர்கள் வீட்டுக்குப் போயிருக்கிருள். தான்யங்களை விலை பேச. அழிந்த பயிர்களுக்குப் புதுப் பயிரிட அவள் உத்தேசித்துள்ளாள். பரதர்களைப் பார்ப்பது தன் பெருமைக்கே இழுக்கென்று நினைப்பவள் சந்தர்ப் பத்தை உத்தேசித்து வேறு வழியில்லாது அங்கே போனுள்.'

ஜோதி ஆகார அலமாரியைச் சாத்தித் தாழிட்டான்.

"நீ எங்கெல்லாம் போனுய்?"

"ஆறேறிச் சென்றேன். கடல்மீது செல்ல ஆசைப் பட்டேன்."

"அப்படியா!" என்றுர் பத்தர் அலுப்போடு.

அந்தக் கம்பளி மூட்டத்தில் அவரைப் பார்த்தால் கூனிக் குறுகிய மனிதக்குஞ்சு போல் தோன்றியது.

" அப்பா ! என் விஷயமிருக்கட்டும். உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது ?" என்ருன் ஜோதி கவலையுடன்.

" எப்படி இருக்கிறது ? இறந்து போனுல் பரவா யில்லை " என்ருர் சலிப்புடன்.

" அப்பா ! அப்பா ! அப்படியெல்லாம் சொல்லாதே. என் வேலை முடிந்ததும் நான் போய் டாக்டரைஅழைத்து வருகிறேன் " என்ருன்.

பத்தர் அவனை உன்னிப்பாய்ப் பார்த்தார்.

" நீ மாறிவிட்டாய் ; குழந்தையாய் வெளிப்பட்டாய். உலகுணர்ந்த வாலிபனுய்த் திரும்பியிருக்கிருய். தவறு களுக்கேற்ற தண்டனையையும் அடைந்துவிட்டாய்."

" ஆமாமப்பா !"

" இப்போது மனிதனுக்கு மனிதனுக நான் உன் னுடன் பேசுகிறேன். பெரியவன் சிறியவனிடம் பேசுவதுபோலல்ல. நான் உன்னைக் கைவிட்டுவிட்டேன் என்று நீ நினைத்தாய். ஒவ்வொருவனும் எப்போதாவது உண்மையை அறியத்தான் வேண்டும். அதை நீ ஒரு வாறு அறிந்துகொண்டாயென்றே நினைக்கிறேன். நான் மட்டுமல்ல, நாம் கொன்ற உன் மான்குட்டி மட்டுமல்ல வாழ்க்கை எல்லோரையுமே சோதனை செய்கிறது !"

ஜோதி தன் தந்தையை வியப்போடு நோக்கி ஆமென்று தலை அசைத்தான்.

" உலகத்தில் மனிதர்கள் எப்படி வாழ்கிருர்கள். என்பது உனக்குத் தெரியும். பலர் வஞ்சனையும் புரட்டும் நிறைந்தவர்களாயிருப்பதையும் நீ அறிவாய். மரணம் என்ன என்பதையும் நீ பார்த்திருக்கிருய் ; பசிக்கொடுமை

யையும் உணர்ந்திருக்கிருய். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாள் முழுமையும் லேசாகவும், இன்பமயமாகவும் கழியவேண்டும் என்றுதான் கனவு காண்கிருன். வாஸ்தவத்திலேயே வாழ்க்கை வளம் மிகுந்ததே, வலிமை கூடியதே, மகிழ்ச்சி நிறைந்ததே, எனினும் லேசானதல்ல, சுலபமானதல்ல, வேடிக்கையானதல்ல வாழ்க்கை மனிதனைத் தாக்கிக் கீழே வீழ்த்துகிறது. விழுந்தவன் மறுபடியும் எழுந்து இன்பங் காண்கிருன். மறுபடியும் விழுகிருன், மறுபடியும் எழுகிருன்; இப்படியேதான் விழுவதும், எழுவதுமாய்க் காலங் கடத்துகிருன்.

"உனக்கு வாழ்க்கையின் கஷ்டங்கள் தெரியக் கூடாதென்று நான் நினைத்தேன். என் வாழ்வைப்போல் இன்றி உன் வாழ்வாவது சுலபமாயிருக்க வேண்டுமென்று எண்ணினேன். தன் சிறு குழந்தை, வாழ்வின் துன்பங்களை ஏற்பதை எந்தத் தந்தையும் விரும்புவதில்லை. எவ்வளவு நாட்களுக்கு முடியுமோ அவ்வளவு நாட்கள் வரை துயரத்தை அறியாதபடி உன்னைக் காப்பாற்ற விரும்பினேன். உன் மான் குட்டியோடு நீ விளையாடுவதை நான் தடுக்க நினைக்கவில்லை. உன் தனிமையைப் போக்க அது எவ்வளவு உதவியது என்பது எனக்குத் தெரியும். ஆனல், ஒவ்வொரு மனிதனும் தனியானவனே. மனிதன் தனியாய்ப் பிறக்கிருன். மற்றவர்களிடையிலுங் கூடித் தனியாய்த்தான் வளர்கிருன். தனியாய்த்தான் சாகிருன். தனிமை அவனுடைய சொந்தச் சொத்து. அதை விட்டு அவன் நீங்க முடிவதில்லை. இந்த நிலையில் மனிதன் என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது? இன்பத்தைப் போல் துன்பத்தையும், தொல்லைகளையும், வீழ்ச்சிகளையுங் கூட வாழ்க்கை தரும் பரிசுகளென்று எண்ணித் தன் கடமையைச் செய்பவனே உண்மையான மனிதன். துன்பத்திற்குப் பயந்து ஓடி ஒளிபவனல்ல."

" அப்பா ! வீட்டை விட்டு ஓடியதற்காக நான் உண்மையாகவே வெட்கப்படுகிறேன்" என்ருன் ஜோதி.

பத்தர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

" குழந்தாய் ! நீ பெரியவனுகி விட்டாய். வாழ்க்கையை எத்துறையிற் சென்று வளம் படுத்துவதென்பதைத் தேர்ந்து கொள்ள உனக்கு வயது வந்துவிட்டது. கப்பலேறிக் கடலை உழுவதோ—ஏர் பூட்டி நிலத்தை உழுவதோ—அது உன் இஷ்டத்தைப் பொறுத்தது. ஆனல், நீ இங்கேயே இருந்து, இந்த நிலங்களைப் பயிரிட்டு செம்மை செய்தால் அது, எனக்கும் பெருமையாயிருக்கும். இங்கு வரும் எந்தப் பெண்ணும் தண்ணீருக்குத் தவிக்காதபடி இவ்விடத்தில் நீ ஒரு கிணறு வெட்டினல் என் பெருமைக்கு அளவே இருக்காது. உனக்கு இஷ்டந்தானு ?"

" இஷ்டந்தானப்பா !' என்ருன் ஜோதி.

" கையடித்துக் கொடு."

தன் கண்களை மூடியவாறே தன் தந்தையுடன் ஜோதி கைகுலுக்கினன். நெகிடிபின் நெருப்பு அணைந்து விட்டது ; அதைக் கிளறி விட்டான் அவன்.

" ஜோதி ! உதவியில்லாமல் எழுந்து நடந்து போக என்னல் முடிவதில்லை ; இந்தா, இப்படிக் கொஞ்சம் தாங்கிக் கொள். உன் அம்மா இன்றிரவு வருவாளென்று தோன்றவில்லை " என்ருர் பத்தர்.

ஜோதி தன் தந்தையைத் தோளில் சாய்த்தவாறே மெதுவாய் அவரது படுக்கையறைக்கு அழைத்துச் சென்ருன். அவரைப் படுக்க வைத்துக் கம்பளிகளால் போர்த்தினன்.

" குழந்தாய் நீ திரும்பி வந்தது எனக்கு உயிரே திரும்பி வந்தமாதிரி, நீ போய்த் தூங்கு. வாழ்வில் ஒரே ஒரு விதி 'போரிடு' என்பதுதான்" என்றார் பத்தர்.

"போர்" என்ற சொல் அவன் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியது.

"அப்பா! 'போரிடு' என்று அதையே திருப்பித் தன் அப்பாவுக்கும் சொன்னான்.

தன்னறைக்குச் சென்றான்; கதவைத் தாழிட்டுக் கொண்டான்; தன் கிழிந்த உடைகளைக் களைந்தெறிந்தான். அகண்ட அந்தப் படுக்கையில், மென்மையான போர்வைகளின் அணைப்பில் அப்பாடா என்று கால் நீட்டிப் படுத்தான்.

காலையில் சீக்கிரமாய் எழுந்திருக்க வேண்டும்; பால் கறக்க வேண்டும், விறகு பிளக்கவேண்டும், விதை விதைக்க வேண்டும், ஓய்வொழிச்சலின்றி வேலை செய்ய வேண்டும்—இனி மான்குட்டி குஞ்சலம் அவன் வேலைக்குத் தடையாய் வராது. அவன் அப்பாவை இனி வேலை செய்ய விடக்கூடாது, இந்த வேலை யென்ன? பெரிய பிரமாதமா? அவன் ஒருவனாகவே செய்ய முடியாதா என்ன?

கொஞ்ச நேரம் கழிந்ததும் அவன் மனம் ஏதோ சப்தத்தை எதிர்பார்த்தது. அது வேறொன்றுமில்லை, அவன் மான்குட்டியின் ஆரவாரந்தான். அது வெளியிற் திரிந்து பின் அறைக்கு வரும் அரவத்தை அவனே அறியாமல் அவன் மனம் நாடியது. இனி அதன் ஒலியை அவன் என்றுமே கேட்க முடியாது.

அவன் அம்மா அதன் சவத்தைப் புதைத்திருப்பாளோ? அல்லது கடுங்காக்கைகள் அதன் இறைச்சியைக் காலி செய்திருக்குமோ?

குஞ்சலம்! அந்த மான்குட்டியைத் தவிர இனித் தன் வாழ்நாளில் எதையும் ஆண், பெண், குழந்தை எதையும் காதலிக்க முடியாதென்று அவன் உறுதியாய் நம்பினான். தன் வாழ்நாள் முழுவதும் தனிமையாகவே கழியும் என்று எண்ணினான். இருந்தாலும் மனிதன் இவைகளுக்கெல்லாம் பயப்படக் கூடாது. தனிமை தான் தன் பங்கென்று கடமையைச் செய்ய வேண்டும்.

அன்றிரவு அவன் தூங்குமுன் அல்லது தூக்க ஆரம்பத்தில் கூறிய வார்த்தை 'குஞ்சலம்' என்பதுதான்.

இல்லை, குஞ்சலம் என்று கூவியது அவன் குரலல்ல: ஒரு சிறுவனின் குரல்.

ஆம். வன ஊற்றுக்குப் பக்கத்தில், செம் மந்தாரைப் புதர் அருகில், கருங்காலி மரத்தடியில் பக்கம் பக்கமாக ஒரு பையனும் மான்குட்டியும் ஓடிய கனவு தீர்ந்துவிட்டது —திரும்பி வராதபடி தீர்ந்துவிட்டது.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957

★

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI